உள்ளம் என்றும்
உனதல்லவோ..!
ரமணிசந்திரன்

உள்ளம் என்றும் உனதல்லவோ

ரமணிசந்திரன்

அத்தியாயம் - 1

அலாரம் அடித்து எழும்பும்போதே உதயாவின் உள்ளே லேசாக வலித்தது,

இரவில் அவள் தூங்கும்வரை தந்தை வரவில்லை, குடித்துவிட்டு எங்கே விழுந்து கிடக்கிறாரோ?

எவ்வளவோ நல்ல மனிதர்தான் ,அன்பான தந்தைதான், அவளுக்காக உயிரையும் விடக் கூடியவரே! ஆனால் இந்தக் குடிப்பழக்கம்?

அவர் இவ்வளவு அன்பு காட்டாமல் இருந்தால் கூடப் பரவாயில்லை, இந்தக் கெட்ட பழக்கத்தை அவர் விட்டுவிட்டால் அது அவளுக்குப் போதுமே!

எந்த விபத்துக்கும் ஆளாகாமல் ஒழுங்காக வீடு வந்து சேர்வாரா என்று தினமும் கவலைப் படாமல் இருப்பதே பெரிய சுகமாக இருக்குமே! அதை விட்டு. தினமும் அவளுக்கு ஐஸ்கிரீம் வாங்கி வந்து ஃபிரிஜ்ஜில் வைப்பதில் அவளுக்கு என்ன சந்தோஷம் ஏற்படக் கூடும்?

ஏதோ யோசனை தோன்ற அடுப்பை விட்டு விலகி. ஃப்ரிஜ்ஜைத் திறந்து பார்த்தால், மாம்பழ ஐஸ் ஸ்டிக் ஒன்று இருந்தது, அப்படியானால் தந்தை இரவு வந்துவிட்டாரா? எதிர் படுக்கையறைக் கதவு இரவில் அவள் பாதி திறந்து வைத்தது போல அப்படியேதானே இருந்தது? ஒருவேளை. ஐஸ் ஸ்டிக்கை வைத்துவிட்டு மறுபடியும் குடிக்கப் போய்விட்டாரா?

குடிப்பது என்று நினைத்துவிட்டால். கள்ளப் பூனை மாதிரி சத்தமே இல்லாமல் கிளம்புவார், அவரது மூளை பயங்கரமாக வேலை செய்யும், அதாவது குடிக்கு அடிமையாகிப் போன மூளை அவ்வளவு திறமையாக அவரை வேலை செய்ய வைக்கும்!

பாதி இரவுக்கும் மேல் எந்தப் பாவி மதுக்கடையைத் திறந்து வைத்திருப்பானோ?

அந்த மட்டும் கதவைத் திறந்து போட்டுவிட்டுப் போகமாட்டார், வீட்டில் தனியே இருக்கும் மகளுக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்துவிடக் கூடுமோ என்கிற அச்சம்! எந்தக் குடி மயக்கத்தில் இருந்தாலும். அது மட்டும் அவருக்கு எப்போதும் நினைவிருக்கும்! மகளுக்கு ஆபத்து நேர விட்டுவிட மாட்டார்!

சமையல் வேலைக்கு இடையே இன்னொன்று தோன்ற. ஹால்

என்று சொல்கிற சின்ன உட்காரும் அறைப் பக்கம் சென்று எட்டிப் பார்த்தாள்,

அவளது சந்தேகம் சரியாகி. அங்கே போடப்பட்டிருந்த பிரம்பு நாற்காலி செட்டுக்கும் சுவருக்கும் இடையே கோணலாக விழுந்து சுருண்டு கிடந்தவர் அவளுடைய தந்தை சிவகுருவேதான், ஐஸ் ஸ்டிக்கை ஃப்ரிஜ்ஜில் வைக்கும் வரை சுய உணர்வைக் கட்டிக் காத்தவருக்கு அதற்கு மேல் முடியாது போயிற்று போலும், அவர் குடித்திருந்த மதுவின் தள்ளாட்டம் அவரைக் கொண்டுசென்று போட்ட இடம் இது, அவர் கிடந்த நிலை அவளுக்கு வேதனையாக இருந்தது, ஆனால் இது போன்ற தருணங்களில். அவரை எழுப்பி ஒழுங்ககப் படுக்க வைக்க அவள் முயன்றால். வெகுவாகக் கூசிப் போவார், அப்புறம் அந்தக் கூச்ச உணர்வை மறக்கடிப்பதற்காகப் பகலிலேயே "தண்ணி"யடிக்கப் போய்விடுவார்,

அதற்கு தந்தை இப்படியே கிடப்பதே மேல்!

ஒரு பெருமூச்சுடன் சமையல் அறைக்குப் போய்த் தன் வேலையைத் தொடர்ந்தாள் அவள், தந்தைக்குக் காலைப் பலகாரத்தை மூடி வைத்துவிட்டு. மதியத்துக்கு இருவருக்கும் உரிய பாத்திரங்களில் எடுத்து வைத்தாள் மடமடவென்று காலை உணவை விழுங்கிவிட்டு. தன் மதிய உணவை எடுத்துக்கொண்டு அவள் கிளம்பிவிட்டாள்,

அங்கே அலுவலகத்தில் வேலை நிறைய இருக்கிறதே! அவளையே நம்பி இருக்கும் அவளுடைய பாஸ் பாலனும் அவருடைய மனைவி மஞ்சரியும். அவளுடைய அடுத்த அவசியம்! அவள் போய்த்தான் அலுவலகக் கதவையே திறக்க வேண்டும்!

முன்பெல்லாம் அவர்களே முதலில் வந்துவிடுவார்கள், ஆனால் இப்போது இரண்டு மாதங்களாக. "ஆல் இன் ஆல்" என்பார்களே. அது போல எல்லாம் வசுமதிதான்,

அலுவலகத்தின் கதவைக் காலையில் திறப்பதில் இருந்து வேலை முடிந்து. மறுநாளைக்கு உரிய குறிப்புகளோடு எல்லாம் அடுக்கி வைத்துவிட்டுக் கதவை மூடிச் செல்வது வரை. முழுக்க முழுக்க அவளேதான்,

எனவே காலையில் சீக்கிரமாக வந்து அலுவலகத்தைத் திறப்பதில் வேலையைத் தொடங்குகிறவள். இரவு எட்டு மணிக்குக் கதவைப் பூட்டுவதும் உதயாதான்,

காரணம். மணமாகி ஐந்து ஆண்டுகளுக்குப் பின். மஞ்சரி

இப்போது கருவுற்றிருந்தாள், பாலன் அவளைத் தங்கத் தட்டில் வைத்துத் தாங்காத குறை!

அப்படி மனைவிக்காக உயிரையே கொடுக்கத் தயாராக இருந்தான்,

அவளும்
..... , கணவன் மனைவி இருவருமே ஒத்த மனம் படைத்தவர்களே,

ஒருவருக்கு ஒருவர் பரிவும் பாசமும் கொண்டிருந்தனர்!

அதன் பலனாக. முன்போல நேரம் காலம் பாராமல் இருவரும் அலுவலகத்தில் கிடப்பது நின்று போயிற்று, அதிகாலையில் விழித்து அரக்கப் பறக்க இருவரும் அலுவலகத்துக்கு ஓடி வருவது. சான்ட்விச். பர்கர் என்று பக்கத்து ஈட்டரியில் என்ன கிடைக்கிறதோ அதை. வீட்டில் இருந்து கொணர்ந்த மோர் சாதத்தோடு சேர்த்து உண்பது என்று இருந்தது மாறிப் போயிற்று,

இரண்டு மாதங்களாக. மஞ்சரியின் ஆரோக்கியத்துக்கு வீட்டிலும் அலுவலத்திலும் முன்னுரிமை கொடுக்கப்பட்டது, சத்தான சாலடுகள். உணவு வகைகள். வசதியாக வாகனங்கள். அளவான வேலை என்று பாலன் கட்டுப்பாடுகள் விதித்து மனைவி அதைக் கடைப்பிடிக்கவும் வைத்தான்,

அதனால் துண்டு விழுந்த வேலைகளை உதயா இன்முகமாக ஏற்றுச் செய்தாள்,

உதயாவிடம் கணவன் மனைவி இருவருமே இது பற்றித் தனித்தனியாகப் பேசினர்,

“பாலாவுக்குக் குழந்தை என்றால் மிகவும் ஆசை. உதயா, கொஞ்சம் அதிகப்படியாகத்தான் தடபுடல் பண்ணுகிறார், எச்சரிக்கையோடு இருந்துகொண்டால். நல்லது என்கிறார், அது உண்மைதான், ஆனால் ..... வேலையைத்தான் ..... ,அநியாயமாக உன் தலையில் நிறைய ஏற்றுகிறோமோ என்று சில சமயம் தவிப்பாக இருக்கிறது, ஆனால் வேறு வழியில்லை, ப்ளீஸ்யா! கொஞ்ச நாள் பொறுத்துக் கொள்
,” என்று சொல்லாமல் சொன்ன தினுசில் உதயா தானாகவே முன் வந்து இந்த அதிகப்படிப் வேலைகளைப் பொறுப்பேற்றுச் செய்யலானாள்

பாலனும் கிட்டத்தட்ட இது போலவே கூறினான்,

கூடுதலாக. “நம் நிதி நிலைமை நீ அறியாதது இல்லை. உதயா, பின்னொரு காலத்தில் தொழிலில் வெற்றி பெற்ற பிறகு. உன் ஊதியத்தை உயர்த்தித் தர முடியுமே தவிர. இப்போது எந்த அதிகப்படிச்

செலவையும் நிறுவனம் ஏற்க இயலாது, புரிந்து கொள்வாய் என்று நம்புகிறேன், “ என்று இன்னொரு விதமாகச் சொன்னான்,

இரண்டு வாசகங்களுக்கும் பொருள் ஒன்றுதான், அது மட்டுமல்ல, இருவரும் மறைமுகமாக விடுத்த கோரிக்கையை மறுக்கும் எண்ணம் அவளுக்கும் இல்லை,

எனவே. தேவை உணர்ந்து. மஞ்சரி. பாலன் இருவரும் செய்துவந்த சில பொறுப்பான வேலைகளை உதயா மகிழ்ச்சியுடனேயே ஏற்றுக் கொண்டாள்,

அவைகளில் ஒன்றுதான். காலையில் சற்று சீக்கிரமாக வந்து அலுவலகத்தைத் திறப்பதும். இரவானாலும் கைவேலையை முடித்தபின் கதவைப் பூட்டிக்கொண்டு போவதும்,

சந்தோஷமாகச் செய்தாள்தான், ஆனால். சில தினங்களாக எல்லாம் அலுத்துப் போயிற்று,

எந்தக் குழந்தை அழகாகப் பிறந்து எல்லோரையும் மகிழ்விக்கப் போகிறது என்று ஆவலாக எதிர்பார்த்தார்களோ. அது கருவே அல்ல என்று ஸ்கேன் ரிப்போர்ட் கூறிவிட்டது!

மனம் ஒடிந்து விழுந்த மஞ்சரி. முன்னிலும் அதிகமாக உடல் ஓய்ந்து போனாள்,

மனைவியைத் தேற்றுவதில் ஈடுபட்டிருந்த பாலன் அலுவலகத்தில் கழித்த நேரம் முன்னிலும் குறைந்து போயிற்று,

அதனால். உதயாவின் வேலை நேரம் இன்னமும் அதிகமாகிப் போயிற்று,

இதைக் கூட அவள் பெரிதாக எண்ணியிருக்க மாட்டாள், சந்தோஷத்தில் பங்கெடுப்பதைக் காட்டிலும். துக்கத்தில் துணை நிற்பதே உயர்ந்த மனித நேயம் என்று அறியாதவள் அல்ல அவள்,

ஆனால் இரவு எட்டு மணிக்கு மேல் அவள் தனியாக வீட்டுக்குத் திரும்பிச் செல்வது இப்போது பிரச்சினையாகிக் கொண்டிருந்தது,

வீடு செல்லும் வழியில். இரவானால் ஆள் நடமாட்டம் வெகுவாகக் குறைந்து போகும் இரண்டு தெருக்களை அவள் கடக்க வேண்டியிருந்தது,

பகலிலேயே ஓரளவு எச்சரிக்கையோடு மக்கள் நடமாடுகிற பகுதி, இரவானால் மக்கள் அப்படியே வீட்டுக்குள் அடைந்துவிடுவார்கள்,

புண்ணியம் கட்டிக் கொண்டது ஒரு மதுபானக் கடை! அதன்

வாயிலில் ஒரு கும்பல் அமர்ந்து குடிப்பதும். போகிற வருகிறவர்களைப் புரளி பேசுவதும். அன்றாடம் நடப்பது, இதற்குப் பயந்தே அந்தப் பகுதி வாழ் மக்கள். வீட்டோடு ஒடுங்கி விடுவார்கள்,

உதயாவுக்கோ வீடு செல்ல அதுதான் வழி, இரவு எட்டு மணிக்கு மேல் அலுவலகக் கதவைப் பூட்டிவிட்டுச் செல்லும்போது உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு செல்லும் உணர்வுதான்,

கொஞ்சம் சுற்றானாலும் பரவாயில்லை, வேறு வழியில் செல்லலாம் என்று முயற்சி செய்தால். அது. இதை விட மோசமாக இருந்தது,

மறு நாள் கட்டாயமாக அனுப்ப வேண்டிய இரண்டு மெயில்கள் இருந்தன, விடிகாலையில் வந்தேனும் அவைகளைப் படித்துப் பார்த்து அனுப்பி விடுவதாகப் பாலன் கூறியிருந்தான், எனவே அவைகளைத் தயார் பண்ணி வைத்து உதயா கிளம்பும்போது எட்டரைக்கும் மேலாகிவிட்டது,

பசி வேறு வயிற்றைக் கிள்ளியது, இனி வீட்டுக்குப் போய் எதையாவது கிண்டிச் சாப்பிட முடியாது என்று தோன்ற. வழியில் ஒரு ரொட்டியை வாங்கிப் போய்விட வேண்டியதுதான் என்று எண்ணியவாறே வேகமாக நடந்தவளைக் காலி வயிறு வேறு வதைத்தது,

பதைப்புடன் வேகமாக அவள் நடந்தபோது. அத்தனை நாள் அவள் அஞ்சியது நடந்தது,

என்ன ஓடியும் அகப்பட்டுக் கொண்டவள் எப்படித் தப்பினாளோ?

மானாய் மருண்டு அங்கும் இங்குமாய் ஓடியவள் மூச்சு அடைக்க நின்று. அடுத்து ஓடி ஒளிய இடம் தேடி நிமிர்ந்து பார்த்தால் அவளது அலுவலகத்தின் அருகிலேயே வந்திருந்தாள்,

உள்ளே போய் ஒளிந்து கொள்ளலாம், ஆனால் சாவி ,என்று கலங்கியவளுக்குத் தோளோடு மாட்டியிருந்த கைப்பையுடனேயே ஓடி வந்திருப்பது புரிந்தது,

அவசரமாகச் சாவியை எடுத்துக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே போய்க் கதவை உட்புறமாகப் பூட்டினாள்,

விளக்கைப் போடக் கையை உயர்த்தியபோது. “இதோ .....இந்தத் தெருப்பக்கம்தானே ஓடி வந்தாள், இண்டு இடுக்கு விடாமல் தேடுங்கப்பா, எங்கே போயிடப் போறா? குப்பைத் தொட்டி பின்னாலே தொட்டிக்குள்ளே கூடப் பாரு ..... ஒத்தைச் சிறுக்கி .... ,நம்ம நாலு பேர்

பிடியிலேர்ந்து ஓடிடுவாளா
” என்று பலவாறு பேசும் குரல்கள் கேட்கவும். அப்படியே சுவரில் சாய்ந்தபடி தொய்ந்தாள்,

உள்ளே கதவைப் பூட்டியிருந்தாலும். நாலு உதை விட்டால். படங்களில் வருவது போல உடைந்து போகாதா? நாலு குடிகாரர்கள்!

போலீசைக் கூப்பிடலாமா என்று யோசித்தவளுக்கு அதற்கும் தயக்கமாக இருந்தது, காவல் துறையினரைப் பற்றியும் என்னெனன்னவோ சொல்கிறார்களே!

அவளது கெட்டகாலம். அங்கேயும் யாரேனும் தப்பானவர்கள் இருந்து அவர்களிடம் சிக்க நேர்ந்தால்?

அசையாமல் இருந்துவிட்டுக் காலையில் செல்ல வேண்டியதுதான் என்று முடிவு செய்தபோது. ஓடியதும் பயமுமாக நெற்றியில் வியர்வை வழிவது புரிந்தது,

அவசரத்துக்குத் தோள்ப்பட்டைக் கைத் துணியால் நெற்றியை ஒற்றிக் கொள்ளும் வழக்கம் போலக் கையைத் தூக்கினால். சட்டையில் கையை இல்லை,

அந்த நால்வரிடம் இருந்து திமிறி விடுவித்துக் கொண்டபோது அவர்கள் பற்றி இழுத்ததில்
..... ,துணி கிழிந்த சத்தம் இப்போது நினைவு வந்தது,

அவசரமாகத் தொட்டுத் தடவிப் பார்த்ததில் உதயா இன்னமும் சோர்ந்தாள், விடிந்த பிறகும். இந்த மாதிரி வெளியே செல்ல முடியாது,

ஏன். சுத்தம் செய்கிற ஆஃபீஸ் பையனுக்குக் கதவைத் திறந்து விடக் கூட முடியாது!

கடவுளே. அவளுடைய தந்தை சிவகுரு போதையற்ற நல்ல நிலையில் இருந்தாலாவது விஷயத்தைச் சொல்லி வேறு உடை எடுத்து வரச் சொல்லலாம், ஆனால் இப்போது. அந்தக் குடிகாரர்களை விட மோசமான நிலையில் அல்லவா. அவர் இருப்பார்!

தன்னை மீறி. பெரிய கேவல் ஒன்று அவளது தொண்டையை விட்டு வெளியேறியது, சட்டென வாயைப் பொத்திக் கொண்டாலும். கேவல் ஒலி வெளியே கேட்டிருக்குமோ?

அச்சத்துடன் கவனித்தபோது. யாரோ நடமாடும் ஓசை அவளது காதுகளில் விழுந்து. அவளைக் கதி கலங்கச் செய்தது,

மூச்சைக் கூட நிறுத்தி வைத்துக் கொண்டு அசையாமல் இருந்து உற்றுக் கேட்டபோது. நிச்சயமாக ஏதோ காலடிச் சத்தம் அலுவலகத்தை

நெருங்கி வருவது துல்லியமாகக் கேட்டது,

தொண்டைக்கு வந்து துடித்த இதயத்தை அழுத்தியபடி சிலையாய் இறுகி உன்னிப்பாகக் கவனித்தபோது. அந்தக்காலடிச் சத்தம். அலுவலகக் கதவின் முன்னே வந்து நின்றது,

ஐயோ! அவளைக் கண்டுபிடித்துவிட்டார்கள்! இனிமேல் கதவை உடைப்பார்களா? அப்படி உடைக்கிற ஓசை கேட்டு யாராவது உதவிக்கு வருவார்களா?

ஆனால் அந்த நம்பிக்கை உதயாவுக்கு வர மறுத்தது,

அந்த நாலு பேரும் துரத்த. அவள் அலையக் குலைய இங்குமங்கும் ஓடியபோது. தெருவில் வேறே ஆளே இல்லை என்று சொல்ல முடியாதே! அங்கங்கே ஓரிருவர் செல்லத்தான் செய்தார்கள், ஆனால் என்ன? தலையை வேறு பக்கம் திருப்பிக்கொண்டு ஒதுங்கிப் போனார்கள்!

சரீ
,அவர்களுக்கு அறிமுகமே இல்லாத யாரோ ஒருத்தியான உதயாவுக்கு உதவி செய்யப்போய் அந்த குண்டர்களிடம் மாட்டி அடிபட்டு விழுந்துவிட்டால். அவர்கள் குடும்பத்தை யார் காப்பாற்றுவார்கள்? அதையும் பார்க்க வேண்டும்தானே? அப்படி யோசிக்கிறவர்கள் ஒதுங்கித்தானே போவார்கள்!

போய்க்கொண்டுதான் இருக்கிறார்கள்,. இனியும் அப்படித்தான் போவார்கள், இதுதான் பெரும்பான்மையான மனிதர்களின் இயல்பு!

இந்த மாதிரி மக்கள். இப்போது மட்டும் அவளுக்கு உதவி செய்வதற்காக வந்துவிடுவார்களா. என்ன?

அதெல்லாம் சினிமா ஹீரோக்கள் மட்டும்தான் செய்வார்கள்! ஒருவனாய் உதவிக்கு வந்து பத்திருபது பேரை அடித்துப் போட்டுக் காப்பாற்றுவது கதைகளில் மட்டும்தான் முடியும்!

நிராசையோடு யோசித்துக் கொண்டிருந்தவளுக்குத் திடுமென இதயம் நின்றே போனது எனலாம்!

ஏனெனில் கதவில் சாவியைச் செலுத்தி
ஆமாம். சாவியைத்தான் செலுத்தி யாரோ கதவைத் திறந்து கொண்டிருந்தார்கள்,

எந்தத் தாளையும் திறக்கிற மாதிரியான சாவிக் கொத்தோடுதான் திரிவார்களா? பூட்டிய கதவும் பாதுகாப்பு ஆகாதா?

அச்சத்தில் உறைந்து போய். அவள் பார்த்துக் கொண்டிருந்தபோதே. கதவு திறந்து. பான்ட் அணிந்த இரு கால்கள்

உள்ளே வரலாயின,

தன்னை மீறி. உதயா வீறிட்டாள்!

அத்தியாயம் - 2

போனது தெரியாமல் எண்ணி மூன்று ஆண்டுகள் கழிந்து போயின,

பரபரப்பும் . கவலையும் உழைப்பும் நிறைந்த மூன்று ஆண்டுகள்! திக்குத் திசை தெரியாமல் திணறி. பல நல்லவர்களின் உதவியால் ஏதோ ஒரு வழியைக் கண்டுபிடித்து. ஒருவாறு உருப்பட வைத்த மூன்று ஆண்டுகள்!

அதில் முக்கியமான நிகழ்வு. தந்தை குடியை மறந்தது! அதைவிட முக்கியமானது. தந்தை திருந்தி நல்லபடியாக வாழ்வது!

அதற்காகக் கொடுத்த விலை மிகவும் அதிகமானதே என்றாலும். இன்றைய நிலையை எண்ணிப் பார்க்கையில். அதைப் பற்றிய வலியேதும் எழவில்லை!

ஆனால். அதை எண்ணிப் பார்ப்பதே தவறு! நினைத்தும் பார்ப்பதில்லை என்று வாக்குக் கொடுத்துவிட்டு. இது என்ன புரட்டிப் பார்த்தல்?

மறப்பது இயலாதுதான், ஆனால் நினைவுக்குக் கொண்டு வந்து வருந்துவது தேவையில்லைதானே?

எதிலோ படித்திருக்கிறாள்,. கடந்த காலம் இறந்து போனதாம், எதிர் காலம் நிச்சயம் இல்லாததாம், நிகழ் காலமே மனிதனுக்கு உரியதாம்,

அப்படி நமக்கு உரிய சமயத்தை மகிழ்ச்சியோடு கழிக்காமல். தேவையற்ற குப்பையைக் கிளறி வருந்துவானேன்? கூடாதுதான்!

மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு. அதே நாள் எனும்போது. தன்னை மீறிப் பழைய நினைவுகள் தலை தூக்கவே முயன்றன என்றாலும். நிகழ்கால நிம்மதியின் துணை கொண்டு உதயாவால் அவற்றை அடக்கவும் முடிந்தது,

ஏனெனில் வாழ்வை சந்தோஷமாக எதிர்நோக்க. அவளுக்கு இப்போது நிறையக் காரணங்கள் இருந்தன,

தந்தை மறுவாழ்வு மையத்தின் சிகிச்சையால். குடியை அடியோடு துறந்து . நல்ல மனிராக வாழ்கிறார் என்பது. எவ்வளவு பெரிய விஷயம்!

காலையில் எழுந்து பாலைக் காய்ச்சி. காஃபியைத்

தயாரித்துவிட்டுப் பார்த்தால். இதோ ஜன்னல் வழியே தெரிகிறது. அவளைப் பெற்றவர் உற்சாகத்தோடு பூச்செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றும் காட்சி!

சிவகுருவின் வேலை முடிந்து கொண்டிருந்தது,

செடிகளுக்கு நீர் ஊற்றி முடித்து. ஹோஸ் பைப்பைச் சுருட்டி எடுத்துக் கொண்டிருந்தார் அவர், அதைப் பின்னறையில் வைத்துவிட்டுக் கைகால் கழுவிக்கொண்டு சிவகுரு வருகையில். தனக்கும் அவருக்குமாகக் காஃபியைக் கலந்து மேஜைமேல் வைத்தாள் உதயா,

முந்தைய நாள் வேலை. மற்றும் சில பொதுவான விஷயங்களைப் பேசியபடியே இருவரும் பானத்தை அருந்தி முடித்தனர்,

கப்பைக் கீழே வைத்தபடியே ஹால் கடிகாரத்தைப் பார்த்த சிவகுரு எழுந்தார்,

“கிளம்புகிறேன். உதிம்மா, இப்போதே கிளம்பினால்தான். மற்றவர்களுக்கு முன்னாலேயே போய். நேற்றைய வேலைகளைச் சரிபார்த்து வைக்க முடியும், அப்புறம் இருக்கவே இருக்கிறது அன்றாட வேலை! “ என்று உரைத்தவாறே நடந்தவர் சற்று நின்று மகளைப் பார்த்தார்,

“உதி. அனாவசியமாகப் பெரிதாகச் சமையல் எதுவும் செய்ய வேண்டாம், பக்கத்து மெஸ்சில் சொன்னால் நன்றாகவே தெருகிறார்கள்தானே? உனக்கும் சேர்த்தே வாங்கிக் கொள்ளலாம், அதனால் அரக்கப் பரக்க வேலை செய்து கஷ்டப்படாதே, மஞ்சரி உண்டாகி இருப்பதால் அலுவலகத்திலும் வேலை அதிகமாக இருக்கும் என்று எனக்குத் தெரியும், மெஸ்சில் பதிவாகச் சொல்லிவிட்டால். வேளை தவறாமல் அங்கிருந்து வந்துவிடும், உனக்கும் கொண்டுவந்து தரச் சொல்லிவிடலாம், தேவைப்படும் காலம் வரை அப்படியே இருந்து விடுவோம், மஞ்சரியின் ஆரோக்கியம்தான் இப்போது முக்கியம், “ என்றவரின் குரல் லேசாகக் கம்மியது போல இருக்கவும். மகள் அவசரமாக அவரைப் பார்த்தாள்,

ஆனால் சட்டெனச் சுதாரித்துக் கொண்டவர். “நான் கிளம்புகிறேன்மா, மற்றது ஃபோனில் பேசிக் கொள்ளுவோம், சரிதானா?” என்றவர் மேலே நில்லாமல் நடந்துவிட்டார்,

உதயாவும் அவரைத் தடுக்கவில்லை,

தந்தை வருந்துகிறாரே என்று இருந்தபோதும். இந்த உறுத்தல்

லேசாக இருப்பது எப்போதும் நல்லது என்றும் தோன்றியது, குதிரைக்குக் கடிவாளம் போல என்று நினைத்துக்கொள்ள வேண்டியதுதான்.

சிவகுரு குறிப்பிட்ட மெஸ் பற்றி அவளுக்கும் தெரியும்,

நொடித்துப் போன நல்ல குடும்பம், ஒரு விபத்தில் குடும்பத் தலைவர் சக்கர நாற்காலியே கதியென்று ஆகிவிட்டார், ஆனால் அதற்காக மனம் ஒடிந்து போகாமல். தாயார். மனைவியின் சமையல் திறமையை மூலதனமாக்கி. இந்த மெஸ்சை நடத்தத் தொடங்கினார்,

சுவை. சுகாதாரம் இரண்டிலும் கூடுதல் கவனம் செலுத்தவே. தொழிலும் வளர்ந்து. வருமானமும் பெருகியது, இப்போது நாலு பேர் வைத்து வேலை வாங்குகிற நிலை, ஆனால் பழசை மறக்காமல். அமைதியாகவே நடந்துகொண்டார்கள்,

தொழில் இடத்துக்கு அருகில் இருக்கிறதே என்று அவசரத்துக்கு அவ்வப்போது அங்கிருந்து தருவித்த சிவகுரு. சுவை பிடித்துப் போகவே. மகளுக்கும் வாங்கி வருவார்,

செயற்கைச் சுவையூட்டிகள். தவறான வண்ணங்கள் போன்ற எதுவும் பயன்படுத்தப் படவில்லை என்று கண்ட பிறகு. மகளும் அங்கே வாங்குவதைத் தடுப்பது கிடையாது, அவளது அலுவலகத்தில் வேலை அதிகமாக இருக்கும்போது. இரவுக்கு ஏதாவது வாங்கி வருமாறு. அவளே தந்தையைக் கூப்பிட்டுச் சொல்லிவிடுவாள்,

என்னவோ. சில காலமாகத் தொல்லைப்படாமல் சுகமாகவே வாழ்க்கை கழிவது போல ஓர் எண்ணம்,

ஏற்றாற்போல மஞ்சரி. அவளுடைய பாசுடைய மனைவி கருவுற்றதும் அவளுக்கு மிகவும் மகிழ்ச்சியாகவே இருந்தது,

அதனால் அவளுக்கு அதிக உழைப்புதான், ஆனாலும் மனது சந்தோஷப்பட்டது,

கடவுளே. மஞ்சரியைக் கட்டாயம் காப்பாற்று என்று மனதுள் ஒரு கும்பிடு போட்டு. பாரத்தை அந்தப் பரம்பொருளிடம் ஒப்படைத்து விட்டுத் தன் வேலையில் மும்முரமாக ஈடுபட்டாள் அவள்,

மதிய உணவு வேளையில் சற்று அதிக நேரம் ஓய்வு கிடைக்குமானால். அதைத் தந்தையோடு கழிப்பது உதயாவின் வழக்கம்,

பாலனும் மஞ்சரியும் அதற்கு மறுப்பு சொல்வதில்லை, சொல்லப் போனால் அவர்களே அதை ஊக்குவிப்பார்கள்,

அன்று தம்பதியர் இருவருமே அலுவலகத்தில் இருந்ததால். அவளைப் புன்னகையோடு அனுப்பி வைத்தனர்,

சிவகுரு தனிமையை உணராதிருப்பது நல்லது என்று அவர்களுக்கும் தெரியும்தானே?

ஸ்கூட்டியில் தன் மதிய உணவையும் எடுத்துக்கொண்டு தந்தையின் இடத்துக்குச் சென்ற உதயா வாகனத்தைப் பார்க் செய்துவிட்டு ஒரு கணம் நின்றாள்,

உதயரேகை என்று பெரிய எழுத்திலும் ஸ்கேன் சென்டர் என்று அடுத்த சைஸ் எழுத்திலும் ஒளிர்ந்தது பெயர்ப் பலகை,

அவளது பெயர்தான், உதயரேகா
என்று நீளமாகக் கூப்பிடாமல் செல்லமாகச் சுருக்கியதில் அவள் உதயாவாகிப் போனாள், அதுவும் கூட சிவகுருவின் வாயில் "உதி"யாக இன்னமும் குறுகிவிடும், ஆனால் ஒரு வாலாக செல்லம். அம்மா என்று ஏதாவது ஒட்டிக் கொள்ளும்,

உற்சாகமும் மகிழ்ச்சியுமாக இருக்கையில் ராகம் போட்டு "அம்மா உதயரேகை" என்றே அவர் அழைப்பார்,

சிறு பெருமையுடன் பெயர்ப்பலகையைப் பார்த்துவிட்டு. உள்ளே பெற்றவர் இருந்த சிறு "கேபினு"க்குள் சென்றால். அவர் வெளியே கிளம்பிக் கொண்டிருந்தார்,

மகளைப் பார்த்ததும் புன்னகை விரிய நின்று. "சற்று நேரம் உட்கார்ந்திரு. உதிம்மா, இன்று ஒரு "டாப்ளர்" கேஸ் வருகிற நேரம், அதற்கு எல்லாம் தயாராக இருக்கிறதா என்று ஒரு தரம் சரிபார்த்துவிட்டு வந்து விடுகிறேன், அல்லது. உனக்குப் பசித்தால் எனக்காகக் காத்திராமல் சாப்பிட்டுவிடு," என்றார் அவர்,

"நீங்கள் போய்ப் பார்த்துவிட்டு வாங்கப்பா, எனக்கு ஒன்றும் பசியாக இல்லை, " என்றாள் மகள்,

"சரிம்மா," என்று கிளம்பிய சிவகுரு மறுபடியும் நின்றார்,

"என்னப்பா?"

"நாலு ரிப்போர்ட்டுகள் இருக்கின்றன, நான் திரும்புமுன் யாராவது வந்து கேட்டால். ஒரு தரத்துக்கு இரண்டு முறை செக் பண்ணிவிட்டுக் கொடும்மா, ...ஜாக்கிரதைடா!" என்றார் சிறு கவலையோடு,

மலர்ந்த முகத்தில் புன்னகை விரிய. "காட் ப்ராமிஸ் அப்பா, இரண்டென்ன மூன்று தடவை சரி பார்க்காமல் யாருக்கும் ரிப்போர்ட்டைக் கொடுப்பதில்லை, போதுமா?" என்றாள் சிறு

கேலியுடன் கூடிய குரலில்,

“போதும்மா, ஒரே முறை என்றாலும். நீ பார்த்துதான் செய்வாய், ஆனால். எத்தனை கவனமாக இருந்தாலும். அத்தனைக்கு நல்லதுதானே? பார்த்துக்கொள்,” என்றுவிட்டு சிவகுரு வேகமாக வெளியே சென்றார்,

சிரிப்பு மறைந்து. தந்தையின் முகம் சீரியசாவதைப் பார்த்த உதயாவுக்குக் கஷ்டமாக இருந்தது,

இந்த வடு என்றேனும் மறையக் கூடுமா? கஷ்டம்தான்! ரொம்பவே!

அறை போலப் பிரிக்கப்பட்டிருந்த கேபினின் கதவை வெறும் முறைக்காக லேசாகத் தட்டிவிட்டு. தட்டின கையோடு ஒருவன் வேகமாக உள்ளே வரவும். உதயாவின் சிந்தனை கலைந்தது,

சற்றுத் திகைப்புடன் நோக்கியவளின் எதிரே. இரண்டு ரசீதுகளை அவன் வைத்தான், இரண்டும் ஸ்கேன் எடுப்பதற்காகப் பணம் கட்டிய ரசீதுகள்,

இரண்டு ஸ்கேன் ரிப்போர்ட்டுகள்! இரண்டு மனைவியரா? ஒருத்தி கூடவா. பிடித்து உள்ளே போடுவதைப் பற்றி யோசிக்கவே இல்லை?

சே! அப்படி இராது, யாராவது சினேகிதர்கள். அவர்களுடைய உறவுகள் ..... ,அப்படி யாரதாகவும் இருக்கலாம்,

ஆள் சற்று நன்றாக இருந்தால். உடனே மதனகாமராஜனாக எண்ணி விடுவதா?

தன்னைத்தானே கண்டித்துக்கொண்டு. அவன் வைத்த ரசீதுகளின் எண்களைப் பார்த்து உரிய ஸ்கேன் ரிப்போர்ட்களை எடுத்து. அவற்றின் எண்களோடு. உள்ளே விவரங்களோடும் ஒத்துப் பார்த்தாள்,

முழு விவரங்களையும். அவள் மறு முறையும் அதே நிதானத்துடன் ரிப்போர்ட்களை உதயா சரிபார்க்கத் தொடங்கவும் வந்தவன் பொறுமை இழந்தான்,

“என்னம்மா பெண்ணே. அதுதான் ஒரு தரம் முழுதாகச் சரி பார்த்தாயே.

மறுபடியும் என்ன? நீ பார்த்து முடிப்பதற்குள். எனக்குப் பத்து வயது கூடிவிடும் போல இருக்கிறது, சற்றுச் சீக்கிரமாகப் பார்த்து முடிக்கிறாயா? இங்கே காத்து நிற்பது தவிர. எனக்கு வேறு வேலைகளும்

இருக்கின்றன," என்று படபடத்த அவனது குரலில் சற்றே மட்டம் தட்டும் தொனி இருந்தது,

"சார். உங்களுக்கு உலகையே புரட்டி எடுக்கும் வேலைகூட இருக்கலாம், ஆனால். இங்கே உரிய முறைப்படி. நன்கு சரிபார்க்காமல் எந்த ரிப்போர்ட்டையும் கொடுப்பதில்லை, சொல்லப் போனால். தவறு நேராதிருப்பதற்காக நாங்கள் இப்படிச் சரிபார்ப்பது பற்றி நீங்கள் மகிழ்ச்சி அடைய வேண்டுமே தவிர. எரிச்சல் படக் கூடாது, இப்படிக் குறுக்கே பேசவும் கூடாது, என் கவனம் கலைந்து மறுபடியும் சரிபார்க்க வேண்டியதாகிவிட்டது பாருங்கள்!" என்று எடுத்துரைத்துவிட்டு அவள் மறுபடியும் தன் வேலையைத் தொடங்கினாள்,

பொறுமையற்ற ஒரு மூச்சை வேகமாக எடுத்துவிட்டபோதும். அவன் மறுபடியும் பேசாமலே சும்மா அமர்ந்திருந்தான்,

நிதானமாகத் தன் வேலையை முடித்துவிட்டு. "சார். இந்த ரிஜிஸ்டரில் கையெழுத்துப் போட்டுவிட்டு. ரிப்போர்ட்டுகளை எடுத்துப் போங்கள்," என்று அவள் கூறவும். அந்த மனிதன் எழுந்து வந்தான்,

அருகில் வந்து நின்று. ரிஜிஸ்டரில் கையெழுத்திட்டவன். ரிப்போர்ட் கவர்களை வாங்கிக்கொண்டு உடனே போய்விடவில்லை,

"செலவான ஒரு வினாடியைக் கூட நம்மால் திரும்பிப் பெற முடியாது என்பார்கள், நீ அது பற்றி சற்றுச் சிந்தித்துப் பார்ப்பது நல்லது பெண்ணே, இல்லாவிட்டால். ரிப்போர்ட் பெற வருகிறவர்கள். பாயும் தலையணையுமாக வந்து படுக்க இடம் கேட்கிற நிலைமை ஆகிவிடப் போகிறது, என்னுடைய இந்த எச்சரிக்கையை அலட்சியப் படுத்தாமல். சற்று விரைவாகச் செயல்பட்டு. உன் நேரத்தோடு. மற்றவர்களின் நேரமும் விரயமாகாமல் காப்பாற்று. தாயே!" என்றவன் அதற்கு மேல் நில்லாமல் விடுவிடென்று சென்றுவிட்டான்,

குரலில் என்ன எகத்தாளம்!

முகத்துக்கு நேரே அவளை யாரும் இப்படி மட்டமாகப் பேசியது கிடையாது,

ஒரு குறிப்பை இரண்டு தரம் சரி பார்ப்பது என்ன உலக மகாக் குற்றமா? அப்படி என்ன அவசரம் அவனுக்கு?

அவசரத்தில் ஒன்றைச் செய்துவிட்டு அவகாசத்தில் அழு என்று பழமொழியே இருக்கிறது என்று அவனுக்குத் தெரியாதா?

இவனைப் போல ஆயிரம் பேர் வந்து அதட்டி உருட்டினாலும். இந்த இடத்தில் இப்படித்தான் வேலை நடக்கும், நீ என்ன

வேண்டுமானாலும் செய்து கொள் என்றெல்லாம் ஒரு வேகத்துடன் யோசித்தபோதும். அவன் சொன்ன "பாயும் தலையணையும்" பிடிவாதமாக நினைவு வந்து அவளது கற்பனையைத் தூண்டியது,

ஸ்கேன் ரிப்போர்ட் வாங்க வந்தவர்கள் எல்லோரும் கையில் ஒரு பாய். தலையணையோடு வந்து வரிசையாகப் படுத்துக் கிடப்பது போல ஒரு காட்சி தோன்றி அவளுக்குச் சிரிப்பு மூட்டியது,

அதிலும் சில குறட்டை ஒலிகளும் கேட்பது போலக் கற்பனை விரியத் தன்னை மீறிக் கிளுக்கிச் சிரித்தாள் உதயா,

"என்னம்மா அப்படிச் சிரிப்பு? எனக்கும் சொல்லேன். அப்பாவும் சேர்ந்து சிரிக்கிறேன்," என்று சிவகுருவின் குரல் கேட்கவும்தான். வெளிப்படையாக உரக்க நகைப்பதை உணர்ந்து. உதயா தன் கப்பென்று தன் சிரிப்பை நிறுத்தினாள்,

இப்போது தந்தைக்கு என்ன பதிலைச் சொல்வது?

ஸ்கேன் விஷயத்தில் வேடிக்கை பேசினால் அவருக்குப் பிடிக்காது,

எனவே அவசரமாக யோசித்து. "அஅது ஒன்றுமில்லை அப்பா, இத்தனூண்டு பல்லிக்குட்டி மாதிரி ஸ்கேனில் தெரிகிறதுகள் எல்லாம் வளர்ந்து பிறந்து என்னென்ன வால்த்தனங்கள் பண்ணுகின்றன என்று நினைத்துப் பார்த்தேனா? ஒரே சிரிப்பு சிரிப்பாக வந்துவிட்டது! அப்பா. ஆறேழு மாதத்தில் எடுத்ததைப் பார்த்தால். முக ஜாடை கூடத் தெரிகிறதுப்பா, ஆச்சரியமாக இல்லை? " என்று சிரிப்பின் காரணத்தில் இருந்து வேறு திசைக்குப் பேச்சை மாற்றினாள் அவள்,

"ரொம்ப ஆச்சரியம்தான் உதிம்மா, நம் உடல். அதை இயக்குகிற உயிர்
, எல்லாமே எண்ணிப் பார்த்தால் பெரும் பிரமிப்பாகத்தான் இருக்கிறது, இதில் ஒரு சிறு விஷயம்கூட நம்மால் ஆனது இல்லை, ஒரு விரலை அசைப்பது கூட. எல்லாமே முழுக்க முழுக்க அந்தக் கடவுள் அருள்," என்று மனதில் உணர்ந்து கூறினார் அவர்,

அந்தக் கடவுளைக் கண்மூடி ஒரு கணம் துதிக்கவும் செய்தார்,

இப்போது உதயாவுக்கு உள்ளூர ஆத்திரம் பொங்கி வந்தது!

அவள் ஒன்றும் கடவுளை மறுப்பவள் அல்ல, பக்தி ரொம்பவே உண்டுதான், ஆனால் இப்படி "எல்லாம் அவன் செயல்" என்றால் அவளுக்குப் பிடிக்காது, அப்படியானால். நம் முயற்சியில் ஒன்றுமில்லையா என்று கேட்பாள்,

பிறந்த குழந்தை கையைக் காலை அசைத்து. குப்புற விழ முயன்று

தவழ்ந்து நடந்து எத்தனை முயற்சிகள் செய்கிறது!

வளர்ந்த மனிதர்கள் மட்டும். அவரவர் சோம்பேறித்தனத்துக்கும் தப்புத் தவறுகளுக்கும் சப்பைக் கட்டு கட்டும் இந்த பொய். பித்தலாட்டங்களில் இருந்து விடுபடுவதாகவே இல்லை!

அதை விடவும். இந்த அப்பாவே எவ்வளவு கஷ்டப்பட்டு இந்த நிலைக்கு வந்திருக்கிறார்! அவரோடு எத்தனை பேர் சேர்ந்து கஷ்டப்பட்டிருக்கிறார்கள்!

அதையெல்லாம் மறந்து. தந்தையே இப்படிக் கூறவும் அவளுக்கு ஆத்திரம்தான், ஆனால். அவரிடம் கோபம் காட்டவோ குற்றம் சொல்லவோ முடியாது, அப்புறம் ஒரேயடியாக மூடு கெட்டு. சோக உருவாய் ஆகிவிடுவார்,

எனவே வேடிக்கை போல. "ரொம்பச் சத்தமாக இதைச் சொல்லி விடாதீர்கள் அப்பா, எவனாவது முழு சோம்பேறி இதைக் கேட்டுவிட்டு. "வாழைப்பழத்தை உரித்து என் வாயில் நீதான் போட வேண்டும் கடவுளே" என்று. கையைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்து விடப் போகிறான்," என்று விழிகளை உருட்டி எச்சரித்தாள்,

தந்தையின் கண்ணோரங்கள் சிரிப்பில் சுருங்கவும். "அப்பா. வாங்கப்பா சாப்பிடுவோம், இல்லாவிட்டால் என் சிறு குடலைப் பெருங்குடல் விழுங்கத் தொடங்கிவிடும்! அவ்வளவு பசி!" என்று உரைத்தபடியே உணவுப் பாத்திரங்களை ஓரத்து சிறு மேஜை மேல் எடுத்து வைக்கலானாள்,

"அடடா! அவ்வளவு பசிக்கையில் எனக்காகக் காத்திராமல் நீ சாப்பிட்டிருக்கலாமே! முதலில் நீ உட்கார், உனக்கு நான் எடுத்து வைக்கிறேன்," என்று

பாத்திரங்களின் மூடிகளைத் திறந்து வைக்கலானார்,

பொதுவான சிறு பேச்சுகளோடு உணவு முடியவும் பாத்திரங்களைக் கழுவி எடுத்துக்கொண்டு உதயா கிளம்பினாள்,

உணவு முடிந்து மறுபடி வேலைக்குத் திரும்பும்போது உதயாவின் மனதில் நிம்மதி நிறைந்திருந்தது,

உலகத்தில் பொதுவாக நல்லவர்கள்தான் அதிகம்,

பாலன். மஞ்சரி. அப்பாவின் பழைய நிறுவனத்துடைய நிர்வாகத்தினர். மறுவாழ்வு மையத்தினர் .... ,எத்தனை பேர் நல்லவர்கள்!

மறுவாழ்வு மையத்துக்குக் கொஞ்சம் பணம் அனுப்ப வேண்டும்

என்று மனதுள் குறித்துக் கொண்டு. உதயா அலுவலகத்தை அடைந்தாள்,

மஞ்சரிக்காகப் புதிதாக வாங்கிப் போட்டிருந்த சாய்வு நாற்காலியில் பாதி படுத்த நிலையில் அவள் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தாள்,

உதயாவைப் பார்த்ததும் அவள் புன்னகையோடு எழுந்து வர. மூன்று பேருமாக வேலையில் ஆழ்ந்தனர்,

மாலையானதும் மஞ்சரியை அழைத்துககொண்டு பாலன் கிளம்பினான்,

அவர்கள் சென்ற பிறகும் உதயாவின் வேலை தொடர்ந்தது,

கணவனும் மனைவியும். உதயாவோடு கூட இருந்து இன்னும் அதிக வேலை செய்திருப்பார்கள்தான், ஆனால் மஞ்சரிக்கு உடல் நிலையைக் கருதி. அவளுக்கு அதிக உழைப்பு கூடாது என்று மூவருமாகச் செய்த முடிவுதான்,

அவர்கள் இருவரும் சென்ற பிறகு. உதயா அதிக நேரம் இருந்து வேலையை முடிப்பதாகத் திட்டம், திட்டமிட்டதில் உரத்த குரல் அவளதுதான்,

சென்ற முறை போல எதுவும் நேர்ந்துவிடக் கூடாது என்ற அச்சமும் அவளுக்கே அதிகமாக இருந்தது,

அதிக நேரம் இருந்து. அன்றன்றைய வேலையை முடித்துவிட்டே வீடு திரும்புவதாக அவர்களிடம் உறுதி கூறியிருந்தாள்,

அதன்படி இருந்து வேலையை முடித்துவிட்டு. வீடு திரும்பி. இரவுக்கான இலகு உணவோடு ஆளுக்கொரு பழத்தையும் தந்தையோடு சேர்ந்து உண்டு முடித்துவிட்டு. உடம்பு கழுவிப் படுக்குமட்டும் அவளுக்கு வேறு நினைவு எதுவும் வரவில்லை,

ஆனால். தலையணையை எடுத்து வாகாக வைத்தபோது. அன்று ஸ்கேன் ரிப்போர்ட் வாங்க வந்தவனின் பேச்சு அவளுக்கு நினைவு வந்தது,

“பாயும் தலையணையும்” எடுத்து வர வேண்டியிருக்கும் என்றானே! இது போன்ற இலவம்பஞ்சுத் தலையணையா? அல்லது. இன்னும் அதிக விலையுள்ள உயர் ரக ஃபோம் தலையணையைக் குறிப்பிட்டானா?

கேலியாக என்ன எண்ணினாலும். அது பற்றி அவனிடம்

கேட்கத்தான் வாய்ப்பு ரொம்பக் கம்மி இராது என்றே சொல்லலாம்,

ஏனெனில். தந்தைக்குப் பதிலாக அந்த இடத்தில் அவள் அமர்வதே எப்போதேனும் ஒரு தரம்தான், அந்த நேரம் பார்த்து இன்னொரு ஸ்கேன் ரிப்போர்ட் வாங்கவென்று அவன் வருவது நடக்கிற காரியமா?

அப்படியிருக்க அவனிடம் எப்படிக் கேட்டு சந்தேகம் தெளிவது? ஆனால் இது போல அவனிடம் கேட்டால் அவன் முகம் எப்படிப் போகக் கூடும்?

அவள் பைத்தியம் என்றே முடிவுகட்டி விடுவான்!

முகத்தில் இள நகை இலங்கப் படுத்தவள் விரைவிலேயே உறங்கிப் போனாள்!

அத்தியாயம் - 3

அந்த மனிதனை ..... , ரிஜிஸ்டரில் ஏதோ சத்ய ..... ,ரூ ....கூ , என்னவோ ஒரு கொசுருடன் கூடிய சத்யன் என்று அவன் கையெழுத்திட்டிருந்தாக நினைவு அவளுக்கு,

அந்த சத்யனை மறுதரம் பார்க்கக் கூடும் என்ற எண்ணம் உதயாவுக்குக் கொஞ்சமும் கிடையாது,

எனவே. அப்படியொரு சந்திப்பு தற்செயலாக நிகழ்ந்தபோது. அவள் ரொம்பவே அதிசயப்பட்டுப் போனாள்,

அன்று ஞாயிற்றுக் கிழமை, அடுத்த ஒரு வார முழுதுக்கும் வீட்டுக்குத் தேவையாவை எல்லாவற்றையும் மொத்தமாக வாங்கி பத்திரப் படுத்திக் கொள்வது. உதயாவின் வழக்கம், நச்சு நச்சென்று. மீண்டும் மீண்டும் கடைகண்ணிக்குச் செல்ல வேண்டிய அவசியமிராது, அனாவசியமாய் நேர விரயமும் ஆகாது!

வார முழுதுக்குமாக வாங்கிய பொருட்களை பில் போட்டதும் ஒரு தரம் சரிபார்த்த பிறகே பணம் கொடுப்பது அவளது வழக்கம்,

எடுத்த பொருட்களை அப்படி சரிபார்த்து. இன்னொரு கூடையில் அவள் அடுக்குகையில். "போச்சுடா! இவர்கள் இரண்டு தரம் நிதானமாகச் சரிபாராமல் பணம் கொடுக்க மாட்டார்களே! அதுவரை நாங்கள் கொட்டாவி விட்டபடி காத்திருக்க வேண்டியதுதானா?" என்று ஒரு குரல் கேட்கவும். உதயா சட்டெனத் திரும்பினாள், அவசரமாக அவள் திரும்பிப் பார்த்தால் பில் போடுவதற்காக அவளுக்கு இரண்டு ஆள் தள்ளி வரிசையில் நின்று கொண்டிருந்தவன். சாட்சாத் அந்த சத்யன் ..... , ரூ .....கூ .... ஏதோவேதான்!

கொட்டாவி மட்டும்தானா? பாயும் தலையணையும் போட்டுப் படுத்து உறங்க வேண்டாமா? என்ன மாதிரித் தலையணை என்று கேட்லாமா? அவளது விழிகளில் மின்னல் பளிச்சிட்டு மறைந்தது,

ஆனால் இங்கே அவளை எந்த விதத்திலும் குற்றம் சாட்ட முடியாது, வேறு யாரையும் வழி மறிக்காமல் ஒதுங்கி நின்றுதான். உதயா தன் பொருட்களைக் கணக்கிட்டுக் கொண்டிருந்தாள், அப்படி இருந்தும் வேண்டுமென்றே குறை கூறுகிறானே!

சிறு கோபத்துடன் எண்ணமிடும்போதே க்யூ நகரவில்லை என்பது

தெரிந்தது,

கவுன்டரில் நின்ற அந்தச் சின்னப் பெண். அடுத்த பில்லைப் போடாமல். உதயா பொருட்களைச் சரிபார்த்து முடித்துப் பணம் தருவதற்காக அவளைப் பார்த்தபடிச் சும்மாக் காத்துக் கொண்டிருந்தாள்,

என்ன பைத்தியக்காரத்தனம்? பணத்தைக் கொடுக்காமல் இவ்வளவு சாமான்களையம் தூக்கிக்கொண்டு அவள் எங்கே ஓடிவிடப் போகிறாள்? இவளது பிசகுக்காக தான் திட்டு வாங்க வேண்டியதாகிவிட்டது!

எரிச்சல் மிக. "அடுத்த பில்லைப் போடேன்மா! நான் ஒன்றும். இவ்வளவு பொருட்களையும் தூக்கிக்கொண்டு. பணம் கொடுக்காமல் ஓடிவிடமாட்டேன்," என்றாள் பொறுமையை இழுத்துப் பிடித்த குரலில்,

பில் போடுகிறவள் தயக்கத்துடன் நோக்க. "அப்படி ஓடினாலும் நாங்கள் விடமாட்டோம், எனவே கவலைப்படாமல் அடுத்த பில்லைப் போடும்மா," என்றது ..... , மீண்டும் அவனது குரலே,

இவன் என்ன குறிப்புக் காட்டுகிறான்? உதயா என்னவோ பணம் கொடுக்காமல் ஓடுகிறவள் மாதிரியும். அப்படி நடக்க அவன் விட மாட்டான் என்பது போலவுமா?

முகத்தில் சினத்தைக் காட்டி. பில்லுக்குரிய பணத்தைச் சில்லறை சுத்தமாக கவுன்டரில் வைத்துவிட்டு. எல்லாப் பொருட்களையும் தன் பெரிய ஜம்போ பையினுள் சும்மா வாரிப் போட்டுக்கொண்டு உதயா கிளம்பினாள்,

ஆனால். அன்று அவளது நாள் இல்லை போலும்! சூப்பர் மார்க்கெட்டை விட்டு வெளியேறுமுன் . கதவருகில் நிற்கும் செக்யூரிட்டி ஆள் அவளை நிறுத்தினான்,

திகைப்புடன் அவள் நோக்க. "மேடம். பில் போடாத ஏதோ பொருள் தவறுதலாக உங்கள் பைக்குள் வந்துவிட்டது போல இருக்கிறதே!" என்று அவளது பில்லை வாங்கிப் பொருட்களையும் சரிபார்க்கத் தொடங்கினான்,

அதாவது. ஏதோ ஒன்றை அவள் திருடிக்கொண்டு வந்திருக்கிறாள் என்று நாகரீகமாகச் சொல்லிச் சோதனை போடுகிறான்!

அப்படி எதுவோ பையில் இருக்கிறது, மற்றபடி இந்த "பீப்" சத்தம் வர வாய்ப்பில்லை, கவுன்டரில் நின்ற அந்தக் கத்துக்குட்டிப் பெண் எதையோ விட்டுவிட்டாள், அதற்கான திருட்டுப் பட்டம் அவளுக்குக்

கிடைக்கப் போகிறது!

சை, நின்று சரிபார்த்துவிட்டே வந்திருக்க வேண்டும், யாரோ என்னவோ சொன்னான் என்று. இப்படி ஓடி வரலாமா? இப்போது ..... ,

“இதோ! இந்தப் பாக்கெட்தான், பாதாம் பருப்பு, ஒரு பாக்கெட் மட்டும் பில் போட்டிருக்கிறது, எப்படியோ தவறுதலாக இரண்டு பாக்கெட் பைக்குள் வந்துவிட்டது! இதற்கான பணத்தைத் தந்தீர்கள் என்றால். இன்னொரு பில் போட்டு. இரண்டையுமே எடுத்துப் போகலாம்!”

பணிவான வார்த்தைகளும் குரலும்தான், ஆனால் அவன் எள்ளி நகைப்பதை உதயாவால் உணர முடிந்தது,

விலை உயர்ந்த பாதாம்பருப்பை “சுட்டு”க்கொண்டு போகப் பார்த்தாள் என்று

சொல்லாமல் சொல்கிறான்,

முகம் கன்றிச் சிவந்து போனது அவளுக்கு!

எல்லாம் அந்தப் “பாயும் தலையணை”க்காரனால் வந்தது, வரிசையில் பேசாமல் நின்று. அவனது முறை வந்ததும் பில் போட்டுக்கொண்டு போகாமல். அவன் என்ன அவளைப் பார்த்து விமரிசிப்பது?

எந்தக் காக்காயோ எங்கோ கரைகிறது என்று விடாமல். அவளும்தான் ஏன் எல்லாவற்றையும் அள்ளிப் போட்டுக்கொண்டு வரவேண்டும்?

தொண்டையைக் கனைத்து. “என்ன மேடம்? என்ன செய்யப் போகிறீர்கள்?” என்று செக்யூரிட்டி கேட்கவும் உதயா மறுபடி திகைத்தாள்,

இப்போது இந்த ஒரு பாக்கெட்டை மட்டும் பில் போடப் போனால். ஒன்று அந்த நீண்ட வரிசையில் கடைசியாக நின்று வரவேண்டும்,

அன்றி கவுன்டரில் விவரம் சொல்லி முதலில் பில் போட்டாலே. காதில் விழக் கூடிய இடத்தில் நிற்கும் எல்லோருமே இந்த செக்யூரிடி ஆள் போலவே அவளைத் தவறாகத்தான் கருதுவார்கள்,

இல்லை. இது தேவையில்லை வேண்டாம் என்றாலோ. இந்த மனிதன் அவளை ரொம்பவுமே தப்பாக எண்ணுவான்! அத்தோடு. வீட்டிலும் தேவைக்குக் கம்மியாகிவிடும்! கடைசியாக அவள் தவிர்க்க எண்ணுகிறபடி இன்னொரு தரம் கடைக்குச் செல்ல வேண்டியிருக்கும்!

தலையோ பூவோ எது விழுந்தாலும் தோற்கிற நிலையில் நின்று அவள் திணறுகையில். “என்னப்பா? என்ன விஷயம்?” என்று அந்த அதே குரல் விசாரித்தது!

அவனது சொந்த வழியைப் பார்த்துப் போக வேண்டியதுதானே? அதை விட்டு. இவனுக்கென்ன இதில் அக்கறை?

அனாவசியமாக அவன் அதைக் கேட்டு வைக்க. செக்யூரிடியும் தன் விளக்கத்தைச் சொல்லத் தொடங்கினான்,

சுரீலென்றது உதயாவுக்கு, செக்யூரிடி அவனது விளக்கத்தைத்தானே சொல்லுவான்? அதாவது. அவளைத் திருடி என்று சொல்லாமல் சொல்லுவான்!

சட்டெனக் குறுக்கே புகுந்து. “எல்லாம் உங்களால் வந்தது!” என்று கோபக் குரலில் குற்றம் சாட்டினாள் அவள், “பில்லையும் சாமானையும் சரி பார்க்க விடாமல் கொட்டாவி பாய் தலையணை என்று ஏதேதோ சொல்லி விரட்டினீர்கள், . இப்போது இரண்டு பாக்கெட்டுகளுக்குப் பதிலாக. ஒரு பாக்கெட்டுக்கு மட்டும் பில் போட்டு வைத்திருக்கிறாள் அந்தப் பெண், இந்த செக்யூரிடியானால். படு நாகரீகமாக என்னைத் திருடி என்கிறார், ” என்று படபடத்தவளுக்கு குரல் தளுதளுக்கவும் பேச்சை நிறுத்திச் சட்டென வேறு புறம் திரும்பி நின்றாள்,

யார் யார் என்ன நினைத்தால் அவளுக்கென்ன வந்தது? இதற்குப் போய்க் கண் கலங்கவேண்டுமா? தன் மீதே அவளுக்குக் கோபம் வந்தது இப்போது,

அவன் செக்யூரிடி மனிதனை முறைத்திருப்பான் போலும், அல்லது கேள்வியாய்ப் பார்த்திருக்க வேண்டும்,

ஏனெனில் செக்யூரிடி ஆள் அவசரமாக. “இஇல்லை சார், இஇந்தப் பாக்கெட்டுக்கு இன்னொரு பில் போட்டு வரவேண்டும் என்றுதான் சொன்னேன், அதுக்குப் போய் மேடம் இப்படித் தப்பாக ..... ,” என்று இழுத்தான்,

“சரிசரி, என்ன சொல்லியிருப்பீர்கள் என்று புரிகிறது, ஆனால் ஏதோ ஒரு வகையில் நானும் காரணம் ஆகிவிட்டதால் ,அந்த பில்லையும் பருப்பையும் கொடுங்கள், இங்கே என் பையைப் பார்த்துக் கொள்ளுங்கள், இதோ வருகிறேன், “ என்று காவல் ஆளிடமிருந்து பாதாம்பருப்புப் பாக்கெட்டையும் பில்லையும் வாங்கிக்கொண்டு வேகமாக உள்ளே சென்றான்,

விரைவிலேயே திரும்பி வந்தவனின் கையில் அந்த இரண்டாவது

பாக்கெட் பாதாம் பருப்புக்கான பில் இருந்தது,

இரண்டையும் உதயாவிடம் நீட்டி. "பாவம் சின்னப் பெண், மற்றதெல்லாம் ஒவ்வொரு பாக்கெட்டாகவே வாங்கியிருப்பதால். இதையும் ஒன்று என்று பில்லில் போட்டுவிட்டாளாம், எப்படியோ. நான் செய்த தப்புக்குப் பிராயசித்தம் செய்துவிட்டேன் என்று நினைக்கிறேன், ஆனால் ஒன்று! பாய் தலையணை பற்றி நான் இங்கே பேசவில்லை ஒருவேளை அன்று உறுத்தல் ஏற்பட்டிருந்தால். அதற்கும் சேர்த்து சாரி," என்றான் அவன் இயல்பாக,

சொல்வது அறியாமல் உதயா சற்றுத் திணறிப் போனாள்,

ஒருவாறு சமாளித்து. "அது ..... அந்தப் பெண் எப்படியோ செய்த ஒரு சின்னத் தப்பினால்
," என்று அவள் மேலே ஏதோ சொல்லுமுன் செக்யூரிடி ஆள் அவசரமாகவே குறுக்கிட்டுப் பேசினான்,

அவர்களைப் பணிவாக நோக்கி. "மன்னிக்க வேணும்,. அந்தப் பெண்ணுக்கு பில் போடுவது புதிசு. சார், வழக்கமாக பில் போடுகிற எல்லாரும் சம்பளம் கூட்டிக்கேட்டு. அதற்காக மொத்தமாக வராது இருந்திட்டாங்க, போராட்டமாம், இது. பொருளுங்களை எடுத்துக் கொடுக்க வைக்க உதவியாக இருக்கிற பொண்ணு, திடீர்னு பில்லைப் போடுன்னதும் கொஞ்சம் தட்டுத் தடுமாறிட்டது போல, மமன்னிக்கணும் சார்," என்று விளக்கம் சொல்லி மன்னிப்பும் கேட்டான், "மேடம். நீங்களும் பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டாம். மேடம்!" என்று சற்றுக் கெஞ்சுதலாகவே கேட்டான்,

அங்கே வேலை செய்வதாலேயே. யாரோ ஒரு பெண்ணின் தவறுக்கு இந்த ஆள் இப்படி மன்னிப்புக் கேட்கிறாரே. வேலை செய்கிற நிறுவனத்தின் மேல் இவ்வளவு விசுவாசமா என்று உதயாவுக்கு வியப்பாக இருந்தது,

கட்டடத்தின் வாயிலை நோக்கி நடந்தபடியே தன் வியப்பை அவள் வெளிப்படையாகச் சொன்னாள்,

"ம்ம்ம் .... இருக்கலாம், ஆனால் அதைவிடவும். அந்தப் பெண். அந்த செக்யூரிடி மனிதனுக்கு ஏதாவது உறவாக இருப்பது இன்னமும் அதிக சாத்தியம்," என்றான் அவன் சற்று ..... அக்கறையற்ற குரலில்,

புகார்ப் புத்தகம் வைத்திருக்கும் இடத்தைத் தாண்டிக் கொண்டிருந்தனர்,

ஓரக் கண்ணால் பார்த்தபோது. அந்த இடத்தை இருவரும் கடக்கும்வரை கவனத்துடன் கவனித்த செக்யூரிடி. அப்பாடி என்பது

போல ஒரு பெரிய மூச்சை வெளிவிட்டபடியே பில் போடுகிற பக்கமாகக் கையைத் தூக்கிக் காட்டிவிட்டு அவனது இடத்துக்குச் செல்வது தெரிந்தது.

இவன் ..... ,இந்த சத்யா ..... , சொன்னது சரிதான் போலும்,

இதைப் போலவே ஒருவனைப் பார்த்ததும் அவரைப் பற்றி எல்லாம் சொல்லிவிடும் சக்தி அவளுக்கும் இருந்தால் நன்றாக இருக்கும்

.....

அவளது டு "வீலர் நிறுத்தும் பகுதிக்குச் செல்லும் வழி பிரிந்து போகும் இடம் வந்தது,

அவசரமாகப் பையைத் திறந்து அடுத்த பாக்கெட் பாதாம்பருப்புக்கான பணத்தை எடுத்து நீட்டியபடி எழும்பாத குரலில் ஒரு தரம் நன்றியும் சொன்னாள்,

ஆனால் அவன் அதைக் கவனிக்கவில்லை என்று கண்டு "சார். தாங்க்ஸ்" என்றாள் சற்று உரத்த குரலில்,

புளூ டுத்தில் பேசியபடியே போய்க் கொண்டிருந்த அவனை. அவளது குரல் ஒருவாறு எட்டத் திரும்பிப் பார்த்தவன். அவளது நீட்டிய கரத்தில் இருந்த பணத்தைப் பார்த்ததும் ஒரு கணம் யோசனையாகப் புருவம் சுருக்கினான்,

"அடுத்த பில்லுக்கு
" என்று அவள் விளக்க முற்படும்போதே விஷயம் புரிந்தவனாகப் பணத்தை வாங்கிக்கொண்டு புன்னகை புரிந்தான்.

அன்று கோகுலத்தில் கண்ணன் இப்படிச் சிரித்துதான். அந்தக் கோபிகைகளை மயக்கி இருப்பானோ?

அவள் திகைத்து விழித்துக்கொண்டு நிற்கும்போதே. அவன் விடை பெறும் விதமாகத் தலையை ஆட்டி விட்டுப் போய்விட்டான்,

ஐயோ
பாய் தலையணை பற்றி அவன் இன்று சொல்லவே இல்லைதான், அதைப் பற்றி ஆத்திரமாகக் குறிப்பிட்டதற்கு. அவனிடம் மன்னிப்புக் கேட்கவே இல்லையே!

அது பற்றி எடுத்துக் கூறுவதற்கு. இன்னொரு தரம் அவனை எங்கே சந்திக்கப் போகிறோம் என்று வரப் போன பெருமூச்சு. தொடங்குமுன்னே நின்றது.

இன்றைக்கு என்ன? அவனை எதிர்பார்த்தா சந்தித்தாள்? இன்னொரு முறையும் இது போலவே நிகழக் கூடும்!

என்னவோ மனம் லேசாகிவிட. உதயா ஒரு துள்ளலுடன் வேகமாகச் சென்று தன் வண்டியை எடுத்தாள்.

அடுத்த வாரம் காலை உணவு முடிந்ததும் சூப்பர்மார்க்கெட்டுக்குக் கிளம்பினால். சிவகுருவுடைய பழைய நண்பர் ஒருவர் மகளுக்குத் திருமணம் என்று அழைப்பிதழோடு அங்கே வந்து சேர்ந்தார்,

நண்பர்கள் இருவரும் கடந்த கால மலரும் நினைவுகளை அளவளாவி முடித்து அவர் கிளம்ப மதியமாகிவிட்டது.

அப்போதும். இன்னோர் உறவினர் வீட்டுக்குச் சாப்பிட வருவதாகச் சொல்லி இருந்ததால் மட்டுமே சினேகிதரிடம் பிரியா விடை பெற்றுச் சென்றார்,

உரிய நேரத்தில் வாரச் சாமான் வாங்கச் செல்ல முடியாது போனது. உதயாவுக்கு வருத்தமாக இருந்தது, ஒருவேளை அந்தப் “பாயும்தலையணை” வந்திருந்தால் அவனிடம் மன்னிப்புக் கேட்டிருக்கலாமே!

மாலையில் கடைக்குப் போக அவளுக்கு மனமே வரவில்லை, ஆனாலும் பொருட்கள் தேவைப்படுமே என்று. அரை மனதாகப் பெரிய பையை எடுத்தாள்,

ஆனால் சிவகுரு அவளைத் தடுத்து. “என்னிடம் கொடும்மா, நான் போய் வாங்கி வருகிறேன், அடுத்த வாரத்துக்கு என்று எதேதோ செய்வாயே? நீ அந்த வேலைகளைப் பார்,” என்று கூறிப் பையை அவளிடமிருந்து வாங்கிக்கொண்டு கிளம்பிவிட்டார்,

ஒரு வகையில் அது பெரிய உதவிதான், ஒரு வாரத்துக்கு அணிய வேண்டிய துணி மணிகளை எடுத்துத் தயார் நிலையில் வைப்பது, சமையலில் புளிக் காய்ச்சல். வத்தக் குழம்பு போன்றவற்றைத் தயாரித்து ஃப்ரிஜ்ஜில் வைப்பது. வீட்டை சுத்தம் செய்து. அங்கே இங்கே கிடக்கும் பொருட்களை அடுக்கி வைப்பது என்று பல வேலைகளையும் அவள் ஞாயிற்றுக் கிழமைதான் செய்வது

எல்லாம் செய்து முடித்துவிட்டுத்தான் அவள் படுத்தாள்.

ஆனால். எதையோ செய்யாமல் விட்டுவிட்ட உணர்வில் உதயாவுக்குச் சரிவர

உறக்கம் வர மறுத்தது!

அன்று மட்டுமில்லை அந்த வார முழுமையும் ஒரு திருப்தியற்ற மனநிலை தொடர்ந்து அவளைப் பாதித்தது ஏனென்பது. அவளுக்கே

புரியாத புதிராக இருந்தது,

பிடிவாதமாகப் பல்வேறு நல்ல விஷயங்களை நினைவுபடுத்தி மனதைச் சமன் செய்தபடியேதான் அவள் தன் வேலைகளை ஒருவாறு நல்லபடியாகச் செய்தாள் எனலாம்,

மஞ்சரியே அவளைக் கவனித்துவிட்டு. “வேலை வேலை என்று ஓய்வில்லாமல் உழைத்தது முகத்தில் தெரிகிறது. உதயா, இந்த வார ஓய்வு நாளில். ஏதாவது சினிமா. ஷோ என்று போய் கொஞ்சம் மனதை லேசாக்கிக்கொண்டு. திங்களன்று வழக்கமான உற்சாகத்துடன் வா!” என்று சொல்லி அனுப்பினாள்,

“எனக்கென்ன வந்தது? நீங்கள்தான் நன்றாக ஓய்வு எடுக்க வேண்டும். மஞ்சரி,” என்று அவளிடம் சொன்னபோதும். மற்றவள் கூறியது மெய்தானோ என்று உதயாவுக்கும் தோன்றியது,

ஆனால். இறுக்கம் தளரவென்று எங்கேனும் சென்று வரவோ. அவளது மனதில் உற்சாகமே எழவில்லை.

வீடு தொடர்பான அன்றைய வழக்கமான வேலைகளை முடித்துவிட்டு. ஒரு கதைப்புத்தகத்தை எடுத்துக்கொண்டு உட்கார்ந்து விட வேண்டியது என்று உதயா தீர்மானித்தாள்,

அதன்படியே வார சாமான் வாங்குவதற்கும் சென்றாள்,

வழக்கம்போலச் சாமான்களை சரிபார்க்கும்போது. பக்கத்து கவுன்டரில் பில் போட்டுக் கொண்டிருந்த பெண் அடுத்தவளிடம் ஏதோ சொல்லிவிட்டு. உதயாவின் அருகே ஓடி வந்து. “ரொம்பத் தாங்க்ஸ் அக்கா,” என்றாள்,

நிமிர்ந்து பார்த்தால். அன்று தவறாக பில் போட்டவள்! “சித்தப்பா செக்யூரிடியில் நின்றாரே. அவர் சொன்னார். அக்கா, நீங்கள் புகார் செய்யாததால் என் வேலை. பதவி உயர்வு எல்லாம் பிழைத்தது என்றார், அக்கா, ரொம்பத் தாங்க்ஸ்!” என்றுவிட்டு. மீண்டும் அவளது கவுன்டருக்கு ஓடிப் போனாள்,

“மேடத்தைத் தேடிக்கொண்டே இருந்திருப்பாள் போலும், அடிக்கடி வாயிலையும் வரிசையையும் பார்வையால் அலசிக்கொண்டே இருந்ததைப் போன வாரமே நான் கவனித்தேன்!” என்றது .....அந்த அவன் குரல்,

மெல்லத் திரும்பிப் பார்த்தவளுக்கு. புதிரின் எல்லாப் பகுதிகளும் அதனதன் இடத்தில் விழுந்தது போன்ற உணர்வு! நிம்மதி!

இவனைப் பார்க்காத காரணத்தினாலேயே வார முழுதும் தன் அமைதி கெட்டுவிட்டதாக இன்னமும் அவளுக்கு மனதில் உறுதிப்படவில்லைதான்,

ஆனால். ஞாயிறன்று இப்படி வந்து வீட்டுப் பொருட்களை வாங்குவதும் கூடவே இவனைச் சந்திப்பதும் வழமை போல ஓர் உணர்வு இருந்தது உண்மையே,

அதற்கு மேல் ஏதும் இருப்பதாகவும் அவளுக்குத் தோன்றவில்லை,

எனவே இயல்பாக முறுவலித்து. "அப்படியானால். நீங்களும் வாராவாரம் இங்கே வருகிறவரா? நான் பார்த்ததே இல்லையே," என்று வினவினாள்.

பேசியவாறே உதயா சாமான்களைச் சரிபார்த்து முடித்திருந்தாள், அவள் பணத்தைக் கொடுத்து பில்லில் சீல் போட்டு வாங்கிவரும்வரை காத்திருந்துவிட்டு அவன் பேசினான்,

"வழக்கம் என்று எனக்கு இல்லை, ஆனால் உங்களுக்கு வழமை போலத் தெரிகிறது? போன வாரம் ..... வேறு நேரத்தில் வந்தீர்கள் போல?"

இரண்டு தடவைகளே பார்த்திருந்த போதும். சென்ற ஞாயிறு அவள் வரவில்லை என்று உணர்ந்திருக்கிறான், தேடியிருப்பானோ?

இதமாக உணர்ந்து. அவள் வராத காரணத்தை சிரத்தையோடு எடுத்துச் சொன்னாள் அவள்,

கவனம் காட்டிக் கேட்டான் அவன்,

அவளது பையைத் தூக்கிக்கொண்டு. "இங்கே பின்புறமாக ஒரு காண்டீன் இருக்கிறது, அதில் காஃபி ரொம்ப நன்றாக இருக்கும், ஆட்சேபனை இல்லை என்றால் ..... " என்று பாவனையால் கேள்வி கேட்டான் அவன்,

காண்டீனுக்குப் போய் ஒரு காஃபி குடிப்பதில் என்ன இருக்கிறது?

"ஒரே ஒரு ஆட்சேபம்! என் பையை நானே தூக்கி வருவேன்!" என்று முறுவலித்தவாறு கையை நீட்டினாள் அவள்,

"ஏன்? தூக்கிக்கொண்டு ஓடி விடுவேனோ என்று பயமா?" அவன் புன்னகையோடு கேட்கவும் கூடச் சேர்ந்து சிரித்தவாறே நீட்டிய கையைப் பின்னுக்கு இழுத்துக்கொண்டு. சுற்று முற்றும் பார்த்தாள்,

"உங்கள் சாமான்களின் பை எங்கே?"

“வாங்கினால்தானே இருக்கும்?”

அவள் புரியாமல் ஒரு பரபரப்புடன் நோக்கவும். “இந்தக் காஃபிக்காக மட்டுமே கூட. இங்கே நான் வருவதுண்டு,” என்று சிரித்தான் அவன்,

உள்ளூர எழுந்த சிறு ஏமாற்றத்தை மறைத்து. அவனோடு கூடச் சேர்ந்து சிரித்தாள் அவள்,

அவளுக்காக வந்தானோ என்று எண்ணியது எவ்வளவு மடத்தனம்! நல்லவேளை. வாய் திறந்து அதைக் கேட்டு விடவில்லை!

அவள் கேட்டு. அவன் இல்லை என்று சொல்லி ....எவ்வளவு அவமானம்!

அவளது பக்கத்து இருக்கை மீது பையை வைத்துவிட்டு. காஃபிக்கு ஆர்டர் கொடுத்தான். “சத்ய” என்று தொடங்கும் பெயரை உடைய அவன்,

அவனது முழுப் பெயர் என்ன கேட்கலாமா என்று அவள் யோசிக்கும்போதே. அவன் ஏதோ சொல்லலானான், “அந்த ஸ்கேன் சென்டரில் கூட. உன்னைக் காணோமே! யாரோ பெரியவர்தான் உட்கார்ந்திருந்தார்,” என்று கூறி ஒரு கூடைப் பூவை அவள் தலை மீது சொரிந்தான் அவன்.

அத்தியாயம் - 4

வினாடிக்குள் உதயாவின் மனம் சிறகடித்து வானில் பறந்தது,

ஸ்கேன் சென்டரில் அப்பா உட்கார்ந்திருப்பதைப் பார்த்தான் என்றால். அவளைத் தேடித்தானே அங்கே சென்றிருக்க வேண்டும்? மற்றபடி முந்திய வாரம் இரண்டு ரிப்போர்ட்களை வாங்கிப் போனவன் மீண்டும் ஏன் போகப் போகிறான்?

அவளைத் தேடி அங்கேயும் போயிருக்கிறேன் என்றுதானே சொல்கிறான்?

"அது
அவர் என் தந்தை, சிலசமயம் அவருக்காக அங்கே உட்கார்ந்திருப்பேன்," என்றாள் அவள் மகிழ்ச்சியோடு, "ஆனால் நீங்கள் எதற்காக அங்கே போனீர்களாம்?" என்று சிறு கேலி போலக் கேட்டாள்,

"ஒப்பற்ற கேள்வி, ஸ்கேன் சென்டருக்கு எதற்காகப் போவார்களாம்?" என்று கண்ணால் சிரித்தான் அவன்,

தொத்திக்கொண்ட முறுவலை அடக்க முடியாவிட்டாலும். உள்ளூரக் குழம்பிப் போய். "நீங்கள் சிரிப்பதைப் பார்த்தால். ஏதேனும் பிரச்சினைக்காக அடிக்கடி ஸ்கேன் பண்ணவில்லை என்று புரிகிறது, மற்றபடி சில மாதங்களுக்கு ஒன்று இரண்டு என்றாலே ஒரு குடும்பத்துக்குப் போதுமானதாக இருக்குமே, அன்றே இரண்டு வாங்கிச் சென்றீர்களே!" என்று கேட்டாள் உதயா,

"கணக்கு சரிதான், ஆனால். யாரேனும் அறிந்தவர் தெரிந்தவர். அந்தப் பக்கம் செல்லும்போது ஸ்கேன் ரிப்போர்ட்டை வாங்கி வந்து தருமாறு கேட்டால். செய்யலாமா கூடாதா? அதற்கும் ஏதேனும் எண்ணிக்கைத் தணிக்கை உண்டோ?"

அவன் சொன்ன மாதிரியும் செய்யலாம்தானே? இப்படி யோசிக்காததால். "சொத்"தென்று ஆகிவிட்டது அவளுக்கு,

சற்றே அசடு வழிந்தபோதும். "ஓஹோ! இப்படி ஒரு பரோபகாரமா? ஆனால் நான் எதிர்பார்த்திருக்க வேண்டும், அன்று எனக்காகப் பாதாம்பருப்பு வாங்கி வரவில்லையா?

அன்று நான் அதற்காகச் சரியாக நன்றி சொல்லவே இல்லை, தாங்க் யூ மிஸ்டர் .....சச .....சத்ய .... " என்று முடிக்க முடியாமல் இழுத்தாள் உதயா,

விழி மலர நோக்கிவிட்டு. " .....ரூபன்," என்று முடித்துக்

கொடுத்தான் அவன், “ரிஜிஸ்டரில் பார்த்தாய் போல? பரவாயில்லை, பாதிப் பெயர் நினைவிருப்பதே பெரிதுதான், கையெழுத்திடும்போது கொஞ்சம் கிறுக்கலாகத்தான் எழுதுவேன், “ என்றான் திருப்தியோடு,

சட்டெனத் தட்டை மாற்றிவிட்டானே! ஏதோ அவள்தான் அவனுக்காகத் தேடிய மாதிரிக் கொண்டுவந்துவிட்டானே!

“பின்னே மறக்க முடியுமா? அப்படி எத்தனை பேர் பாயும் தலையணையும் கொண்டு வருவதாகக் கூறப் போகிறார்கள்? “ என்று அவள் திருப்பவும் அவன் வாய்விட்டுச் சிரித்தான்,

பற்பசை விளம்பரம் போல வெளேரென்ற வரிசைப் பற்கள்!

வியப்புடன் அவள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அவன் பேசினான், “அந்த வார்த்தைகள் உன்னை ரொம்பவே உறுத்திவிட்டன போல! அன்று எனக்கு அவசரமாகப் போக வேண்டியிருந்தது, இரண்டு தடவை சரிபார்த்து நேரத்தை வீணடிப்பதாக நினைத்து விட்டேன், பெருமை பேசுவதாக எண்ண வேண்டாம், என்னைச் சற்று நேரம் நிறுத்தி வேண்டும் என்றே சில பெண்கள் அப்படிச் செய்வதும் உண்டு என்பதால் சட்டெனக் கடுமை காட்டிவிட்டேன், ஆனால். அந்த சென்டரில் இந்த இரண்டாம் முறை சரிபார்ப்பது கட்டாயமாகக் கடைப்பிடிக்கும் விதி என்று. அந்தப் பெரியவரும் அதையே செய்தபோதுதான் புரிந்தது, ஆனால் எதற்காக இந்த நேர விரயம் என்றுதான் புரியவில்லை!”

எதற்காக அந்த விதி கடைப்பிடிக்கப் படுகிறது என்று அவளுக்குத் தெரியும், ஆனால் அதை யாரிடமும் கூற முடியாதே!

சிறு கலக்கத்துடன் அவள் யோசிக்கும்போதே. “ஏதோ விதி என்று அமைத்து அதைக் கடைப்பிடிப்பது தெரியாமல். வார்த்தைகளைக் கொட்டிவிட்டேன், அன்றையப் பேச்சுக்கு சாரி. உதயா,” என்று அவளது பெயரைச் சொல்லி மீண்டும் அவளைத் திகைக்க வைத்தான்,

“என் பெயர் எப்ப
, “ என்று வியப்புடன் தொடங்கிவிட்டு. அவனது கண்கள் இடுங்கவும். “ஓ. அப்பா சொல்லியிருப்பார்,” என்று அவசரமாக விடையையும் சேர்த்துச் சொன்னாள்,

முதலில் இருந்தே தான் கொஞ்சம் அசடு போலப் பேசுவதாக உதயாவுக்குத் தோன்றியது. அவனும் அப்படி நினைக்கக் கூடும் என்ற எண்ணமே வெறுப்பாக இருந்தது,

எனவே அதை சமாளிக்க எண்ணி. “இன்று .....சில நாட்களாகவே எனக்குக் கொஞ்சம் டல்லாக இருக்கிறது, அதிகப்படி வேலை என்று

மஞ்சரி .....என் பாஸ் கூடச் சொன்னார்கள், அதனால் ..... “ என்று சொல்லும்போதே. இதுவும் தேவையற்ற பேச்சு போலத் தோன்றவே. தானாக அவளது பேச்சு நின்றது.

ஆச்சரியமாக நோக்கி. “உன் பாசே அப்படிச் சொன்னார்களா? அதாவது. நீ அதிக வேலை செய்வதாக! ரொம்பவே வியப்புக்குரிய விஷயம்தான், ஒன்று அந்தம்மா ஒரேயடியாகப் பக்கா அரிச்சந்திரிணியாக இருக்க வேண்டும், அல்லது. நீ இரண்டு பேர் வேலையை. அது நாலு பேர் வேலையாகக் கூட இருக்கலாம். அவ்வளவு வேலையை ஒற்றை ஆளாக நீ செய்து கொண்டிருக்க வேண்டும்!” என்றான் சத்யரூபன் நிச்சயத்தோடு,

ஓரளவு அதிக வேலை செய்வது உண்மைதான், ஆனால் பாலன் தம்பதி அவளது குடும்பத்துக்குச் செய்திருக்கும் நன்மைகளை நினைக்கும்போது. உதயா செய்வது ஒன்றுமே கிடையாதே,

எதையும் வெளிப்படையாகக் கூற முடியாமல். “நீங்கள் சொல்லும் இரண்டுமே இல்லை, நாலு பேர் வேலையை ஒற்றை ஆளாகச் செய்வதற்கு. நான் என்ன வாயு மைந்தன் அனுமாரா? மஞ்சரிக்கு சற்று உடல் நிலை பலவீனமாக இருப்பதால். கொஞ்சம் அதிக வேலை தான் என்றாலும். ரொம்பவும் அதிகம் என்று சொல்ல முடியாது, அத்தோடு அந்த வேலையை ஏற்றுச் செய்வது என் சுய விருப்பமே தவிர. எந்த விதக் கட்டாயமும் கிடையாது,” என்று முடிந்த மட்டும் விளக்கினாள் உதயா,

“பின்னே செய்வானேன்? அதிக ஊதியமா? மூக்கை நீட்டுவதாகத் தோன்றினால் பதில் சொல்ல வேண்டாம்,”

இப்படிச் சொல்லும்போது எப்படிப் பதில் தராமல் இருப்பது?

“அதிக ஊதியம் தரும் நிலையில் நிறுவனம் இல்லை, அதற்கு நிறைய வளர வேண்டும் ஆனால் என் முதல் வேலையே அவர்களோடுதான், சில ஆண்டுகளாகச் சேர்ந்தே பணிபுரிகிறோம், அதனால் ஒருவருக்கொருவர் ஒரு விதமான அன்பு ஏற்பட்டுவிட்டது, எனக்குத் தேவை என்றால் கணவன் மனைவி இருவருமே உதவி செய்வார்கள், இப்போது அவர்களுக்கு உதவி தேவை என்பதால் நான் செய்கிறேன், “ என்றாள் அவள்,

“ம்ம்ம் . . அதாவது ஏதோ “உடுக்கை இழந்தவன் கை போல “ என்று ஒரு குறள் உண்டே. அது போல உன்னத நட்பு! தேவைப்படும்போது. ஒருவருக்கொருவர் உதவிக் கொள்கிறீர்கள்! சரியாகச் சொன்னேனா? ரைட், பொதுவாக ஒருவர் கேளாமல் தானாக

முந்திக்கொண்டு யோசனை சொல்லக் கூடாது என்பார்கள், ஆனால் இந்த ஒன்றை மட்டும் சொல்லாதிருக்க முடியவில்லை, என்னதான் நட்பு என்றாலும். ஒரு வழிப் பாதையாக உதவி ஒரு பக்கத்தில் இருந்து மட்டும் போய்க்கொண்டு இருப்பது சரியல்ல, அது மட்டும் நினைவிருக்கட்டும்!" என்றான் சத்யரூபன்!

"அப்படி எதுவும் இல்லை. சத்யரூபன், ஏற்கனவே பாலன் சாரும் மஞ்சரியும் எனக்கு நிறைய உதவிகள் செய்திருக்கிறார்கள், இப்போது என் முறையாக நான் கொஞ்சம் செய்கிறேன்," என்று. இன்னதென்று விவரம் கூறாமல் பொதுப்படையாக நிலைமையைத் தெரிவித்தாள் உதயா,

சும்மா வெளியிடங்களில் சந்தித்த ஓர் அன்னியனுக்கு இந்த விவரம் போதும், ஆனால் நெருங்கிய நண்பன் என்றாலுமே. இதற்கு மேல் சொல்ல அவளால் இயலாது,

எனவே சமீபத்தில் பெய்த மழை வெள்ளம் பற்றிப் பேசலானாள் அவள்,

ஒரு கணம் தயங்கினாலும். அவனும் அதில் கலந்துகொண்டான்,

இப்படித் தொடங்கியதுதான், பொதுவாக ஞாயிற்றுக் கிழமைகளிலும். சில சமயம் ஸ்கேன் சென்டரிலும் . இன்னும் ஒரு தரம் ஒரு பெரிய துணிக்கடையிலும் சத்யரூபனும் உதயாவும் சந்தித்தார்கள்,

யாரோ நண்பனுடன். அதே துணிக்கடைக்கு சத்யன் வந்திருந்தான்,

உதயா ரூபனைப் பார்த்தபோது நண்பர்கள் இருவருக்கும் ஏதோ காரசாரமான விவாதம்,

"போடா. உனக்கு ஐடியாக் கொடுக்க என்று வந்தேனே. என்னைச் சொல்ல வேண்டும்!" என்று அந்த நண்பன் தன் தலையில் அடித்துக் கொண்டிருந்தான்,

என்ன பிரச்சினையோ. இந்த நேரத்தில் "ஹாய்" சொல்லலாமோ கூடாதோ என்று உதயா தயங்குகையில். அவளைப் பார்த்துவிட்ட சத்யரூபனின் முகம் பளிச்சென மலர்ந்தது.

"வா வா வா! நல்ல நேரத்தில் வந்தாய். உதயா! ஒரு பெண்ணாய். கூடவே அருமையான சினேகிதியாக என் பிரச்சினையைத் தீர்த்து வைக்க உன்னால்தான் முடியும் என்று சமயம் பார்த்துக் கடவுளாய் அனுப்பி வைத்திருக்கிறார் என்று நினைக்கிறேன்! " என்று உற்சாகமாக அவளை வரவேற்றான்.

வியப்புடன் குறுகுறுவென்று பார்த்தபோதும். “நான் பெண் இல்லை. ஒத்துக் கொள்ளுகிறேன், ஆனால் இரண்டு அக்கா தங்கையுடன் பிறந்து. திருமணமாகி ஒரே மனைவியுடன் சந்தோஷமாக வாழும் என்னைவிட. வேறு யாரால் உனக்குச் சரியான யோசனை சொல்ல முடியும்? அதையும் பார்த்து விடலாம்!” என்று சவால் விடுவது போலக் கூறினான் சத்யரூபனுடைய அந்த நண்பன்,

முருகன். உதயா என்று இருவருக்கும் அறிமுகம் செய்து வைத்துவிட்டு. சத்யன் நேராக விஷயத்துக்கு வந்தான்,

அவனுடைய தாய் தந்தைக்கு விரைவிலேயே திருமண நாள் வரப் போகிறது, அதற்காக இருவருக்கும் துணிமணி வாங்கிப் பரிசளிப்பது என்று மகன் முடிவு செய்திருந்தான், ஆண் மகனாகத் தந்தையின் உடைக்கான துணிகளை இலகுவாக வாங்கி விட்டான், ஆனால் தாயாருக்குத் தேர்ந்தெடுப்பதில் அவனுக்குக் குழப்பம் ஏற்பட்டுவிட்டது, இதுவா. அதுவா? இரண்டுமே சரியில்லையா என்று ஒரே சஞ்சலம்!

வயது ஐம்பத்திரண்டு, படித்து. நல்ல நிலையில் வாழும் பெண்மணிக்கு என்ன மாதிரி அணியப் பிடிக்கும்? உடல் பயிற்சி. தோட்ட வேலை போன்ற சமயங்களில் சல்வார் அணிவது உண்டு என்றாலும். பணி நேரத்தில் சேலைதான், அதுதான் மரியாதையை ஈட்டித் தருகிற கம்பீரமான உடை என்பார்,

திருமண நாள் என்பதால் பட்டுச் சேலை வாங்கினால் பொருத்தமாக இருக்கும்,

இதுவரை சத்யன் முருகன் இருவரின் கருத்தும் ஒன்றேதான்,

ஆனால் துணிக்கடையின் சேலைப் பகுதியில் நுழைந்த சத்யன் குழம்பிப் போனான்,

எத்தனை ரகங்கள்! எத்தனை நிறங்கள்! எத்தனை விதமான வேலைப்பாடுகள்!

அனுபவசாலியாக இருப்பான் என்று தேர்ந்தெடுப்பதில் துணை புரியக் கூட்டிவந்த நண்பன். இன்னமும் அதிகமாக அவனைக் குழப்பிவிட்டான்,

வயது ஐம்பதுக்கும் அதிகம் என்கிறபோது. பட்டுச் சேலை பற்றி விலாசினி ஆன்ட்டிக்கு அதி நாகரீகக் கருத்துகள் இருக்க வாய்ப்பில்லை என்றான் அவன்,

பொதுவாக வெண்ணிறப் பின்னணியில் கண்ணை உறுத்தாத வண்ணங்களில் சிறு பூக்களிட்ட வாயில் சேலைகளையே ஆன்ட்டி

அணிவது வழக்கம் என்றாலும். அது அவர்களது தொழிலுக்கான சீருடை மாதிரி என்று அடித்துச் சொன்னான் முருகன்,

மற்றபடி இந்த மாதிரித் தனிப்பட்ட விழாவுக்கும் அது போலவே வாங்கினால். அது சீருடையே பரிசளிப்பது போலக் கெர்டுமை ஆகாதா என்று அவன் கேட்டபோது. உதயாவும் அதை அப்படியே ஏற்றாள்,

ஆனால் "ஆன்ட்டிக்குப் பொருந்தும்,. பிடிக்கும்" என்று அவன் தேர்ந்தெடுத்த எதையும் அவள் மறு பார்வை கூடத் திரும்பிப் பார்க்கவில்லை,

மிகவும் அழுத்தமான வண்ணங்களில் நிறைய ஜரிகைப் பூக்களுடன் அவை தகதகத்தன, சில சேலைகளில் ஸ்ட்ராவர்ஸ்கி கல் ஒட்டி அந்தப் பளபளப்பு வேறு!

"உங்கள் அம்மா என்ன செய்கிறார்கள்?" என்று கேட்டதற்கு "பெற்றோர் இருவருமே மருத்துவர்கள்" என்று பதில் கிடைக்கவும் அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது,

காரணம் சத்யரூபனின் துறையே வேறு, தங்களது அதே தொழிலில் மகனையும் புகுத்தாமல். அவனது விருப்பம் போல வேறு படித்து. தொழில் செய்யவும் அந்தப் பெற்றோர் அனுமதித்திருந்தார்களே!

அதாவது மகனின் ஆசைகளுக்கு மதிப்புக் கொடுக்கிற விசாலமான மனப் போக்கு! அவர்கள் எப்படிக் கட்டுப் பெட்டி போல. இந்தப் பழைய தினுசான பட்டுகளை விரும்புவார்கள்?

சத்யரூபன் அவள் மேல் வைத்திருக்கும் நம்பிக்கை உறுதியாகி. இன்னும் கூடவும் வேண்டும் என்று உள்ளூர உதயாவுக்கு ஆசை அடித்துக் கொண்டது, எனவே மிகுந்த கவனத்துடன் சேலையைத் தேடினாள்,

அவளது தேர்வு. அவனுடைய அன்னைக்கும் பிடிக்க வேண்டுமே!

எந்தக் காலத்துக்கும் எல்லோருக்கும் பொருந்தக் கூடியதாகத் தாமரைப் பூவின் இதழ் வண்ணத்தில். அங்கங்கே தங்க நிறத்தில் ஜரிகையால் வேய்ந்த தாமரைப் பூக்களுடன் சின்னக் கோடாக ஜரிகை பார்டருமாக ஒரு சேலையை அவள் பொறுக்கி எடுத்துக் காட்டவும். நண்பர்கள் இருவரும் வாயடைத்துப் போனார்கள்,

"பிரமாதம்!" என்று மனதாரப் பாராட்டினான் சத்யரூபனுடைய நண்பன், "அப்பாடியோவ்! நல்ல வேளைப்பா. எதற்கும் கூட வா என்று மனைவியை அழைத்து வராமல் இருந்தேன், இப்படி எனக்கும் தெரிவு

செய்து தாருங்கள் என்று உங்களைத் துளைத்து எடுத்து. எனக்கும் நல்ல செலவு வைத்திருப்பாள்! தப்பினேன் சாமி!" என்று பாவனையுடன் அவன் கூறவும் மற்ற இருவரும் சேர்ந்து நகைத்தனர்,

"ரொம்பச் சொல்ல வேண்டாம். அண்ணா! இன்னும் ரூபனுடைய அம்மாவுக்கு இது பிடிக்க வேண்டுமே," என்றாள் உதயா சிறு கவலையோடு!

"அதற்கு வாய்ப்பே கிடையாதும்மா, ஆனால். நூற்றில் ஒரு வாய்ப்பாக அப்படி ஏதும் நேர்ந்தால். சேலையைத் திருப்பிக் கொடுத்து விடாதே. சத்து, பெண்டாட்டி கருமுறு எனும்போது தாஜாப் பண்ண நான் வாங்கி வைத்துக் கொள்கிறேன்," என்றான் நண்பன்,

சத்யரூபன் வாய் விட்டு நகைக்கவும். "இதெல்லாம் இப்போது தெரியாது நண்பா, காலம் வரும்போது கட்டாயமாகச் சொல்லிக் காட்டுகிறேன். பார்!" என்று அவன் ஆரூடம் சொல்ல அதற்கும் மற்ற இருவருக்கும் சிரிப்பு வந்தது,

சிரிக்கும்போதே நினைவு வந்தவனாக "நீ என்ன வாங்க வந்தாய். உதயா? எனக்கு உதவப் போய். உன் வேலை கெட்டுவிட்டது போல இருக்கிறதே! இதற்கு மேல் உனக்கு அவகாசம் இருக்கிறதா? உடனே போக வேண்டுமா? " என்று சிறு கவலையுடன் சத்யன் விசாரித்தான்,

"சொல்லுங்க சிஸ்டர், நாங்கள் ஏதேனும் உதவக் கூடும் என்றால். எங்களுக்குத் தெரிந்த அளவில் செய்கிறோம்," என்றான் முருகன்,

புன்னகை புரிந்து. மறுப்பாகத் தலையசைத்தாள் உதயா, "உங்களால் உதவ முடியாது, ஆனால். எனக்குப் பெரிய வேலை ஒன்றுமில்லை, என் பாஸ் மேடத்துக்காக
அவர்கள் இப்போது ஈருயிராக இருப்பதால் வேறு மாதிரி சில உடைகள் தேவைப் படுகிறது, இங்கே அந்தப்பிரிவு ஒன்று இருக்கிறது, நேரே அங்கே போய். அளவு சொல்லி வாங்கிப் போக வேண்டியதுதான், வரட்டுமா? " என்று கிளம்பினாள்.

"ஒரு நிமிஷம்!" என்று அவளை நிறுத்திய சத்யரூபனின் முகத்தில் புன்னகை மறைந்திருந்தது, "உன் பாசுக்கு உதவி செய்வது பற்றி முன்பே ஒரு தரம் சொன்னேனே. அது நினைவிருக்கிறதுதானே? அலுவலகம் தாண்டியும் உதவி வட்டம் பெருகுவது போலத் தெரிகிறதே!" என்றான் அவன் ஒரு மாதிரிக் குரலில்,

ஒரு சங்கடமான அமைதியில் சில வினாடிகள் கடந்தன,

சத்யரூபனின் பேச்சு உதயாவுக்குப் பிடிக்கவில்லை,

அவளுக்காகத்தான் சொல்லுகிறான் என்பது அவளுக்குப் புரியாமல் இல்லை, அந்த அளவில் அவளுக்கு சந்தோஷமும் கூடத்தான்,

ஆனால் அவனது கரிசனம் இந்த விஷயத்தில் அவளுக்கு வேண்டாதது, மஞ்சரிக்கு அவள் எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறாள் என்று அவனுக்கு என்ன தெரியும்?

ஆனால் அது பற்றி விளக்கிச் சொல்லவும் இயலாது எனும்போது. அவளுக்குக் கையாலாகாத கோபம் வந்தது, அவள் என்ன. தன்னைப் பார்த்துக்கொள்ளத் தெரியாத முட்டாளா? அவளைப் பார்த்தால் ஏமாளி போலவா தெரிகிறது?

ஆனால். அவனுடைய நண்பன் முன்னிலையில் அந்தக் கோபத்தைக் காட்டுவதும் அவளுக்குத் தவறாகத் தோன்றியது, அன்றுதான் அறிமுகமானபோதும். சகஜமாகப் பழகுகிறவன்,

எனவே சிரமப்பட்டுக் குரலை இயல்பாக வைத்துக்கொண்டு. “ஹையோ! உங்களிடம் அடித்த அரட்டையில் நேரம் போனதே எனக்குத் தெரியவில்லை,

வீட்டுக்குப் போய்
“ என்றவளின் பேச்சில் குறுக்கிட்டு. “சமைக்க வேண்டுமாக்கும்?” என்று ஏளனமாகக் கேட்டான் சத்யன்,

“பின்னே? பூரி சன்னா. சாம்பார் சட்டினியோடு மசாலாத் தோசை. இனிப்புக்கு ஒரு கேசரி
இத்தனையும் இல்லாமல் நானோ. அப்பாவோ சாப்பிடுவோமா என்ன? அப்புறம் எங்கள் உடம்பு என்னாவது?” என்று அவள் மடமடவென்று அடுக்கிய விதத்தில் முருகன் வாயைப் பிளந்தான்,

“ஐயோ! இரவில் இத்தனை சாப்பிடுவீர்களா? உங்களைப் பார்த்தால் இலை தழைகளில் காலம் கழிக்கிற விதம் என்று நினைத்தேனே!” என்று அதிசயித்தான்,

“ஏய். போடா, அதிக வேலை செய்யவேண்டாம் என்று சொன்னேனாம், அதற்காக வேண்டும் என்று அளக்கிறாள், மற்றபடி நீ சொன்ன ரகம்தான்,” என்று சத்யரூபன் அலுப்புடன் கூற. “அதுவுமில்லை. இதுவுமில்லை, ஆனால் எங்கள் வீட்டில் ஓரளவு ஆரோக்கிய உணவாக இருக்கும், இலகு தயாரிப்பாகவும் இருக்கும், நான் அதிக நேரம் சமையல் அறைக்குள் நின்றாலே என் அப்பாவுக்குத் தாங்காது, நான் கிளம்பட்டுமா? ஓ. இதைச் சொல்ல மறந்து போய்விட்டேனே! ஏதோ ஓர் அதிசயமாக. உங்கள் அம்மாவிடம் இதே போல இன்னொரு சேலை இருந்தால். ஒரு வாரத்துக்குள்

மாற்றிக்கொள்ள வேண்டும், மறந்துவிட வேண்டாம், வருகிறேன் முருகன் சார், வருகிறேன் சத்யன்," என்று வேகமாகப் பேசியவள். அந்த வேகம் குறையாமலே அங்கிருந்து விலகிச் சென்றுவிட்டாள,

ஓரக் கண்ணால் நண்பனின் முகத்தை நோட்டம் விட்ட முருகன் சேலையை. முந்தானையில் குஞ்சலம் அடிக்க அனுப்பினான், "அரை மணி நேரம் ஆகுமாம், உட்கார்ந்திருப்போமா?" என்று ஒரு புறமாகப் போடப் பட்டிருந்த இருக்கைகளைக் காட்டினான்,

இருவரும் அமர்ந்ததும் மெல்லக் கேட்டான், "என்னப்பா. என்ன பிரச்சினை?"

"பிரச்சினை என்கிற அளவுக்கு எதுவும் இல்லை, ஆனால் அவளுடைய முதலாளிகளுக்கு அளவு மீறிப் பணி செய்கிறாள், எடுத்துச் சொன்னால் காதில் வாங்குவதே இல்லை," என்றான் மற்றவன் எரிச்சலாக,

"ஒருவேளை .... அவர்களது பணி ஒப்பந்தம் எப்படி இருக்கிறதோ?"

"அதெல்லாம் ஒரு மண்ணாங்கட்டியும் இல்லை, இவளுக்கு இளகிய மனம், வேலை செய்வது கணவனும் மனைவியுமாக நடத்தும் சின்ன நிறுவனத்தில், இவளது குணம் புரிந்து. அதைப் பயன்படுத்திக்கொண்டு. இன்னோர் ஆள் கூட வைக்காமல் இவளையே வேலை வாங்குகிறார்கள், அதைப் பற்றிப் புரிய வைக்கலாம் என்றால். உடனே காந்திஜியின் மூன்று குரங்குகள் போலக் கண். காது. வாய் எல்லாவற்றையும் மூடிக் கொள்கிறாள், இத்தனைக்கும் முட்டாளுமில்லை!" என்று பொருமினான் சத்யன்,

"நானும் அப்படித்தான் நினைத்தேன், சேலை தேர்ந்தெடுத்ததையே பார்! ஆன்ட்டிக்கு ரொம்பப் பிடித்துப் போகும், " என்ற முருகன். மறுபடியும் ஓரக் கண்ணால் நண்பனைக் கூர்ந்தான்,

"நிறையச் சொல்கிறாயே! ஏதேனும் நல்ல விஷயமா? ஆன்ட்டி கூட அன்று என் மனைவியிடம் குறைப்பட்டார்களாம், "ஒன்றாகப் படித்தவர்கள், நீ இரண்டாவது செக்கப்புக்காக வந்திருக்கிறாய், உன் புருஷனிடம் சொல்லி அவனிடம் பேசச் சொல்லேன்" என்றார்களாம், . "

"அது சரி! பெரிய மருத்துவர்கள், நர்சிங் ஹோம். நர்சிங்ஹோம் என்று நின்று பேச நேரம் இல்லாத மாதிரி வீட்டில் பறக்கிறார்கள், இதுபோல அக்கப்போர் அடிப்பதுதான் அங்கே செய்கிற மிகப் பெரிய

வேலையாக்கும்!” என்று சிரித்தான் சத்யரூபன்,

“சிரிப்பது இருக்கட்டும், நல்ல சேதி வரப் போகிறது என்று ஆன்ட்டியிடம் சொல்லி விடலாமா?” என்று அதிலேயே நின்றான் முருகன்,

“ஐயோ! உதயா கையால் நான் அடி வாங்க வேண்டும் என்று உனக்கு என்ன அவ்வளவு ஆசை? வாயை மூடிக்கொண்டு சும்மா இருப்பா, காற்று வாக்கில் கேட்டுவிட்டு. கையில் எதையாவது ஓங்கிக்கொண்டு வந்தாலும் வந்துவிடுவாள்,” என்று சத்யன் கண்ணை உருட்ட. மெய்யாகவே உதயா அவர்களை நோக்கி வருவதைக் கண்டு சினேகிதர்கள் இருவருமே திகைத்துப் போயினர்,

“சத்து. உன்னிடம் தனியே பேச எண்ணி வருகிறாளோ என்னவோ? நான் வேணுமானால். அவசர வேலை என்று காணாமல் போய்விடட்டுமா?” என்று தணிந்த குரலில் முருகன் கிசுகிசுத்தான்,

உதயாவைப் பார்த்து முறுவலித்தவாறே எழுந்தபடி. “இப்போது நீ என்னிடமே வாங்கிக் கட்டப் போகிறாய் என்று தோன்றுகிறது, உளறிக் கொட்டாமல் சும்மா இரு!” என்று மற்றவனைப் போலவே குரல் தாழ்த்தி எச்சரித்தான் சத்யரூபன்,

அருகில் வந்துவிட்ட உதயாவைப் பார்த்து. “என்ன உதயா? எதையாவது இங்கே விட்டுவிட்டுப் போய்விட்டாயா?” என்று வினவினான்,

“ஊசாம் அதில்லை, இந்தச் சேலை “சாஃப்ட் சில்க்” ரகம், சேலை பிடித்துப் போனால். குஞ்சம் அடிப்பதோடு. “ஃபால்சு”ம் தைக்கச் சொல்லுங்கள், அதைச் சொல்லத்தான் வந்தேன், வரட்டுமா? வருகிறேன் முருகன் சார்,” என்றவள் பேசியபடியே திரும்பி நடந்து காணாமலும் போனாள்,

முருகன் திகைத்து நோக்க. மற்றவன் தோளைக் குலுக்கினான்,

“ம்ம்சாம், என்னவோ இருக்கிறது என்பது சர்வ நிச்சயம், உன் அம்மாவின் சேலைக்காக இவ்வளவு அக்கறையாக வந்து சொல்லிவிட்டுப் போகிறாள்? நான் இல்லை என்றால் உன்னோடு கொஞ்சம் ‘ங்சூ’மிங்சூ’ பேசலாம் என்றுதான் வந்திருக்கிறாள், இந்த அண்ணனிடம் மரியாதையாக உண்மையை ஒப்புக்கொள் தம்பி!” என்றான் முருகன்,

“என்னது. தம்பியா? அது சரி! நீங்கள் எப்போது எனக்கு மூத்தவர் ஆனீர்கள் அண்ணாச்சி?”

“அனுபவப் பெரியவன் தம்பி, இரண்டாவதைப் பெறப் போகிறேனே!”

“மறுக்க முடியாத உண்மை! ஆனால். இத்தோடு நிறுத்திக்கொள். தம்பி, மற்றபடி உன் வேகத்தை இந்த நாடு தாங்காது!”

“சந்தடி சாக்கில் என்னைத் தம்பியாக்கி விட்டாயா?”

“இது புத்திசாலித்தனத்தில் நண்பா! இதுவும் மறுக்க முடியாத உண்மைதான்!”

சிரிப்பும் கேலியுமாக விஷயம் முடிந்தது என்று சத்யரூபன் எண்ணியிருக்க. ஒரு நாள் காலை உணவின்போது. அந்தச் சேலை பற்றிப் பேச்சு வந்தது,

“அது என்னடா. எனக்காக மகா அழகான சேலை ஒன்று வாங்கியிருக்கிறாயாமே! நேற்று செக்கப்புக்கு வந்த மாலா சொன்னாள், எனக்கும் காட்டேன், அவள் சொல்லுகிற மாதிரி ஓஹோ என்று இருந்தால் பிளவுஸ் தைத்து. திருமண நாளன்று பார்ட்டிக்கு அதையே கட்டிக் கொள்கிறேன், “ என்று கேட்டாள் ரூபனுடைய தாயார் விலாசினி,

காலை உணவு மட்டும் அந்தக் குடும்பம் சேர்ந்து உண்பது, அந்த ஒரு நேரத்தில் கூடச் சந்திக்காவிட்டால். ஆள் அடையாளமே மறந்து போய்விடும் என்று வீட்டுத் தலைவியாய் அந்த அன்னை செய்த ஏற்பாடுதான்,

“முருகன் வேலையா?” என்று முணுமுணுத்தபோதும் சத்யனுக்கு உள்ளூரச் சிரிப்புதான் வந்தது, “சாப்பிட்டதும் எடுத்து வந்து காட்டுகிறேன்,” என்று ஒப்புக் கொண்டுவிட்டு. “என்னம்மா. முருகன் மனைவி அடிக்கடி மருத்துவமனைக்கு வருகிற மாதிரி இருக்கிறதே!” என்று நண்பன் மனைவி பற்றி விவரம் கேட்டான்,

“ஆமாமடா, அவளுக்குக் கருப்பையில் ஒரு பிரச்சினை இருக்கிறது, டீனேஜில் அவளுக்குத் தட்டம்மை போட்டிருக்கும் போல! பிள்ளை வளர்ச்சியில் சிறு பாதிப்பு, உணவிலும் ஓய்விலுமாகச் சரியாகிவிடக் கூடியதுதான், அதுதான் மாதாமாதம் பரிசோதனை செய்து பார்த்துக்கொண்டே இருக்கிறேன்,” என்றாள் விலாசினி,

ஏதோ மெடிகல் பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்த ரங்கநாதன் நிமிர்ந்து. “சொல்லுகிறபடி புரோட்டீன் அதிகம் உள்ளதாகப் பார்த்துச் சாப்பிட்டு. கொஞ்சம் அதிக ஓய்வும் எடுத்துக் கொண்டாலே போதும், பயப்படத் தேவையில்லை என்று உன் நண்பனிடம் சொல்லு,”

என்றார் மகனிடம்,

சேலை விலாசினிக்கும் மிகவும் பிடித்துப் போயிற்று,

வெறுமனே பிடித்தது மட்டுமல்ல, “இரண்டு தடியனுகளுமாகச் சேர்ந்து ஆறேழு ஆண்டுகளாக வாங்குவதை நானும் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறேன், இது உங்கள் தேர்வு அல்ல, சும்மாச் சொல்லுங்கள்! இதைத் தேர்வு செய்தது யார்? ஒரு பெண்தானே? “ என்று மகனிடம் கேட்டாள்,

“ஆமாம்மா,” என்றான் மகன் சுருக்கமாக,

“ம்ம்ம் முருகன் மனைவிக்கு ஜரிகையை அள்ளிக் கொட்ட வேண்டுமே, இது அவள் தேர்ந்தெடுத்தது அல்ல, அல்லதானே?”

சத்யன் எதிர்பார்த்ததுதான், தாயார் குடையத் தொடங்கிவிட்டாள்!

“உங்களுக்குப் பிடித்த மாதிரி இருக்க வேண்டும் என்று எனக்கு ஆசை, தற்செயலாக முன்பே அறிமுகமான ஒரு பெண்ணை ஜவுளிக்கடையில் சந்தித்தோம், அவளைக் கூப்பிட்டு ... அவள் தேர்ந்தெடுத்ததுதான்,” என்றான் அவன் சற்று யோசனையாக,

சேலையை ஒரு தரம் வருடிப் பார்த்துவிட்டு. “அந்தப் பெண்ணை நான் பார்க்க வேண்டுமே!” எனன்று மகன் எதிர்பார்த்த கேள்வியை விலாசினி கேட்டாள்,

அத்தியாயம் - 5

இந்தக் கேள்வி சத்யன் எதிர்பார்த்ததுதான்,

சில ஆண்டுகளாகவே. தன் முதல் குழந்தைக்காக மருத்துவ ரீதியாக நண்பனுடைய தாயை முருகன் அணுகியதில் இருந்தே திருமணம் செய்துகொள்ளும்படி விலாசினி மகனைக் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறாள்,

புதுத் தொழில் புது மனைவி இரண்டு பெரிய விஷயங்களையும் ஒன்றாகச் சமாளிக்க முடியாது என்று முதலில் சத்யன் தள்ளிப் போட்டு வந்தான்,

வெற்றிகரமாகத் தொழில் நடத்தும் இரு மருத்துவர்களுடைய மகன், அவனும் தனக்கென ஒரு தொழிலைத் தொடங்கி லாபகரமாக நடத்துகிறவன் என்பது திருமண மார்க்கெட்டில் அவனை உயர்த்தியிருந்தது போலும்,

அதனால் ஏற்பட்டிருந்த சில அனுபவங்கள் அவனுக்கு அவ்வளவு உகந்தவையாக இருக்கவில்லை, எனவே அந்தப் பேச்சை எடுக்கவே பொதுவாக அவன் இடம் கொடுப்பதில்லை,

இப்போதும். “அந்தப் பெண்ணைப் பார்க்க வேண்டும்” என்று தாயார் கேட்டதின் அடிப்படைக் காரணம் அவன் அறிந்ததே,

விசித்திரமான வகையில். வழக்கமான சிறு எரிச்சல் அவனுள் எழவில்லை, மாறாகச் சிரிப்புதான் வந்தது,

உதயாவைப் பற்றி அறியாமல் என்ன கற்பனை பண்ணுகிறார்கள்! வேலை வேலை என்று அவள் பறப்பது தெரிந்தால் ..... ஆச்சரியப்பட்டுப் போவார்கள்,

அல்லது. தன்னைப் போல ஒருத்தி என்று மதிப்பு உண்டாகுமோ? தாயாருக்கும் வேலைப் பைத்தியம் உண்டுதான், ஒத்த ஜோடியாகத் தந்தைக்குமே,

என்னதான் உன்னதமான தொழில் என்றாலும். தன் எதிர்காலத்துக்காக அதை அவன் தேர்ந்தெடுக்காத காரணமே. சிறு வயதில் பலநாட்கள் வீட்டில் அவன் தன்னந்தனியே இருக்க நேர்ந்தது என்று கூடச் சொல்லலாம்,

எதற்கும்
“,அம்மா. உடனே ஏதாவது கற்பனை பண்ணத் தொடங்கி விடாதீர்கள், எங்களுக்குள் வெறும் அறிமுகம்

அவ்வளவுதான்," என்று தாயை எச்சரித்தான்,

சட்டென முகத்தில் தோன்றிய சிறு வாட்டத்தைச் சமாளித்து. "ஓ! எப்படியும் சேலை எனக்கு மிகவும் பிடித்துப் போயிற்று, அதற்கு நன்றி சொல்லலாம் இல்லையா? ஒரு நாள் கூட்டி வாயேன், " என்று கேட்டான் அன்னை,

"அவள் ஓர் இடத்தில் வேலை பார்க்கிற பெண். அம்மா, மீண்டும் பார்க்க நேரும்போது கேட்கிறேன்," என்றான் மகன்,

கவனத்துடன் சாதாரணமான குரலில் தாயிடம் கூறியவனுக்கு உள்ளூர "ஏன் கூடாது" என்று தோன்றியது,

ஆனால் உதயா வருவாளா?

ஒரு காஃபி அருந்த அழைத்தால் மறுப்பதில்லை,. முகம் திருப்பியதும் இல்லை, ஆனால் அதை வைத்து. அம்மா நினைப்பது போல எந்தக் கற்பனையும் செய்வது சரியாகுமா?

இப்படி யோசிக்கும்போதே. அப்படிப்பட்ட கற்பனைகள் வேகமாக எழுவதை சத்யரூபன் ஒரு சந்தோஷத்துடன் உணர்ந்தான், கூடவே சிறு பயத்தையும்!

உதயாவுக்கு அந்த மாதிரி எண்ணம் ஏதேனும் இருக்கிறதா?

எந்த விதத்திலும் அவள் அதைக் காட்டியது இல்லை, ஏதேனும் சாக்குப் போக்குக் காட்டி அவள் பேச்சை வளர்த்தது இல்லை, சொல்லப் போனால். வேலை வேலை என்று ஓடுவதுதான், ஞாயிற்றுக் கிழமைகளில் சூப்பர் மார்க்கெட்டில் பார்க்கும்போது கூட. அடுத்த வாரத்துக்கான பலவற்றைத் தயார் நிலையில் வைத்துக் கொண்டால்தான். வேலைக்குச் செல்லும்போது இலகுவாக இருக்கும் என்று சொல்லிக் கிளம்பி விடுவாள், அனாவசியமான இளிப்பு. நெளிப்பு ..... எதுவுமே அவன் பார்த்தது இல்லை,

ஆனால்
திடுமென ஒன்று நினைவு வந்தது, முருகனைச் சட்டென்று அண்ணா என்று அழைத்தது போல. அவனைச் சகோதர உறவு சொல்லி அழைத்தது இல்லை!

ஆனால் அதையும் பெரிதாகச் சொல்லிவிட முடியாது, அவனும் உதயாவும் பழக நேர்ந்த விதமே வேறு,

ஒரு நண்பனுடைய நண்பனை முதல்நாள் அழைக்க அது சரியான பதமே, மிஸ்டர் முருகன் என்று நீட்டி முழக்கினால். முன்னவனையே யாரோவாக்கியது போல ஆகிவிடும், இவ்வளவு நாள் பார்த்துப் பழகிய

பிறகு. சத்யனாலேயே அதை ஒப்ப முடியவில்லை,

ஆனால் இப்படிக் கூப்பிட்டால். அது உதயாவை எதற்கோ நெருக்குவது போலத் தோன்றுமோ? ஆனால் இப்படியே எத்தனை காலம் இருப்பது? அடுத்த அடி எடுத்து வைத்துத்தானே ஆகவேண்டும்?

அடுத்த ஞாயிறன்று சந்தித்தபோது. சத்யரூபன் தாயின் விருப்பத்தை உதயாவிடம் தெரிவித்தான், சேலைக்காக நன்றி சொல்லத் தாயார் விரும்புவதால். பெற்றவளைச் சந்திப்பதற்குத் தன்னோடு வருமாறு அவளை அழைத்தான்,

“எப்போது உனக்கு வசதிப்படும் என்று தெரிவித்தால் நான் வந்து கூட்டிப் போகிறேன்,” என்றான் நிதானமாக,

உதயா சற்றுத் திணறிப் போனாள்,

சேலை பிடித்திருந்தால். அதை மகன் வழியே தெரிவித்தால் போதும், அதைத் தெரிவு செய்தவளை ஏன் பார்ப்பது? ஆனால் மறுப்பதும் சரியாகத் தோன்றாமல் போகவே. உதயா சற்றுத் திணறினாள்,

பல ஆண்டுகளாக மருத்துவப் பணியை வெற்றிகரமாக நடத்தி வருகிறவள் நேருக்கு நேர் பார்ப்பதிலேயே என்னென்ன கண்டுபிடிப்பார்களோ?

மறுப்பாகத் தோன்றாத விதமாகச் சந்திப்பதைத் தள்ளிப் போட முயன்றாள் அவள்,

“சத்யன். உங்களுக்கே தெரியும். வேலை நாட்களில் என்னால் முடியாது என்று ....,” என்று மெல்ல இழுத்தாள்,

“பணியில் உன் விசுவாசம் எனக்குத் தெரியும், அது எனக்குத் தெரியும் என்பது உனக்கும் தெரியும், அப்படி இருக்கப் பணி நேரத்தில் உன்னைக் கூப்பிடுவேனா? ஆனால் ஒரு சந்தேகம், வேலை நாட்களிலும் மதியம் சாப்பிடுவாய்தானே? அல்லது “காற்றையுண்டு உயிர் வாழ்வேன்” என்று பழைய பாடல் ஒன்றில் வருவது போல. உனக்கும் தனிப்பட்ட சக்தி ஏதாவது இருக்கிறதா?” என்று நையாண்டியாகக் கேட்டான் சத்யரூபன்,

அவன் கூப்பிட்ட உடனே சரியென்று ஓடி வரவில்லை என்று எரிச்சல் படுகிறான்,

எதற்காகத் தயங்குகிறாள் என்று யோசிப்பதில்லையா?

“அது போலெல்லாம் ஒன்றும் ....அந்தப் பாம்புகளுக்கே

கிடையாது என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும்! ஆனால் ..... ரூபன். நான் தயங்குவதன் காரணம் .....அவர்கள் தப்பாக எதுவும் எண்ணி விடக் கூடாதே என்றுதான் .....” என்று முடிக்காமலே நிறுத்தினாள் உதயா,

“என்ன தப்பாக? “

“அது
,“ என்று தொடங்கியவளுக்கு அப்போதும் வாக்கியத்தை முடிக்க முடியவில்லை,

ஆனால் உதயா சற்றும் எதிர்பாராத விதமாக. தயக்கமே இல்லாமல். “நாம் இருவரும் நேசிக்கிறோம் என்றா?” என்று கேட்டு அவளது பேச்சை அவன் முடித்து வைத்தான்,

இவ்வளவு வெளிப்படையாகக் கேட்பான் என்று எதிர்பாராததால். உதயா அதிர்ந்து போனாள்.

தடுமாற்றத்தைச் சமாளித்தபடி. “அஅதில்லை. சத்யரூபன். நீங்கள் பெரிய வீட்டுப் பிள்ளை நான் வேறு மாதிரி, அதனால் நான்
உஉங்களை
..... , “ என்று அவனுக்குப் பதிலைச் சொல்ல முயன்றாள் அவள்,

இப்போதும் சத்யன் வெளிப்படையாகவே “மயக்க முயற்சிப்பதாகவா? அப்படி நினைத்தால். அது தப்புதான், அப்படி ஒரு வீண் முயற்சியை நீ ஏன் செய்யப் போகிறாய்?” என்று அவளது பேச்சைப் புரிந்துகொண்டு பதிலையும் சொல்லி முடித்தான்,

ஆனால் அவனது பதிலில் உதயாவின் உள்ளம் துவண்டு போயிற்று!

வீண் முயற்சி என்றுவிட்டானே!

அதாவது சத்யன் ஒரு நாளும் அவளை அது போன்ற உயர்ந்த நிலையில் எண்ணிப் பார்க்கப் போவதே இல்லை என்று சொல்லாமல் சொல்கிறான், இந்த அசட்டு மனதில் ஏதேதோ எண்ணங்கள் தோன்றும்போதெல்லாம் அடக்கி வைத்தது ரொம்பவே சரிதான்!

நல்லவேளை! ஒளிவு மறைவின்றி இருப்பதாக எண்ணி மனதில் இருப்பதை வெளிப்படையாகக் காட்டாமல் இருந்தாளே! அந்த மட்டும் இப்போது. சுய கௌரவமாவது மிஞ்சியது!

ஆனால் அதில் மகிழ்ச்சி அடைய முடியாமல். இப்படித் தன்மானம் காப்பது இவ்வளவு வலிக்கும் என்று அவளுக்குத் தெரியவே தெரியாதே! மூச்செடுக்கக் கூட முடியாத மாதிரி என்ன வலி இது!

உதயா தவித்துக் கொண்டிருக்கையில். சத்யன் மீண்டும் பேசினான்,

“என்ன பதிலையே காணோம்? நான் சொன்னது சரிதானே?” என்று கேள்வி வேறு கேட்டான்!

பெரு முயற்சி செய்து ஓசையற்று ஒரு பெரிய மூச்சை எடுத்துக்கொண்டு. “இஇம், ஆஆமாம்! நீங்கள் சொன்னது சசரிதான்,” என்று ஒருவாறு சொல்லி முடித்தாள் அவள்,

கடவுளே. இந்தச் சித்ரவதை எப்போது முடியும்? வீட்டில் வேலை இருக்கிறது என்று கிளம்பி விடலாமா? இதற்கு மேல் தாங்காது போல இருக்கிறதே! மூக்கு விடைத்து .....கண்ணோரம் கரித்து ..... ,

கண்ணீர் வழியுமுன் கௌரவமாகக் கிளம்பிவிடக் காரணம் சொல்ல அவள் மனதைத் திடப்படுத்திக் கொண்டிருந்தபோது. ரூபனின் குரல் மீண்டும் கேட்டது,

“கரெக்ட்! ஏற்கனவே மயங்கிக் கிடப்பவனை மீண்டும் மயக்க முற்படுவது வீண் முயற்சிதானே? மடத்தனமானதும் அல்லவா?” என்று கூறியது அவனது குரலேதானா?

முகம் பளிச்சிட அவளது விழிகள் அகன்று விரிந்தன,

ஆனாலும் நம்ப மாட்டாமல். “நீ நீங்கள் எஎன்ன சொல்லுகிறீர்கள்?” உறுதிப்படுத்திக் கொள்ளத் துடித்தாள் உதயா,

அவன் விரும்பிய சேதியை அவளது முகபாவத்தில் கண்டு கொண்ட சத்யனின் குரலில் உல்லாசம் தெரிந்தது, “ம்ம்? என்ன சொன்னேனா? சென்னையில் காக்காய் கத்துகிறது,. குருவி பறக்கிறது என்றேன், உண்மையில். உன் மனதில் அந்த மஞ்சரி மேடம் பாலன் சார் தவிர வேறு ஏதாவது இருக்கிறதா என்று எனக்கு ஒரே சந்தேகம் உதயா! வேலை வேலை அது தொடர்பான மற்ற வேலைகள் என்று. அது தவிர வேறு எதுவும் உன் காதில் ஏறுவதாகவே இல்லையே! இப்போது கூட. நான் கூறியதைச் சரியாகக் கேட்டாயா என்று எனக்குக் கொஞ்சம் சந்தேகம்தான், அந்த மஞ்சரி மேடத்துக்கு என்ன குழந்தை பிறக்கும் என்ற கற்பனையில் என் பேச்சு உனக்குப் புரிந்ததோ இல்லையோ என்று. இன்னும் கூடச் சற்றுப் பயமாகத்தான் இருக்கிறது!”

“ரூபன்! அப்படி எல்லாம் இல்ல் .....லைப்பா!” என்றவளுக்குச் சட்டெனக் கண்களில் நீர் சுரந்து வழிந்தது,

“ஏய். என்னதிது? எதற்கு இந்தக் கண்ணீர்?” என்று பரபரப்புடன் கேட்டான் அவன்,

ஒன்றுமில்லை என்பது போல லேசாகத் தலையசைத்தாள் உதயா, “எதிர்காலமே இல்லை என்று எண்ணி. அடக்கி அடக்கி வைத்தேனா ..... இப்போது
.. ரொரொம்பவும் ஆறுதலில் கண் கலங்கிவிட்டது போல!” என்றாள் அவள்,

“ஓஹோஹோ. அதாவது. அம்மையார் வடிப்பது ..... என்னமோ ஆனந்தக் கண்ணீர என்பார்களே. அதுவாக்கும்? ஓகே! தாராளமாக வடித்துக்கொள், ஆனால். அதை நான் துடைத்து விடலாமா? அதற்கு விசேஷ அனுமதி உண்டா? “ என்று ரொம்பப் பதவிசாகக் கேட்டான் சத்யரூபன்,

விழிநீரைத் தட்டி விட்டபடி புன்னகை செய்தாள் அவள், “ஷ் போங்கள், உங்கள் ஷர்ட் கசங்கி விடும் இல்லை என்றால். அதிலேயே கண்ணை ஒற்றித் துடைத்திருப்பேன். தெரியுமா?” என்றாள் அவள் லேசாகக் கன்னம் சிவக்க,

“இப்போது என்ன கெட்டுப் போய்விட்டது? தாராளமாக நன்றாக முகத்தை அழுத்தித் துடைத்துக் கொள், இது போலக் கசங்கலை நான் பொருட்படுத்தவே மாட்டேன், காதலியின் ஆனந்தக் கண்ணீர் பட்ட ஷர்ட்! ஞாபகச் சின்னமாகப் போற்றிப் பாதுகாத்து வைப்பேனாக்கும்! எங்கே. என்னிடம் வந்து முகத்தை ஒற்றித் துடை. பார்க்கலாம்!”

கண்ணும் முகமும் போட்டி போட்டுக்கொண்டு ஒளிர்ந்தாலும். கன்னங்கள் சிவக்க அவள் புன்னகை செய்தாள், “ இது பொது இடம் என்பது மறந்துவிட்டது போல?” என்றாள் செல்லச் சிணுங்கலாக,

“ஓஹோ! அந்தத் தைரியத்தில்தான் சொன்னாய் போல! இருக்கட்டும். கவனத்தில் வைத்துக் கொள்கிறேன், நான் பிசினஸ் பண்ணுகிறவன், என்றேனும் மாட்டுவாய் அல்லவா? அப்போது வட்டி போட்டு வாங்கிக் கொள்ளுகிறேன்!” என்றான் அவன் சரசமாக,

“மாட்டினால்தானே?” என்று கண்ணால் சிரித்தாள் அவள்.

வெயிட்டர் வந்து “வேறு ஏதேனும் வேண்டுமா?” என்று கேட்கும்வரை அவர்களது உரையாடல் தொடர்ந்தது,

பில் கொண்டு வரச் சொல்லிவிட்டு. “அம்மாவிடம் சொன்னால் எவ்வளவு சந்தோஷப்படுவார்கள் தெரியுமா? என்றைக்கு முகூர்த்தத்தை வைத்துக் கொள்ளலாம் என்று கேட்பார்கள்! “ என்று சத்யன் பெருமிதப் புன்னகையோடு கூறவும். உதயா திகைத்தாள்,

அவ்வளவு நேரப் பேச்சின் முழு அர்த்தமும் அப்போதுதான் அவளுக்கு உறைத்தது எனலாம், அன்றைய அவளது நிலையின்

யதார்த்தமும்!

அவனைப் போல. அவளால் அவசரப்பட. நிச்சயமாக முடியாது! அவளது கடமைகளை முதலில் நிறைவேற்றிய பிறகு அல்லவா. அவள் தன் வாழ்வைப் பற்றி நினைத்துப் பார்க்கவே முடியும்!

“ரூபன் ..... “ என்று தயக்கத்துடன் அவனைக் கூப்பிட்டாள்,

அவன் லேசாகப் புருவம் சுளித்துக் கேள்வியாக நோக்கவும். “வந்து அது ..... அதாவது ....உங்கள் அம்மாவிடம் கொஞ்ச நாள் கழித்துச் சொல்லலாமா? ஏஏனென்றால் ரூபன். நான் வேலை செய்யும் இடத்தில் இப்போதைக்கு என்னால் விடுப்பு எடுக்கவே முடியாது, “ என்று அவனது புன்னகை மறைவதை உள்ளூர வருத்தத்துடன் பார்த்தபடியே ஒருவாறு கூறி முடித்தாள்,

சிறு மௌனத்தின் பின் லேசாகத் தோளைக் குலுக்கி. “இந்தத் தடை எப்போது கிளம்பப் போகிறதோ என்று யோசித்துக் கொண்டே இருந்தேன்!” என்றான் சத்யரூபன் ஒரு மாதிரிக் குரலில், “அப்படியாவது நீ வேலை பார்த்துதான் ஆக வேண்டிய கட்டாயம் என்ன உதயா? எந்த ஒப்பந்தத்தில் இருந்தும் பணம் கொடுத்து மீண்டுவிடலாம் என்று தெரியுமல்லவா ..... “ என்று கேள்வியாகவே இழுத்தான்,

“ஐயோ. வேண்டாம் ரூபன், ப்ளீஸ் அப்படிச் சொல்லாதீர்கள், இது இது நீங்கள் நினைப்பது போலப் பணத்துக்காக மட்டும் இல்லை, இன்றைய நிலையில் அவர்களுக்கு என் உதவி மிகவும் அவசியம், அவர்களுக்காக மட்டுமல்ல, நானும் அவர்களுக்கு ரொம்பவே கடமைப் பட்டிருக்கிறேன்! அதனால் எஎதற்கும் இப்போது யாரிடமும் எஎதுவும் சொல்ல வேண்டாமே! ப்ளீஸ்!” என்றாள் அவள் கெஞ்சலாக,

முகம் இறுகச் சில கணங்கள். சத்யன் பேசாமல் அமர்ந்திருந்தான்,

தாங்க மாட்டாமல். “ப்ளீஸ் சத்யன்!” என்று. உதயா மறுபடியும் கெஞ்சிக் கேட்டாள்,

“நீ இப்படிக் கேட்கும்போது மறுப்பது சரியில்லை, ஆனால் அம்மாவைச் சந்திக்க வரலாமில்லையா? அதுவும் உன் வேலையில் மிகச் சிறிய குறுக்கீடு கூட இல்லாமல் உணவு இடைவேளைச் சமயத்தில் மட்டுமே!”

வருத்தம், கோபம் , ஏளனம், அவனது குரலில் எல்லாமே இருந்தபோதும். அவனைக் குறை கூற முடியாது, ஆனால் இந்த அளவு அவன் இறங்கி வந்ததே பெரிதாகத் தோன்ற. “கட்டாயம் வருகிறேன்!” என்று வாக்குக் கொடுத்தாள் உதயா,

அந்த வாக்கை அவளால் நிறைவேற்ற முடியாமல் போகப் போகிறது என்று. அப்போது அவளுக்குத் தெரியாது!

கையில் இருந்த பையின் கனம் கூடத் தெரியாமல் காற்றில் பறப்பது போல உள்ளூர உதயா உணர்ந்தாள், சத்யரூபனோடு சற்று அதிக நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு. வழக்கத்தை விடத் தாமதமாகத்தான் அன்று அவள் வீட்டுக்குச் சென்றது,

அதற்குள் அவளது வழக்கமான சில பல வீட்டு வேலைகளைச் சிவகுரு செய்து வைத்திருந்தார், வாஷிங் மிஷினில் இருந்து துணிகளை எடுத்துக் காயப் போட்டிருந்தார்,

அடுத்த வாரத்துக்கு என்று காலையிலேயே உதயா துவைத்து வைத்திருந்த துணிகளைப் பக்கத்தில் அயர்ன் கடை போட்டிருந்தவனிடம் எடுத்துச் சென்று அயர்ன் பண்ணி வைத்திருந்தார், காய்கறிகளை வெட்டி வைத்ததோடு. வீட்டைத் துடைத்து சுத்தம் செய்வதைக் கூட முடித்திருந்தார்,

தந்தை செய்து முடித்திருந்த வேலைகளைப் பார்த்ததும் உதயாவுக்கு ஒரு மாதிரியாகிவிட்டது,

“சாரிப்பா, எப்படியோ பேச்சில் நேரம் போய்விட்டது, ஆனால். இதையெல்லாம் நான் வந்து செய்ய மாட்டேனா? பேசாமல் ஓய்வெடுக்காமல் நீங்கள் ஏனப்பா இதையெல்லாம் செய்தீர்கள்?” என்று வருத்தப்பட்டாள் பெண்,

“என்னம்மா பெரிய வேலை? ஸ்கூட்டரை ஓட்ட இன்னமும் தைரியம் வரவில்லை, மற்றபடி. இந்தக் கடை கண்ணி வேலையை நான் பார்த்திருக்க வேண்டும், ஆனால் நான் ஒன்றும் கஷ்டப்படவில்லை. கண்ணு, சும்மா ஒன்று ஒன்றாகச் செய்துகொண்டே இருந்தேனா? அது பாட்டில் வேலை நடந்துவிட்டது, இனி ஒவ்வொரு ஞாயிறன்றும் இது போலவே செய்யப் போகிறேன், நீயும் வேலை வீடு. வேலை வீடு என்று இராமல். யாராவது சினேகிதிகளையும் போய்ப் பார்த்துவிட்டு. அவர்களோடு சேர்ந்து எங்கேனும் போய்விட்டு வரலாம், என்னவோ பேச்சிலே நேரம் போய்விட்டது என்றாயே. இன்றைக்கு அப்படி யாரையேனும் பார்த்தாய் போல? அடிக்கடி இதைச் செய்! முகமே பளிச்சென்று தெரிகிறது,” என்று மகள் வாங்கி வந்த பொருட்களைப் பிரித்து வைத்தவாறே சிவகுரு பேச்சுவாக்கில் வினவினார்,

மகிழ்ச்சியோடு விவரம் சொல்ல வாயெடுத்த உதயா சட்டெனத் தயங்கினாள்,

பால் மாறியிருந்தாலும். ரூபன் கதைதானே இங்கேயும்?

மகளுக்கு ஒரு காதல் தளிர்விட்டிருப்பது தெரிந்தால். அவளுக்குத் திருமணம் செய்து வைக்க அவளுடைய தந்தையும்தான் அவசரப்படுவார்,

மற்ற தடைகளைப் பற்றி நினைவுபடுத்தினால். தன்னால்தானே என்று மிகவும் வருத்தப்படுவார்!

இதற்கு மேலும் தந்தை வருத்தப்படுவதை உதயாவால் தாங்கவே முடியாது!

அத்தோடு. சத்யனுடைய தாயாரிடம் சொல்ல வேண்டாம் என்று கேட்டுவிட்டு. அவளுடைய தந்தையிடம் மட்டும் சொல்வது எந்த வகையில் நியாயம்?

இருக்கட்டும், கொஞ்ச காலம்
எப்படியும் பல மாதங்கள்,. அதன் பிறகு ஒரு பொருத்தமான ஒரு வேளையில் இருவருடைய பெற்றோரிடமுமே ஒன்றாகச் சொல்லலாம்!

தந்தையிடம் தெரிவிப்பதையும் உதயா தள்ளிப் போட்டாள்!

“என்னம்மா. யாராவது பிடித்த சினேகிதியா? முகத்தில் அவ்வளவு சந்தோஷம் தெரிகிறதே! ரொம்பப் பழைய சினேகிதியோ?” என்று சிவகுரு மறுபடியும் விசாரித்தபோது கூட. அவள் ஒப்புதலாய் வேறு கதை சொன்னாளே தவிர. ரூபன் பற்றி வாயே திறக்கவில்லை!

அவளது கதையை நம்பி “ஓ! ரொம்பப் பழைய சினேகிதியா? அவளை விட்டுவிடாமல் அடிக்கடி பேச்சுவார்த்தையில் வைத்துக் கொள்ளம்மா, உன் கண் முகம் எல்லாம் சேர்ந்து சிரிப்பதை ரொம்ப நாட்களுக்குப் பிறகு. சில வருஷங்களுக்குப் பிறகு என்று கூடச் சொல்லலாம். மறுபடி இன்றுதான் பார்க்கிறேன்!”

தந்தையின் சந்தோஷப் பேச்சு உதயாவுக்கு ஆனந்தத்தைத் தந்தபோதும். கூடவே ஒரு சிறு குற்ற உணர்ச்சியும் உண்டாயிற்று,

மகள் உரையாடி மகிழ்ந்தது ஓர் ஆண் மகன் என்று அறியாமல். வெள்ளை உள்ளத்தோடு அந்த நட்பின் தொடர்பு அறாமல் பேச்சு வழக்கில் வைத்துக் கொள் என்கிறாரே! இவரைப் போய் ஏமாற்றுகிறோமே என்று ஒரு கணம் உதயா மனம் குன்றிப் போனாள்,

ஆனால். இப்போது இல்லை என்றாலும். இன்னும் ஆறேழு மாதங்களுக்குப் பிறகு. முதல் ஆளாக அவருக்குத்தானே மகள் சொல்லப் போகிறாள்!

அதுவரை பொறுமை காப்பது மேல்! இன்றைய நிலையில் கட்டாயமும் கூட! எனவே அப்போதைக்குச் “சரிப்பா!” என்று தலையைப் பெரிதாக உருட்டி வைத்தாள் பெண்,

அடுத்த சில தினங்கள் பறந்தோடிப் போயின,

சத்யரூபன் என்றைக்குக் கூப்பிடுவானோ என்று காலை நேரத்து வேலைகளை உதயா வேக வேகமாக செய்வாள்,

தாயாரின் தொழில் வைத்தியம் என்பதால். எந்த நேரமும் அழைப்பு வரலாம்,. அதனால் சாதாரண மதியச் சந்திப்புக்காக ரொம்ப முன்னதாகத் திட்டமிடுவது அவசியம் இல்லை என்று சத்யரூபன் கருதினான், தங்கள் அன்பின் உண்மை நிலையை இப்போது அன்னையிடம் சொல்லப் போவது இல்லை என்பதால். இந்தச் சந்திப்பை மிகவும் சாதாரணமானதாகக் காட்டிக்கொள்ளவே அவன் விரும்பினான்,

எப்படியுமே வயிற்றுக்குள் பட்டாம்பூச்சி பறப்பது போல உணர்ந்தாலும். அவனது காரணத்தை உதயாவும் நிம்மதியுடனேயே ஏற்றுக் கொண்டாள்,

ஆனால் சோதனை போல. அடுத்த சில தினங்கள் விலாசினிக்கு மூச்சு விடக் கூட அவகாசம் இல்லாத மாதிரி அடுத்தடுத்து நோயாளிகள் வந்து குவிந்த வண்ணம் இருந்தனர்,

“இடைவெளியே இல்லாமல் இத்தனை பிள்ளைகள் இந்தியாவில் பிறந்தால். கூடிய சீக்கிரமே மக்களுக்கு நிற்கக் கூட இடம் இல்லாமல் போய்விடப் போகிறது, “ என்று ஒரு தரம் வெறுப்பாகக் கூறினான் ரூபன்,

சில காலமாக வழக்கமாகிவிட்ட ஞாயிற்றுக்கிழமை சந்திப்பின்போது. எரிச்சலுடன் உதயாவிடம் பொரிந்து கொட்டினான், “இது சரியே இல்லை. உதயா, ஒரு வாரத்தில் ஒரு மருத்துவமனையில் இத்தனை பிள்ளைகளா பிறக்கும்? கணக்கிட்டுப் பார் உதி. ஒரு கொஞ்சம் பெரிய மருத்துவமனையில் ஒரு வாரத்தில் பதினைந்து குழந்தைகள் பிறந்தால். இன்னும் பெரிதும் சிறிதுமாகச் சென்னையில் எத்தனை மருத்துவமனைகள்! அத்தனையையும் பதினைந்தால் பெருக்கினால்
, ஹைய்யோ. நம் இந்தியா தாங்காதுப்பா! சில ஆண்டுகளுக்கு முன்பாகத்தான் நம் மக்கள் தொகை நூறு கோடி என்றார்கள், அதற்குள் நூற்று இருபது கோடியாம்! விரைவாகவே அடுத்தவர் மீது இடித்துக் கொள்ளாமல் தெருவில் நடக்கக் கூட முடியாமல் போகாதா? இதை யோசித்து. பிள்ளை பெறுவதைக் கொஞ்ச

காலமேனும் நிறுத்தி வைக்கவேண்டும் என்ற யோசனையே நம் மக்களுக்கு இல்லை. பார்!" என்று அவன் படபடக்கவும் அவளுக்குச் சிரிப்பு வந்தது,

"என்ன சிரிப்பு?" என்று சத்யரூபன் அதட்ட. வாயைக் கையால் பொத்திக்கொண்டு நகைத்தாள் அவள்,

"என்ன சிரிப்பு என்று கேட்டேன்!"

"மக்கள் யோசிப்பதை விடுங்கள், பேசுமுன் நீங்கள் யோசித்தீர்களா? நீங்கள் சொல்வது போல இந்திய மக்கள் பிள்ளை பெறுவதை நிறுத்திவிட்டால். அப்புறம் "கைனகாலஜி"யில் பெரிய மருத்துவர்களான உங்களுடைய பெற்றோரும். பெரும்பாலும் கரு வளர்ச்சி பற்றிய ஸ்கேன்களை எடுப்பதில் பெயர் பெற்ற என் அப்பாவின் செண்டரும் ஈ தானே ஓட்ட வேண்டும்? அந்தக் காட்சியைக் கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள்! உங்களுக்கும் சிரிப்பு பொத்துக்கொண்டு வரும்!" என்று. மேலும் நகைத்தாள் அவள்,

எரிச்சல் மறைந்து. அவளோடு சேர்ந்து முறுவலித்தான் சத்யரூபன்,

ஆனால் இந்த மன நிலை நீடிக்கவில்லை,

ஏனெனில் மறுமுறை. சந்திக்கும் இடம். நேரம் எல்லாம் ஒத்து வந்து. ஹோட்டலில் முன்பதிவும் செய்த பிறகு. வர முடியாது என்று தெரிவித்தது உதயா.

அத்தியாயம் - 6

முதல் வாரத்து வேகத்துக்கு சற்று மூச்சுவிட அவகாசம் கொடுப்பது போல. அந்த வாரம் விலாசினி தம்பதிக்குப் பணி சற்று இலகுவாக இருந்தது,

பணி இலகுவாக இருப்பது என்றால் வருமானமும் குறைவாகத்தானே இருக்கும்? என்றாலும். அதைப் பெரிதாக எண்ணாமல். "நல்லவேளை! நம்மிடம் சிகிச்சைக்கு வருகிற பலர் கொஞ்சம் ஆரோக்கியமாக இருக்கிறது போலத் தெரிகிறதே!" என்று கணவனும் மனைவியும் சந்தோஷமாகவே பேசிக் கொள்வார்கள்!

அதே மகிழ்ச்சியோடு. "டேய் சத்து. உன் ஆளை இந்த வாரத்தில் ஒரு நாள் சந்திக்கலாம் என்று இருக்கிறேன், அவளுக்கு வரத் தோதுப்படுமா என்று கேட்டுச் சொல் கண்ணா!" என்றாள் அவனுடைய அன்னை,

பெரிய மருத்துவர், "டாக்டரம்மா. நீங்கள் எங்களோட தெய்வம்மா" என்று பலர் சொல்லி. சத்யனே கேட்டிருக்கிறான், மருத்துவமனையில் பணி புரிகிறவர்களும் மிகுந்த மரியாதை காட்டுவார்கள், அங்கே விலாசினியின் சொல் வேதம்!

வெறும் மருத்துவமனை உரிமையானர் என்பதால் மட்டும் கிடைப்பதல்ல அந்தப் பெருமதிப்பு!

அப்படிப்பட்ட தாயார். மகனுடைய வெறும் சினேகிதி என்கிற நிலையில் இருக்கும் ஒருத்தியிடம் தன்னைச் சந்திக்க வரத் தோதுப்படுமா என்று. விசாரிக்கச் சொல்லுகிறாள்!

ஆனாலும் சந்தடி சாக்கில் "உன் ஆளா"மே! ஆனால் இது போல உதயாவிடம் ஏதாவது பேசி வைத்தார்கள் என்றால் சரிவராது, இப்போதைக்கு வேண்டாம்,

சிரிப்பை அடக்கிக்கொண்டு. "வருவாள்மா, உணவு இடைவேளை நேரம்தானே? அத்தோடு அவளே ஒத்துக் கொண்டிருக்கிறாளே!" என்றவன் தொடர்ந்து. "ஆனால் உங்களுக்கு நல்லதாக ஒரு சேலையைத் தேரிவு செய்ததாலேயே. அவள் என் ஆளாகி விடுவாளா? அவள் முன்னிலையில் இப்படி ஏதாவது வார்த்தைகளை விட்டுவிடாதீர்கள், அப்புறம் என் குடலை உருவி மாலையாகப் போட்டுக் கொள்ளப் போகிறேன் அவள் என்று பத்ரகாளி அவதாரம் எடுத்துவிடப் போகிறாள்! ஜாக்கிரதை!" என்று கண்ணை உருட்டி எச்சரித்தான்

அவன்,

இது வேடிக்கைப் பேச்சா. அன்றி நிஜமான எச்சரிக்கையா?

ஓரக் கண்ணால் பார்த்தவளுக்கு. மகனது முகத்தில் ஒன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை, எனவே எதையும் கண்டுகொள்ளாத கம்பீரப் பாவனையில். "எதற்கும் கேட்டுவிடம்மா, ஒரு மணிக்கு நான் மருத்துவமனையில் இருந்து கிளம்பி விடுவேன்," என்றாள் அன்னை,

சந்தோஷமாக உதயாவிடம் விவரம் கூறியபோது. அவளும் மறுத்து எதுவும் சொல்லவில்லை, உணவு இடைவேளை நேரம்தானே? தான் வருவதில் பிரச்சினை இராது என்றாள்,

கூடவே. அவனுடைய தாயாருக்கு என்னென்ன பிடிக்கும்? நிறம். உடை. உணவு ....இது போல அவள் விசாரித்தது. சத்யரூபனுக்குச் சந்தோஷமாக இருந்தது,

"நீ எப்போதும் போல இருந்தாலே. அம்மாவுக்கும் பிடித்துப் போகும்," என்றான் உற்சாகமாக,

அந்த அம்மாவுக்கும்மில் அவன் கொடுத்த அழுத்தம் அவள் முகத்தில் புன்னகையை மலர வைத்தது.

தாயின் கவனத்தை அதிகம் கவறாத வகையில். ஆனால் உதயா விரும்பும் விதமாக என்ன அணிவது என்று அவனது யோசனை ஓடிற்று,

இந்தச் சந்திப்பு குறித்துப் பாலன் தம்பதியிடம் எதுவும் சொல்ல வேண்டும் என்று உதயா பெரிதாகக் கருதவில்லை,

அவர்களிடம் பணி புரிகிறவள். தனது ஒவ்வொரு வினாடிக்கும் அவர்களிடம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்று அவசியம் இல்லை என்பதோடு. அவர்களும் அதை எதிர்பார்ப்பது இல்லை,

அதிலும் "லஞ்ச் அவர்" அவளது சொந்த நேரம், அதை அவள் செலவிடும் விதமும் அவளது சொந்த விஷயமே! அதில் அவர்கள் தலையிடுவது கிடையாது,

இந்த நம்பிக்கையில்தான் உதயா ரூபனிடம் வருவதாகச் சொன்னாள்,

ஆனால். அன்று காலையில் தீவிரமாக வேலை செய்து கொண்டிருக்கும்போதே. மஞ்சரிக்கு லேசாக மூச்சுத் திணறல் வந்துவிட்டது,

இது. அவளுடைய மருத்துவர் எச்சரித்ததுதான், இது போன்று பிரச்சினை ஏற்பட்டால். உடனே அவர்களது மருத்துவமனைக்கு வந்து.

நெபுலைஸ் பண்ணிக்கொள்ள வேண்டும் என்று டாக்டரம்மா கண்டிப்பாகக் கூறியிருந்தாள்,

சும்மா என்றால் பாலன்தான் மனைவியைக் கூட்டிப் போயிருப்பான்,

ஆனால் அன்று பார்த்து. அவர்களுடைய மிகப் பெரிய வாடிக்கையாளர் சென்னைக்கு வந்திருந்தார், அவருடைய செயின் சூப்பர்மார்க்கெட்டுகளுக்கான வேலையைத்தான் பாலன் தம்பதி இப்போது முழு மூச்சாகச் செய்து கொண்டிருந்தார்கள், முழுக்க முழுக்க கோடிங் மாற்றி புது சாஃப்ட்வேர் அமைத்துக் கொடுக்க வேண்டும்,

வாடிக்கையாளரோடு இதுவரை நடந்த வேலை . இனிச் செய்யப் போவது. செலவுகள் என்று நிறையப் பேச வேண்டிய அவசியம் இருந்ததால். மனைவியை மருத்துவமனைக்கு கூட்டிப் போய். சிகிச்சையை முடித்ந்ததும் வீட்டில் கொண்டு விட்டுவிட்டுச் சற்று நேரம் துணை இருந்துவிட்டுச் செல்லுமாறு பாலன் கேட்டபோது. உதயாவால் மறுக்க முடியவில்லை,

என்ன சொல்லி மறுப்பது?

மறுக்கும் எண்ணம் அவளுக்குத் தோன்றவும் இல்லை,

பாலனுக்கோ. மஞ்சரிக்கோ உதவி தேவை என்றால் அதைச் செய்வதைவிடப் பெரிய விஷயம் வேறு என்ன இருக்க முடியும்?

இந்த மனநிலையே அவளுக்கு இருந்ததால். மஞ்சரியோடு அவள் வழக்கமாகச் செல்லும் மருத்துவமனைக்குக் கிளம்பிவிட்டாள்,

சிகிச்சைக்காக மஞ்சரி சென்றதும். சத்யரூபனை செல்ஃபோனில் அழைத்து. மதிய உணவுக்கு வரமுடியாத காரணத்தைச் சுருக்கமாகத் தெரிவித்தாள்,

“உங்கள் அம்மாவிடம் விஷயத்தைத் தெரிவித்து. எனக்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுங்கள். ரூபன், வைக்கட்டுமா?” என்று பேச்சை முடித்தாள்,

அதாவது முடிக்க முயன்றாள்,

அதற்குள். “பொறு பொறு,” என்று அவசரமாக அவளைத் தடுத்தான் சத்யரூபன்,

“இப்போது மணி என்ன என்று தெரியுமா? பன்னிரண்டு ஆகிறது, இன்னும் அரை மணி நேரத்தில் அம்மா கிளம்பி விடுவார்கள், ஒரு மணிக்கு டேபிள் முன் பதிவு செய்திருக்கிறேன், இப்போது வரவில்லை

என்றால் என்ன அர்த்தம்? “ என்று ஆத்திரத்தை அடக்கிய குரலில் கேட்டான்,

“அதுதான் காரணம் என்னவென்று சொன்னேனே. ரூபன், மஞ்சரி மேடத்துக்குத் திடீரென்று உடம்பு சரியில்லாமல் போயிற்று, பாலன் சார். அவருடைய முக்கியமாக கிளையன்டைச் சந்தித்தாக வேண்டிய கட்டாயம்! இவர்களுடைய பெரிய ப்ராஜெக்டே. அந்த வாடிக்கையாளருடையதுதான், அப்படி இருக்க. அவர் கூப்பிடும்போது. பாலன் சார் போகாமல் இருக்க முடியாது, புரிந்துகொள்ளுங்கள். ரூபன், மஞ்சரிக்கு என்ன வேண்டுமானாலும் ஆகட்டும் என்று விட்டுவிட்டு என்னால் எங்கேயும் வர முடியாது, அதனால்தான் சொல்லுகிறேன், இள்றைக்கு நாம் சந்திக்க முடியாது என்று,” என்று ப் பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு விவரித்தாள் மஞ்சரி,

ஆனால் அமைதி அடைவதற்குப் பதிலாக. சத்யரூபனின் மனம் கொந்தளித்தது,

“அதாவது சொந்த வாழ்வு எப்படியோ போகட்டும் என்று விட்டுவிட்டு அந்த பாலன் பணம் பண்ணப் போய்விட்டார், ஆனால் நீ. உன் சொந்த வாழ்வை விட்டுவிட்டு. அவன் மனைவிக்கு ஆயா வேலை பார்த்துக் கொண்டிருக்கிறாயா?” என்று அவன் ஆத்திரமாகக் கேட்டதற்கு. “அசட்டுத்தனமாக வசனம் பேசாதீர்கள்,” என்று பதில் வந்தது,

“என்னது? நான் பேசுவது. அசட்டுத்தனமா? எனக்கானால். உன் செய்கைதான் மடத்தனமாகத் தோன்றுகிறது, நீ சந்திக்க இருப்பது. உன் வருங்கால மாமியாரை. உதயா! முதல் முறையாக! ஏதாவது உன் மூளையில் ஏறுகிறதா? எல்லாம் முடிவாகி. இந்தக் கடைசி நேரத்தில் நீ வர முடியாது என்று சொன்னால். அது என் அம்மாவை அவமானப் படுத்துவது போல ஆகாதா? அவர்களுக்கு எப்படி இருக்கும்? எண்ணிப் பார்!” என்று படபடத்தான் அவன்,

“அது ..... வந்து ..... இப்போது நீங்களாக ஏதாவது கற்பனை செய்யாதீர்கள். சத்யா, உங்கள் தாயாரே ஒரு பெரிய மருத்துவர், சொன்னால் அவர்களுக்கு நிலைமை புரியாமல் இராது, தயவு பண்ணி எடுத்துச் சொல்லுங்கள், நெபுலைஸ் முடிந்து மஞ்சரி மேடம் சீக்கிரமே வந்துவிடுவார்கள் என்று நினைக்கிறேன், அதோ வந்துவிட்டார்கள், நான் உடனே அவர்களிடம் போக வேண்டும், வைத்து விடட்டுமா? வைக்கிறேன் ,” என்று அவன் சம்மதமாகப் பதில் கூறு முன்பாகவே செல்லை அணைத்தாள் உதயா,

சத்யரூபனுக்கு ரொம்பவும் ஆத்திரம்தான், ஆனால் இப்போது அதை யாரிடம் காட்டுவது?

திரும்பவும் உதயாவை அழைத்துத் திட்டலாம்,

ஆனால் அவளைக் கடுமையாகத் திட்ட மனம் வராது என்பதோடு. அந்த மஞ்சரி என்ன நிலையில் இருக்கிறாளோ?

அவள் கருவுற்று இருப்பதாக உதயா கூறியது அவனுக்கு நினைவு இருந்தது, கூடவே இப்போதைய சுகவீனம்! அவளைக் கைத்தாங்கலாக அழைத்துச் சொல்ல வேண்டிய நிலைமையாக இருந்தால். உதயா மொபைலை எடுத்துப் பேசுவதே சந்தேகம்,

அப்படி அவள் பேசாமல் விட்டுவிட்டால். அதைப் பொறுமையோடு தாங்கிக் கொள்ளும் மனநிலை இப்போது அவனுக்கு இல்லை,

எவ்வளவு தூரம் அவளை ஒரு முழு நேர வேலைக்காரியாக ஆக்கி வைத்திருக்கிறார்கள் என்று அவளுக்கு எடுத்துச் சொன்னாலும் புரியவில்லையே!

புரியவில்லையா? புரிந்துகொள்ள மறுக்கிறாளா?

உதயா முட்டாள் அல்ல எனும்போது. இரண்டாவதுதானா? ஏன் அப்படி?

எப்படியாவது இதை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று மனதில் உறுதியெடுக்கும்போதே. இப்போது உடனடி முக்கியம் அது அல்ல என்று சத்யரூபன் உணர்ந்தான்,

இப்போது தாயார் ஆவலாகக் கிளம்பிக் கொண்டிருப்பாள், அவர்களைத் தடுத்து நிறுத்த வேண்டும், உதயாவின் கொத்தடிமைத்தனம் பற்றிப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்,

பிறகுதான் பார்த்தாக வேண்டும், இப்போது ....

என்ன யோசித்தும் டாக்டர் விலாசினி ஒத்துக் கொள்ளும்படியான வேறு எந்தக் காரணத்தையும் அவனால். அப்போது கற்பனை செய்ய முடியவில்லை,

அவன் தவிப்புடன் யோசிக்கும்போதே. அவனுடைய மொபைல் சங்கீதம் பாடியது,

ஒரு வேளை. அன்னைக்கே ஏதாவது வேலை வந்துவிட்டிருந்தால்? உதயா பற்றி எதுவுமே சொல்லத் தேவையில்லை!

ஆவலுடன் மொபைலை ஆன் செய்து. “சொல்லுங்கள் அம்மா, ஏதாவது வேலை வந்துவிட்டதா?” என்று. குரலில் ஆவலைக் காட்டாமல் அடக்கியபடி சத்யன் கேட்டான்,

மகனின் கேள்வியை இயல்பாகவே ஏற்று. “நல்லவேளை. இல்லைப்பா, நான் இப்போது வேலை முடித்துக் கிளம்பிவிட்டேன், ஏதாவது பிரச்சினைக் கேஸ் வந்தால். அப்பா அதைக் கவனித்துக் கொள்வதாகச் சொல்லியிருக்கிறார்! நீயும் உதயாவும் கிளம்பிவிட்டீர்களா? யார் முதலில் சென்றாலும் வரவேற்பு ஹாலிலேயே மற்றவருக்காகக் காத்திருக்கலாம், அவளிடம்
..... , “ என்று விலாசினி மேலே திட்டமிடுமுன் மகன் குறுக்கிட்டான்,

“அம்மா ப்ளீஸ்! “ என்று இடைமறித்து. “அம்மா. உதயாவுக்கு வேறே வேலை வந்துவிட்டதாம், மதிய உணவுக்கு வர இயலாது என்று இப்போதுதான் சொசொன்னாள், அதனால். ஹோட்டல் முன்பதிவை ரத்து பண்ணிவிடலாமா என்று நானே உங்களைக் கேட்பதாக இருந்தேன், அதற்குள் நீங்களே கூப்பிட்டுவிட்டீர்கள்
,” என்று தடுமாற்றத்தைக் காட்டாதிருக்கப் பெருமுயற்சி செய்து பேசினான்,

“ஓ. அப்படியா?” என்று கேட்ட தாயின் குரலில் ஏமாற்றத்தைத் தேடிக் கண்டு பிடித்த மகனுக்கு ரத்தம் கொதித்தது,

அவளைப் பார்க்கும் ஆவலில். தான் மிக உயர்வாகக் கருதும் மருத்துவப் பணியைக் கூட ஒதுக்கி வைத்துக்கொண்டு கிளம்பி இருக்கிறார்கள், அவர்களைப் போய் ஏமாற்றமடைய வைத்துவிட்டாளே!

ஆனால் தாயார் உதயாவைத் தப்பாக எண்ணுவதும் பிடிக்காமல். “அவர்கள் அலுவலகமே. உதயாவைக் கொண்டுதான் நடக்கிறதும்மா, உரிமையாளர்களாக கணவன் மனைவி இரண்டு பேருக்கும். எதற்கும் உதயாதான், இவ்வளவு வேலை செய்வது உனக்கு நல்லதல்ல என்று உதயாவிடம் நானே சொல்லியிருக்கிறேன், சரி, அது வேறு விஷயம், இப்போது ஹோட்டலுக்குப் பேசி. வர முடியவில்லை என்று சொல்லிவிடுகிறேன்,” என்றான் பிள்ளை!

ஒரு பெருமூச்சு,. அடுத்துச் சின்னக் குரலில் ஒரு “சரிப்பா”வை எதிர்பார்த்த சத்யரூபன். “எதற்காகப்பா?” என்ற தாயின் கேள்வியில் துள்ளிக் குதிக்காத குறை!

“அ ..... ம்மா?
.....” என்று அவன் கேள்வியாய் வினவ. விலாசினி வேறு கூறினாள்,

“கண்ணா. நீயும் நானும் பேசிக்கொண்டே மெல்லச் சாப்பிட்டு. எத்தனை மாதங்கள் ஆயின? வாயேன். இன்று அந்த வாய்ப்புக் கிடைத்தது என்று நல்லவிதமாகவே நினைத்துக் கொள்வோம், அந்த வகையில் உ நம் உதயா நல்லதே செய்திருக்கிறாள் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது, மற்றபடி நீயோ நானோ அவரவர் பணிகளை ஒதுக்கிக்கொண்டு இப்படிக் கிளம்புவது ஏது? வருகிறாயா?
என்ன சத்தத்தையே காணோம்? ஒருவேளை. இப்போதெல்லாம் வயதான இந்த அம்மாவோடு பேசுவதில் ரசனை குன்றிவிட்டதோ?” என்று சன்னச் சிரிப்புடன் விலாசினி கேட்கவும். சத்யனுக்கு ஐயோவென்று இருந்தது,

என்ன மாதிரி ஒரு சங்கடத்தையும் சந்தோஷமாக மாற்றுகிற பெண்மணி, இவர்களைச் சந்திக்க வராமல் வேலை வேலை என்று பிழிந்தெடுக்கிறவளுக்கு இன்னமும் ஒரு வாய்ப்புக் கொடுத்துத் தாதி வேலை செய்யப் போயிருக்கிறாள்!

இது பற்றி உதயாவிடம் சீரியசாகப் பேசவேண்டும் என்று உள்ளூரக் குறித்துக் கொண்டபடியே பெற்றவளிடம் வேறு மாதிரிப் பேசினான். பிள்ளை,

“ஆஹா. நான் வேறு மாதிரியல்லவா எண்ணிவிட்டேன், பூக்குவியல் மாதிரி சின்னச் சின்னப் பிள்ளைகளைப் பார்த்து ரசிப்பதில். இந்த மீசை முளைத்த முகத்தைப் பார்க்க அவ்வளவாகப் பிடிக்கவில்லையோ என்று நினைத்து
.....கொஞ்சம் வருத்தம் கூடப் பட்டேனே! “ என்று சமாளித்தான் அவன்,

“என்னதான் மீசை தாடி வளர்த்துக் கரடி லுக்கே கொடுத்தாலும். நீ குறிப்பிட்ட அதே பூக்குவியலாய் உன்னைத் தூக்கியதை மறக்க முடியுமா? எந்த வயதிலும் தாய்க்கு மகன் அதே குழந்தைதான், தில்லிக்குப் பாதுஷா ஆனாலும் தாய்க்குப் பிள்ளைதான் என்று பழமொழியே இருக்கிறது. கண்ணா!”

“மறுக்க முடியாத உண்மை! ஆனால் இப்படி மொபைலிலேயே பேசிக் கொண்டிருந்தால். நேரில் பேச விஷயம் மிச்சம் இருக்குமோ என்னவோ. நேரம் மட்டும் நிச்சயமாக இல்லாமல் போய்விடும், அதனால் நான் கிளம்புகிறேன், நீங்களும் தாமதிக்காமல் வந்து விடுங்கள், கூடக் கொஞ்ச நேரம் அரட்டை அடிக்கலாம்,”

“அதானே! ஆளைத்தான் அடிக்கக் கூடாது, அரட்டைக்கென்ன கேடு? உடனே கிளம்புவோம், கிளம்பிப் போய்த் தாராளமாக அரட்டையை அடியோ அடி என்று அடிப்போம்!”

மருத்துவமனையில் பெரிய டாக்டராக நடை உடை பாவனை

அனைத்திலும் கம்பீரமாக நடந்துகொண்டாலும். வீட்டில் இப்படி ஏதேனும் பேசுவது விலாசினிக்கு வழக்கம்தான், ஆனால் அன்று தன் ஏமாற்றத்தையும் வருத்தத்தையும் இந்த இலகுப் பேச்சில் அன்னை மறைத்தாள் என்பது மகனுக்கு நிச்சயமே,

இதைச் சும்மா விட முடியாது, உதயாவிடம் பேசியே ஆக வேண்டும்,

பேச முடிவு செய்துவிட்டபோதும். அவளிடம் என்ன மாதிரிப் பேசுவது என்று அவனுக்குச் சற்றுக் குழப்பமாகவே இருந்தது,

கோபமும் கண்டிப்புமாகப் பேசி. அவள் முகம் திருப்பிக் கொண்டுவிட்டால்? அவளும் திருப்பிப் பேசி வார்த்தைகள் தடித்தால். இப்போதுதான் தளிர் விட்டிருக்கும் அவர்களது இளங்காதல் கருகிப் போய்விடாதா?

குழைவாகப் பேசிப் புரிய வைக்கலாம் என்றால். அதற்கு மதிப்பிருக்குமா என்பதே அவனுக்குச் சந்தேகமாக இருந்தது,

ஒன்றும் நடவாதது போலப் பழகுவது நிச்சயமாகக் கூடாது! இதில் எதுவுமே இல்லை என்ற எண்ணம் அவளுக்கே வந்துவிடும்! இதே தவறைத் தொடர்ந்து செய்வது இயல்பாகிவிடும், அது கூடவே கூடாது!

பல்வேறு விதமாக அணுகுமுறைகளை அவன் யோசித்து வைத்தால். வழக்கமான நேரத்தில் அவன் சூப்பர்மார்க்கெட்டை அடையும்போது. உதயா முன்னதாகவே வந்து. தன் வேலைகளை முடித்துக்கொண்டு அவனுக்காகக் காத்திருந்தாள்,

சத்யரூபனைக் கண்டதும் முகம் மலர வேகமாக அருகில் வந்து. "ரூபன். உங்கள் அம்மாவிடம் விவரமாகச் சொன்னீர்களா? அல்லது என்னால் வரமுடியவில்லை என்று மட்டும் சொன்னீர்களா? எதற்கும் நான் ஒரு தரம் அவர்களிடம் பேசி. ஏன் என்ன என்று சமாதானம் சொல்லி விடட்டுமா?" என்று அவசரமாகக் கேட்டாள்,

கணகளில் இருந்த ஏதோ திரை விலகியது போல உணர்ந்தான் அவன்,

உதயாவுக்கும் அவர்களது அன்பைக் காப்பாற்றும் அக்கறை இருக்கும் என்பதை அவன் ஏன் எண்ண மறந்தான்?

மனதின் இறுக்கம் தானாக சற்றுத் தளர. அவனது மொபைலை எடுத்து. "நானே தொடர்பு கொண்டு தரட்டுமா?" என்று வினவினான்,

"ஊகூம், வேண்டாம், " என்றாள் அவள் அவசரமாக, "உங்கள்

மொபைலில் இருந்து பேசினால். என்னவோ நீங்கள் சொல்லித்தான். அவர்களோடு நான் பேசுவது போலத் தோன்றும், அவர்கள் எண்ணை மட்டும் கொடுங்கள், " என்று உதயா கேட்டதும் அவனுக்குப் பிடித்தது,

அவன் எண்ணைத் தர. அவள் அன்னையை அழைத்துப் பேசவதை. சிறு புன்னகையோடு பார்த்துக்கொண்டு நின்றான்,

நாகரீகமற்று அடுத்தவர் உரையாடலைக் கவனிக்கிறோம் என்ற எண்ணமே அவனுக்கு வரவில்லை, அவளும் விலகிப் போய்ப் பேசவில்லை,

அவன் கொடுத்த எண்களை அழுத்திவிட்டு. உதயா சிறு பொழுது காத்திருந்தாள்

எதிர்முனையில் விலாசினி "ஹலோ சொன்னதும். "மேடம். நான் உதயா பேசுகிறேன், ..." என்று பேசத் தொடங்கினாள்,

தொடங்கியவள் சற்று நிறுத்திக் கவனித்துவிட்டு. "ஓ ..... உங்கள் விருப்பம், நநன்றி ஆன்ட்டி, அன்று வர முடியாமல் போனதுக்கு சாரி ஆன்ட்டி, முதலாளி மனைவியை
அவர்களும் பார்ட்னர்தான். அவர்களுக்கு மூச்சுத் திணறல், உடனே நெபுலைஸ் பண்ணக் கூட்டிப் போக வேண்டியிருந்தது, சாருக்குக் கிளையன்டைச் சந்திக்க அலுவலகத்தில் இருக்க வேண்டிய கட்டாயம், மேடத்தை நான் கூட்டிப் போனதால் . உங்களைச் சந்திக்க வர முடியவில்லை. மேட ..... , வந்து ஆன்ட்டி, நீங்களே மருத்துவர் என்பதால் புரிந்து கொள்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு, அதுதான் இன்று ரூபனைப் பார்த்ததும் உங்கள் எண் வாங்கிப் பேசினேன், அன்று வர முடியாததற்கு ரொம்ப சாரி ஆன்ட்டி!" என்று முடித்தாள் ,

தொடர்ந்து மொபைல் பேச்சைக் கவனித்தவளின் முகம் மலர்ந்தது,

"ஓகே ஆன்ட்டி, கண்டிப்பாக! இன்னொரு நாள் கட்டாயம் வருகிறேன், இப்போது வைக்கட்டுமா?" என்று மொபைல் பேச்சை ஆஃப் செய்தாள்

ஒரு கணம் கண் மூடித் திறந்து. "மஞ்சரி மேடத்துக்கு உதவாமல் விட்டுவிட என்னால் முடியாது. சத்யன் சார், ஆனால். கடைசி நேரத்தில் உங்களைச் சங்கடப்பட வைத்ததற்கு சாரி, வருந்துகிறேன்," என்றாள் சற்றே மரத்த குரலில்,

அவளுடைய அந்த மஞ்சரி மேடம் விஷயத்தில் மூக்கை நுழைக்கக் கூடாதாம், அவனை எச்சரிக்கிறாள்!

ஆனால் ஒரேயடியாக முசுட்டுப் பிடிவாதம் பிடிக்காமல்.

அவனுடைய அன்னையை அவளே சமாதானப்படுத்தியிருக்கிறாள்,

பின்னதை எண்ணி முன்னதை விட்டுப் பிடிக்க சத்யன் முடிவு செய்தான்,

“அதுதான் அம்மாவிடம் பேசி. நீயே எல்லாம் சீர் செய்துவிட்டாயே. அப்புறம் என்ன “சத்யன் சார். மோர்” எல்லாம்? எனக்கே தெரியாமல் உன் “ரூபன்” எங்கே காணாமல் போனானாம்?” என்று அவன் போலியாகக் குறைப்பட. நேர்ந்த சிறு உரசல் அடையாளமே இல்லாமல் அப்போதைக்கு மறைந்து போயிற்று,

அப்போதைக்குத்தான்,

அத்தியாயம் - 7

உதயாவின் மனம் தன்னிடம் இருப்பது தெளிவாகிவிட்டபடியால். அதற்கு அடுத்த நடவடிக்கையாக விரைவிலே அவளை மணந்துகொள்ள சத்யரூபன் ஆசைப்பட்டான்,

அவள் கேட்டுக்கொண்டபடி திருமணத்தை சில மாதங்கள் தள்ளிப் போட அவன் மறுக்கவில்லை, என்றாலும். அது. அவளுடைய முதலாளி குடும்பத்து வசதிக்காக என்பது. அவனுக்கு எரிச்சலூட்டியது,

அவளது வருமானம் வந்துதான் ஆக வேண்டும் என்கிற அவசியம் இல்லாத போதும். அவள் வேலை செய்ய விரும்பினால் தடுத்து நிறுத்தும் எண்ணம் அவனுக்குக் கிடையாது,

அவனுடைய பெற்றோரும் பிற்போக்குவாதிகள் அல்ல, அவர்கள் இருவருமே பணி புரிகிறவர்கள்தானே? உன்னதப் பணி என்றாலும் அவர்களுக்கும் நேரம் காலக் கணக்குப் பார்க்க முடியாது,

ஆனால் பிரச்சினை. உதயா வேலை செய்யும் விதத்தில் இருந்தது,

எந்தவித நீக்குப் போக்கும் இன்றி. சரியாக எட்டு மணி நேரம் உழைப்புக்கு விலையாகச் சம்பளத்தை எண்ணி வாங்கிக்கொண்டு உதயா வந்துவிட வேண்டும் என்று சத்யன் நினைக்கவில்லை,

ஆனால். பாலன் மஞ்சரிக்கு அவள் கொத்தடிமை போல நேரக் கணக்கே இல்லாமல். அலுவலக வேலை மட்டுமின்றி. மஞ்சரிக்குத் துணி வாங்குவதும். மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதுமாகத் தனிப்பட்ட பணியாளாகவும் அவள் உழைத்துக் கொட்டுவதைத்தான் அவனால் ஒத்துக்கொள்ள முடியவில்லை,

நிச்சயமாக இதற்கெல்லாம் பாலன் தம்பதி உதயாவுக்குத் தனித் தனியாக ஊதியம் கொடுக்கப் போவது இல்லை என்பது நிச்சயம்! அப்படி இருக்க. இவள் எதற்காகத் தன் உழைப்பையும் நேரத்தையும் அவர்களுக்காகக வீண் செலவு செய்யவேண்டும்,

அந்தப் பாலன் தம்பதிக்குப் பயங்கர பக்தையாக உதயா இருந்ததால். இதைப் பற்றி அவனால் நேரடியாக அவளிடம் பேச முடியவில்லை,

எனவே. திட்டமிட்டுத் தொழில் நடத்துகிறவன் இதற்கும் ஒரு திட்டம் வகுத்தான்,

முதல் முயற்சியாக. அவர்களது சந்திப்புகளை அதிகப்படுத்தினான்,

“இதோ பார். நாம் இருவரும் ஒருவருக்கு ஒருவர் என்று முடிவு பண்ணிவிட்டோம்,

வாரத்துக்கு ஒரே ஒருதரம். நீ சூப்பர் மார்க்கெட்டுக்குச் சாமான் வாங்கப் போகிற சமயத்தில் நாம் சந்திக்கிற இந்த ஐந்து பத்து நிமிஷம். ஏதோ பிச்சை வாங்குவது போல இருக்கிறது, நான் என்ன. வாரக் கடைசிக்கு மகாபலிபுரத்துக்கோ. அல்லது நட்சத்திர ஹோட்டல் அறைக்கோவா கூப்பிடுகிறேன்? இந்த ஞாயிற்றுக் கிழமைப் பிச்சை போல. இன்னும் ஒரு நாள் காஃபி ஷாப்பிலோ. ஆள் நடமாட்டம் இருக்கிற பூ';காவிலோ போய் உட்கார்ந்து கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருக்கத்தானே அழைக்கிறேன்? அதற்குக் கூடவா உன் பாலன் தம்பதி. உன்னை விட மாட்டார்கள்?” என்று கேட்டான்,

லேசாகக் குறை கூறும் குரலில்,

அவன் எதிர்பார்த்தது போலவே. “அதெல்லாம் தடுக்க மாட்டார்கள்,” என்று முதலாளி ஜோடிக்கு அவசரமாக வக்காலத்து வாங்கினாள் உதயா,

தொடர்ந்து விளக்கமாக. “அலுவலகத்தில் எடுத்துச் செய்யும் ப்ராஜெக்ட். இப்போது கிட்டத்தட்ட நிறைவேறும் நிலையில் இருக்கிறது. ரூபன், அத்தோடு. பாலன் சாருடைய கிளையன்ட்டோடு கூட்டு வைத்துக்கொள்ளப் பெரிய ஆட்கள் எல்லாம் போட்டி போடுகிறார்களாம், பெரிய நகரங்கள்தோறும் இன்னும் நிறையக் கிளைகள் திறக்கத் திட்டமிடுகிறார்கள், அதிக வேலைக்காக. இங்கேயும் இன்னும் அதிக ஆள் சேர்க்கிறார்கள், அதனால். மாலையில் சீக்கிரமாகக் கிளம்ப முடியும் என்று நினைக்கிறேன், அது போன்ற சமயங்களில் உங்களை சந்திக்க முடியுமா என்று நானே கேட்பதாக இருந்தேன், நீங்கள் முந்திக் கொண்டீர்கள், ஆனால் நீங்கள் எப்படி. ரூபன்? முதலாளியே முன்னதாகக் கிளம்பினால். உடனேயே மற்றவர்களும் கிளம்பி விடமாட்டார்களா?” என்று சற்றுக் கவலையாகவே உதயா கேட்டாள்,

ஆக. உதயாவுக்கும் அவனோடு நேரத்தைக் கழிக்க ஆசைதான், அதிலே அவனுக்காகக் கவலை வேறு!

உள்ளூரப் பூரிப்புடன். “அதெல்லாம் என் அலுவலகம் நடக்கும் முறையே வேறும்மா, அன்றன்று கொடுக்கப்படும் வேலை. அன்றன்று முடிக்கக் கூடியதாக இருக்கும், எல்லாம் நேரக் கணக்குப் படியும் இருக்கும், அதற்கு மேற்பார்வையும் இருக்கும், அதனால் அலுவல் நேரம் முடிந்த பிறகும் யாரும் உட்கார்ந்து அதிக வேலை செய்ய நேராது!”

என்று சந்தடி சாக்கில் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றினான் சத்யன்,

சந்தோஷமாகக் கேட்டிருந்தவளின் முகத்தில் சந்தேகம் படரத் தொடங்கவும். அதைக் கண்டுகொள்ளாதவன் போலத் தொடர்து. "அதனால் என் வாழ்வின் சிறந்த பாதியாகப் போகிற என் கண்மணிக்கு. என் தொழில் என்ன ஆகுமோ என்ற கவலையே தேவையில்லை, போதுமா?" என்று விளையாட்டு போல அவன் கேட்க. அவளும் முகம் மலர்ந்து நகைத்தாள்,

ஆனால். அந்தப் பாலன் தம்பதி விஷயமாக. அவனால் அதிகம் முன்னேற முடியவில்லை,

பார்க்கில் அமர்ந்து ஊர்ப்பட்ட விஷயங்களை சந்தோஷமாக ஆய்ந்து அலசினார்கள்,

இடையிலே காம்பஸ் செலக்ஷன் பற்றி பேச்சு வந்தது,

படிப்பு முடியுமுன்னரே வேலைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுவிடுவதால். கடைசி செமஸ்டரில் மாணவர்கள் முழு முயற்சி செய்வதில்லை என்ற குற்றச்சாட்டு பற்றிப் பேச்சு வந்தது,

பிரச்சினையை முழுதாக அலசிய பின். அவரவர் முயற்சி பற்றிப் பேச்சு வந்தது, "தொழில் நிர்வாகம் பற்றிப் படித்துவிட்டுச் சொந்தத் தொழில் தொடங்குவதாக முதலிலேயே முடிவு செய்துவிட்டதால் நான் இந்த செலக்ஷனில் பங்கேற்கவே இல்லை, முயற்சி செய்திருந்தாலும். என் மனப் போக்குக்கு ஏற்ற வேலை கிடைத்திருக்குமோ . என்னவோ? நீ எப்படி? " என்று சத்யரூபன் விசாரித்தான்,

முகம் லேசாக வாட. "எனக்கு வேலை கிடைத்தது. ரூபன், ஆனால் வெளியூரில், அம்மா சின்ன வயதிலேயே கடவுளிடம் போய்விட்டதால். பாட்டிதான் கூடவே இருந்து என்னை வளர்த்தார்கள், அவர்களும் மறைந்து போய். அப்பாவும் நானும் மட்டும் என்று ..... இஇப்போது போலவே இருக்கத் தொடங்கிய புதிது, அதனால். எனக்கு அப்பாவைத் தனியே விட்டுப் போக மனமில்லை, அதே சமயம் "பாலா "வில் வேலை கிடைக்கவே. அதிலேயே நிலைத்துவிட்டேன், " என்றாள் அவள் மெதுவாக,

அவளது கையைப் பற்றி மென்மையாக வருடியவாறு. "மறந்த வலிகளைக் கிளறி விட்டிருந்தால் .....சாரி. உதிம்மா," என்றான் அவன் தணிந்த குரலில்,

"இல்லை, அப்படியில்லை. ரூபன், உண்மையில் இந்த வேலையில்

சேர்ந்த பிறகுதான். உருப்படியாக வாழ்கிறோம் என்ற தன்னம்பிக்கை எனக்கு வந்தது எனலாம்,

நம்மால் ஒன்றுமே செய்ய இயலாது என்கிற செய்கையற்ற நிலை மாறி. நம்மால் நமக்கு மட்டுமில்லாமல் அடுத்தவருக்கு உதவி செய்ய முடியும் என்கிற நிலை. மனதுக்கு எவ்வளவு திடத்தைத் தரும். தெரியுமா? அந்த மாதிரியான திடத்தைத் தந்து என்னை நிமிர வைத்தது. பாலன் சாரும் மஞ்சரி மேடமும்தான், அதற்காக அவர்களுக்கு நான் மிகவும் கடமைப் பட்டிருக்கிறேன். ரூபன்," என்று கூறியபோது. உதயாவின் குரல் உணர்ச்சி மிகுதியில் கரகரத்திருந்தது,

இவள் வேலை கிடைக்காமல். வளர்த்த பாட்டியும் இறந்து. தந்தையின் வருமானம் போதாமல். வீட்டில் செலவுக்கும் கஷ்டப்பட்டிருப்பார்கள், அந்த நேரத்தில் சர்க்கரைப் பேச்சுடன் வருமானத்துக்கு வேலையும் கொடுக்கவே. பாலன் கடவுளாகத் தோன்றிவிட்டார் போல!

"காலத்தினால் செய்த உதவி சிறிதெனினும்" அது உலகத்தை விடப் பெரிது என்று வள்ளுவரே சொல்லவில்லையா? உதயாவுக்கும் அப்படித்தான் தோன்றியிருக்கும்,

படிப்பு முடிந்து. உலக அனுபவம் அறிந்திராத வயது வேறு!

அப்படியே கல்லில் பொறித்த எழுத்தாக. உதி மனதில் பதிந்திருக்கும், இந்த உணர்வை மாற்றுவது மிகமிகக் கடினம் என்று சத்யன் உணர்ந்தான்,

ஆனால் மாற்றியே ஆக வேண்டும், இல்லாவிட்டால். உதயா அவனுக்கு ஒருபோதும் கிடைக்க மாட்டாள்!

இப்போது மஞ்சரி மேடம் கருவுற்றிருக்கிறாள் . உதவியாக இருந்தே ஆக வேண்டும்,. அடுத்து கைக்குழந்தைக்காரிக்கு உதவாமல் எப்படி? பிறகு அடுத்த குழந்தை வரும், அல்லது. பள்ளி செல்லும் பிள்ளையை மேடம் பார்க்க வேண்டாமா?

இப்படியே காலம் போய்க்கொண்டே இருக்கும், அவனும் உதயாவுக்காகக் காத்துக்கொண்டே இருக்க வேண்டியதுதான், "இலவு காத்த கிளி" என்பார்களே. அது போல!

ஊகூம், அது நடவாது, அது போல அசட்டு வேலை. அவன் செய்ய மாட்டான், எவ்வளவு சீக்கிரமாக முடியுமோ. அவ்வளவு சீக்கிரமாக உதயா. அவனுக்குக் கிடைத்தே ஆக வேண்டும்,

அதுவும். உதயாவுக்கும் அவன் மீது நேசம் இருக்கும்போது.

எதற்காகப் பிரிந்தே இருப்பது?

ஒரு நாள். “நீ எந்த ஆண்டில் இந்த வேலையில் சேர்ந்தாய். உதயா?” என்று சத்யரூபன் விவரம் கேட்டான்

“ஏன்ன? ஏன் கேட்கிறீர்கள்?” என்று கேட்டபோதும் அவன் கேட்ட விவரத்தையும் அவள் கொடுத்தாள்,

“வாவ்! நாலு ஆண்டுகள் முடிந்துவிட்டன! பிரமாதம்! இவ்வளவு காலத்தில். ஒரு தரம் கூடவா ..... என்ன முறைக்கிறாய்?”

“ஒரு தரம் கூடவா. வேறே வேலை தேடத் தோன்றவில்லை என்றுதானே. கேட்க இருந்தீர்கள், இல்லை. இல்லை. இல்லை! இது வரையும் இல்லை, இனிமேலும் அப்படித் தோன்றவே தோன்றாது!” என்றாள் அவள் அழுத்தம் திருத்தமாக,

“தமிழில் மட்டும்தான் இவ்வளவு திருத்தமாகப் பேச முடியும் என்று தோன்றுகிறது, நல்ல ஒலிபெருக்கியில் அறிவிப்பது போல. என்னத் தெளிவு! ஆனால் என்ன பிரச்சினை என்றால். நான் கேட்க எண்ணிய கேள்வியே வேறு! எனவே. இது தேவையற்ற பதிலாகிப் போய்விட்டது! கேள்விக்கு உரிய பதிலை எழுதாவிட்டால். பள்ளித் தேர்வில் என்ன மதிப்பெண் கொடுப்பார்கள். உதயா? நல்ல பெரிய கோழி முட்டைதானே? அடிக்கடி வாங்குவாய் போல! அய்யோ. பா .....வம்!” என்று போலியாகப் பரிதாபப்பட்டான் அவன்,

அவன் பேசிய விதத்தில் சிரிப்பு வந்து. “நான் ஒரு நாளும் அப்படி முட்டை மதிப்பெண் வாங்கியதே கிடையாது!” என்று ரோஷமாகப் பதில் கொடுத்த போதும். பேச்சின் தொடர்பை அவள் விட்டுவிடவில்லை,

“ஆனால் நீங்கள் கேட்கத் தொடங்கியது வேறே என்னவாம்?” என்று அவனை மடக்கிக் கேட்டாள்,

பயந்தவன் போல முகத்தை வைத்துக்கொண்டு. “இதற்கே இப்படிக் கோபப் படுகிறாய்? நான் நினைத்ததைக் கேட்டால். எப்படிச் சாமியாடி விடுவாயோ என்று பயம்ம்மாக இருக்கிறதே!” என்று சமாளிக்க முயல்வதை வெளிப்படையாகக் காட்டிக்கொண்டான் சத்யன்,

அப்போதும். “சொல்லிப் பார்த்தால் தானாகத் தெரிந்து விடப் போகிறது!” என்றாள் அவள் மிடுக்காக,

“சரி, உன்னிஷ்டம்!” என்றான் அவன் மனமற்றவன் போல,

உதயாவின் கோப மூச்சைக் கவனியாதவன் போலப் பேச்சைத்

தொடர்ந்து “இத்தனை ஆண்டுகளில். உன் பாலன் சாருக்குப் பெரிய ப்ராஜெக்ட் எதுவும் கிடைக்கவில்லையா என்று. அதைத்தான் கேட்க எண்ணினேன், பொதுவாக நீ

சொல்லி வருவதைப் பார்த்தால் அவர் கடுமையான உழைப்பாளி போலத் தெரிகிறது, ஆனால் இந்த நாலு ஆண்டுகளாக
அதாவது உனக்குத் தெரிந்தே நாலு ஆண்டுகள் என்றால். கூடுதல் காலமாகவும் இருக்கலாம்,. இத்தனை ஆண்டுகள் உழைத்தும் அதற்கேற்றவாறு அதிகம் பணம் பண்ணியதாகத் தெரியவில்லையே என்று. அதைத்தான் கேட்டேன், “ என்று கோவையாகப் பேசி முடித்தான்,

“அது ..... “ என்று யோசித்தாள் அவள்,

ரூபன் சொல்வது சரிதான், உதயா கூட இது போல
யோசித்திருக்கிறாள், ஆனால். அவளும் கூட இருந்து உழைப்பவள் என்பதால். அவளால் பதில் சொல்லவும் முடிந்தது, “என்ன உழைத்தாலும். இதுவரை அவர்களுக்குக் கிடைத்தது எல்லாமே சின்னச் சின்ன வேலைகள்தான். ரூபன், அதனால் வந்த பணமும் கொஞ்சம்தான், எனவே அதிகப் பணம்; பண்ண முடியவில்லை என்று தோன்றுகிறது, இப்போதுதானே பெரிதாக ஒன்று கிடைத்திருக்கிறது, “ என்று தாங்கிப் பேசினாள்,

“நல்ல வேளை! இப்போதாவது கிடைத்ததே! அந்த மட்டும் பிழைத்தேன்!” என்று ஒரு பெருமூச்சை வெளியிட்டு. அவளைப் புருவம் சுளிக்கச் செய்துவிட்டு. “ஆனால் ஒரு வேலையை வெற்றிகரமாகச் செய்யும்போது. அதை நாலு பேர் அறியும்படிச் செய்யச் சொல்லு, இவர்கள் செய்வது நன்றாக இருக்கும் என்று பரவினால்தானே. மற்றவர்களும் தேடி வருவார்கள்?” என்று தொடர்ந்து கூறினான் அவன்

“ஓ! நீங்கள் சொல்வது சரிதான்!” என்றாள் அவள்
ஆச்சரியத்தோடு, “இஇது கூட. முன்பு வந்த ஒரு கிளையன்ட் முலமாக அவருடைய தூரத்து உறவினர் ஒருவர் “பாலா” நிறுவனத்து வேலை பற்றி அறிந்து வந்ததுதான், அதாவது. வெற்றியைப் பற்றிய செய்தி பரவியதால் கிடைத்த ப்ராஜெக்ட்! உரெக்ட்! இனி நீங்கள் சொன்ன மாதிரி. வெற்றிகளை விளம்பரப் படுத்த வேண்டும்! சாரி ரூபன்,. உங்களுக்குப் பாலன் சாரையும் மஞ்சரி மேடத்தையும் அவ்வளவாகப் பிடிக்கவில்லையோ என்று சில சமயம் எனக்குத் தோன்றும், ஆனால். அவர்களுக்காக அக்கறையோடு யோசனை சொல்கிறீர்களே!” என்று வியந்து பாராட்டினாள் உதயா,

“சொன்னால் கோபப்பட மாட்டாயே? இது அவர்களுக்காக

மட்டும் சொன்னதில்லை, எனக்காகவும்தான், அவர்கள் சீக்கிரம் உயர்ந்துவிட்டால். உன்னை விட்டால் கதியில்லை என்கிற நிலை மாறிவிடும், நீயும். என்னைப் பற்றியும் நம் எதிர்கால வாழ்வைப் பற்றியும் யோசிப்பாயோ என்கிற நப்பாசைதான்," என்று மறுபடியும் அவர்களது சொந்த வாழ்வு பற்றி மென்மையாகவே நினைவுபடுத்தினான் அவன்,

"நான் ஒன்றும் உன்னை வேலை பார்க்கக் கூடாது என்று சொல்லவில்லையே! திருமணம் ஆன பிறகும். தொடர்ந்து பணி செய்யலாமே?" என்று உதயாவிடம் ஒருதரம் நேரடியாகவே கேட்டான்,

கனவு மிதந்த கருவிழிகளை இமை தாழ்த்தி மறைத்தாள் அவள்,

தொடர்ந்த சிறு மௌனத்தின் பின். "முதலில் மஞ்சரி மேடத்துக்கு நல்லபடியாகக் குழந்தை பிறக்கட்டும். ரூபன், நம்மைப் பற்றி அப்புறம் யோசிக்கலாம், " என்று முடித்தாள் உதயா,

நினைப்பது கூட அப்புறம்தானா என்று உள்ளூரக் குமுறியபோதும். இதில் ஒரு வாக்குவாதத்தைத் தொடங்கி உள்ள நிலைமையை மோசமாக்கிக்கொள்ள விரும்பாமல். சத்யரூபன் அமைதி காத்தான்,

எப்படியெப்படிச் சுற்றி வளைத்துப் பேசி. அவர்கள் இருவருக்குமான எதிர்கால வாழ்வு பற்றி உதயாவைச் சிந்திக்க வைப்பதற்கு சத்யரூபன் முயன்றாலும். அவளுடைய அலவலகப் பணி. முதலாளி குடும்ப நலனுக்கு முன். அவனது முயற்சி பயனற்றுப் போய்க் கொண்டே இருந்தது,

ஆனால் எளிதில் தோல்வியை ஒத்துக் கொள்கிறவன் அல்ல என்பதால். அவனும் முயற்சி செய்வதை நிறுத்துவதாக இல்லை!

இதே விஷயமாக யோசித்து. தன்னாலான முயற்சிகளைச் செய்த அடுத்த ஆள். அவனுடைய தாயார் விலாசினி,

மகனுடைய நண்பனைக் குடைந்ததில். ஸ்கேன் சென்டரில் உதயாவை சத்யன் சந்தித்த விவரம் தெரிய வந்தது,

எப்போதுமே அவர்களது மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளுக்கான ஸ்கேன்களை எடுக்க. அந்த "உதயரேகை"க்குத்தான் அனுப்புவது,

அவசரம் என்றால். யாரையேனும் அனுப்பி ஸ்கேன் ரிப்போர்ட்களை வாங்கிக் கொள்வதும் உண்டு,

உதயரேகைக்கும் இந்த உதயாவுக்கும் தொடர்பு இருக்குமோ என்று விலாசினிக்கு ஒரு சிறு சந்தேகம் தோன்றியது, ஆயினும் அது பற்றி அவள் அதிகமாக யோசித்து மூளையைக் கசக்கிக் கொள்ளவில்லை,

ஏனெனில். குறுகிய காலத்திலேயே நல்ல பெயர் எடுத்துவிட்ட சென்டர் உதயரேகை, அதன் உரிமைக்காரி. "பாலா" போன்ற சிறு நிறுவனத்தில் வேலை செய்ய வேண்டியிராது,

அத்தோடு. சொந்தப் பெயரைத்தான் நிறுவனத்துக்கு வைக்க வேண்டும் என்று என்ன கட்டாயம்? அவளுடைய குடும்பத்தில் அப்படிச் செய்யவில்லையே! அவர்களும் செய்யவில்லை,. மகனும் அப்படித் தன் பெயரை நிறுவனத்துக்குச் சூட்டிக் கொள்ளவில்லை,

ஆனால் உதயாவைச் சத்யன் முதல் முறை சந்தித்த இடம் அதுவே என்பதால். ஸ்கேன் எடுக்கச் செல்லும்போது. அங்கே உதயா பற்றி விசாரிக்கும்படி. முருகனுடைய மனைவியிடம் சொல்லி அனுப்பினாள்,

"அவளுடைய அப்பாவைப் பார்க்க அவ்வப்போது வருவாள், இருவரும் சேர்ந்து சாப்பிட்டுவிட்டு. மறுபடியும் அவரவர்களது பணிக்குப் போய் விடுவார்கள், " என்று தகவல் கிடைத்தது,

இதற்கு மேல். இயல்பு போலக் காட்டிக்கொண்டு விவரம் அறிய. முருகனுடைய மனைவிக்கு சாமர்த்தியம் போதாது என்பது விலாசினியின் அபிப்பிராயம், அத்தோடு. மகனும் இன்னமும் தெளிவாக ஒன்றும் சொல்லவில்லையே!

ஒரு சேலை தேர்ந்தெடுத்துக் கொடுத்தால் என் ஆளாகி விடுவாளா என்று கிட்டத்தட்ட மறுப்பு போல ஏற்கனவே ஒரு பேச்சு கூறியிருக்கிறான், இன்னும் அவனுக்குப் பிடிக்காத எதையாவது பண்ணி. மறுப்பை உறுதியாக்கி விடக் கூடாது என்று அந்தத் தாய் கருதினாள்!

ஆனால். கையைக் கட்டிக்கொண்டு சும்மா இருக்கவும் அவளால் முடியவில்லை,

என்ன. என்ன என்று தேடியவள் விரைவிலேயே ஒரு வாய்ப்பைக் கண்டுபிடித்தாள்,

ரங்கநாதன் விலாசினி தம்பதியின் திருமண நாள் சமயத்தில் அவர்களது சொந்த ஊரில் குலதெய்வத்திற்கான விழா நடக்கும் நாளாக இருக்கும்,

மருத்துவமனைப் பணியை அவர்களுடைய டாக்டர் நண்பர்கள்

இருவரிடம் ஒப்படைத்துவிட்டுக் குலதெய்வத்திற்குப் பூஜை போடுவதற்காகக் கணவனும் மனைவியும் கட்டாயம் ஊருக்குப் போய்விடுவார்கள், திருமண நாளன்று அந்தப் பூஜை செய்வதில் அவர்கள் இருவருக்கும் மிகுந்த ஆர்வம் இருந்தது,

திருமண நாளைக் கோயிலில் கொண்டாடி விடுவதோடு அவர்கள் முடித்து விடுவதில்லை, அதைத் தொடர்ந்து சில வாரங்களில் மருத்துவமனை தொடங்கிய நாள் வரும், அப்போது. மருத்துவமனைப் பணியாளர்களுக்குப் புத்தாடைகள் வழங்குவதோடு சிறப்பாக ஒரு விருந்தும் அளிப்பது அவர்களது பழக்கமாக இருந்தது,

வாய்ப்பு ஒன்றைத் தேடிக் கொண்டிருந்த விலாசினி. இந்த நாளைத் தன் நோக்கத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளத் திட்டமிட்டாள்,

இந்த விழாவில் பெண்களுக்கான துணிமணி வாங்குவதற்கு உதயாவின் உதவியை நாடினால் என்ன?

துணிமணித் தேர்வில் அவள் கெட்டிக்காரி என்று உறுதியாகி விட்டதால். அவளிடம் உதவி நாடுவது வேறுபாடாகவும் தோன்றாது!

செலவுக்கான பணத்தை அவனிடமே கொடுத்தனுப்பலாம்,

இருவருமாகச் சேர்ந்து. முப்பது பெண்கள். நாற்பது ஆண்களுக்குத் துணிமணிகள் வாங்குவது ஒரு நாளில் முடிந்துவிடாது,

பல நாட்கள் இளைய தலைமுறையினர் இருவரும் சந்தித்துப் பேசிப் பழகும்போது. தானாக இருவருக்கும் நெருக்கம் தோன்றிவிடாதா?

அப்புறமென்ன? கல்யாணம்தானே?

ஏகப்பட்ட கனவுகளோடு மகனிடம் விலாசினி விஷயத்தைத் தெரிவித்தாள்,

“என்னடா. வருஷா வருஷம் நாம் வாங்கிக் கொடுக்கிறோமே என்று என்ன மாதிரிக் கண்ணராவி என்றாலும் சகித்துக்கொண்டு வாங்கிக் கொள்ளுகிறார்கள், இந்த ஆண்டு எல்லோரும் விரும்பும் விதமாகவே வாங்கிக் கொடுக்கலாமே என்று எனக்கும் அப்பாவுக்கும் ஆசை! நம் உதயா என்ன அழகாக செலக்ட் பண்ணுகிறாள் பார்! அவளிடம் உதவி கேட்டு. இந்தப் பொறுப்பைக் கொடுத்தால். பிரமாதமாய்ப் பண்ண மாட்டாள்? எனக்குப் பாரேன். நம் மருத்துவமனை ஆட்களின் முகமலர்ச்சி இப்போதே கண்ணுக்குள் தெரியத் தொடங்கிவிட்டது!” என்று உற்சாகத்துடன் கூறினாள்,

தாயின் முகத்தை ஒரு கணம் கூர்ந்து நோக்கிய சத்யரூபனின் முகத்தில் புன்னகை விரிந்தது,

“நல்ல ஐடியாதான், ஆனால் நடப்பதும் நடக்காததும் உதயா கையில்தான் இருக்கிறது!” என்றான் அவன்,

“ஏன் சத்யா. இவ்வளவு அழகாகத் தேர்ந்தெடுக்கத் தெரிந்தவளுக்கு. அதுபோல நிறைய வாங்குவது பிடிக்கத்தானே செய்யும்?” என்று கேட்டாள் தாய்,

“பிடிப்பதை எல்லாம் செய்ய முடியுமா. அம்மா, அவகாசம். சில பிரச்சினைகளில்
, அவரவர் நிலைமை அவரவருக்குத்தான் தெரியும், ஆனால். உங்கள் தேவை பற்றி உதயாவிடம் தெரிவிக்கிறேன்,” என்று வாக்களித்தான் பிள்ளை,

அவனுக்குமே உள்ரூர ஆசைதான், உதயாவை அடிக்கடி சந்திக்கலாமே! எண்ணற்ற கற்பனைகளோடு உதயாவைச் சந்திப்பதற்குச் சென்றான் சத்யரூபன்,

ஆனால். நடந்தது வேறு! நேர்மாறு!

ரூரூரூ ரூரூரூ ரூரூரூ

அத்தியாயம் டூ 8

உதயாவிடம் இந்தத் துணிமணி விஷயத்தை சத்யரூபன் சொன்னபோது. அவளது முகமும் ஒரு கணம் பளிச்சென மலரத்தான் செய்தது!

தன்னைப் போலவே தாங்கள் இருவரும் அடிக்கடி சந்திப்பது பேசி மகிழ்வது

போன்ற கற்பனைகளில் அவளும் சந்தோஷப்படுகிறாள் என்று புரிந்து அவனது உதடுகள் விரியத் தொடங்கியபோதே. உதயாவின் முகம் மாறிப் போனது,

மறுப்பாகத் தலையசைத்து. “என்னால் முடியாது ரூபன், அதற்கு வாய்ப்பே கிடையாது, “ என்றாள் தெளிவாக,

“ஏன்?” என்று ஒற்றைச் சொல்லாக அவனது கேள்வி வந்தது,

“என்ன கேள்வி இது? ஒரு நிமிஷம் யோசித்திருந்தால். ஆன்ட்டியிடம் நீங்களே என்னால் முடியாது என்று எனக்காக மறுத்திருப்பீர்கள்,” என்றாள் அவள்,

“நான் யோசிக்கத் தெரியாத முட்டாள் என்றே வைத்துக்கொள்,

எல்லாம் தெரிந்த புத்திசாலி நீயே எனக்குப் பதிலைச் சொல்லலாம் அல்லவா? அல்லது. உன் விளக்கத்தைக் கூடப் புரிந்துகொள்ளாத மானா என்று எண்ணிவிட்டாயா?"

சற்றுத் திகைத்து அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான் உதயா,

இது கோபமா. கிண்டலா என்று புரிந்துகொள்ள அனுமதிக்காத. எந்த விதமான உணர்ச்சியும் காட்டாத பாவனை!

இதை எப்படி எடுத்துக் கொள்வது என்று புரியாதபோதும் இயல்பாகவே பேசத் தொடங்கி. "மானா. முட்டாள் என்று என்ன பேச்சு இது. ரூபன்? சின்னக் கணக்குதான், முப்பது சேலைகள் தேவை என்கிறீர்கள், சிலது பார்த்ததும் பிடித்துவிடும், சிலது இழுத்தடிக்கும், பொதுவாக ஒரு சேலைக்குப் பதினைந்து நிமிஷம் என்றாலும். ஏழு மணி நேரத்துக்கும் அதிகமாகிவிடும், பிரித்துப் பிரித்துச் செய்வதானாலும். வரப் போக. அதுவே அதிக நேரம் விரயமாகிவிடாதா? அந்த அளவு அவகாசம். எனக்கு ஏது. ரூபன்? நிச்சயமாக இந்த உதவி செயவதற்கு வாய்ப்பே இராதுதானே?" என்று விளக்கம் கூறி உதயா மறுத்தாள்,

ஆனால் அந்த விளக்கத்தை ஏற்றுக்கொண்டு அமைதியாகிவிட. சத்யனுக்கு மனமில்லை, அவனுடைய தாயின் முயற்சியல்லவா வீணாகப் போகிறது!

எனவே. "நான் சொல்வது தவறாக இருந்தால் திருத்து. உதயா, அன்றைக்கு மஞ்சரி மேடத்துக்கு உடை வாங்க வந்தது நினைவிருக்கிறதா? அப்போது நேரம் தாராளமாக இருந்ததே!" என்று கேள்வி கேட்டான்,

விழி மலர்த்தி. உதயா ஆச்சரியமாக அவனைப் பார்த்தாள் எதற்கும் எதற்கும். முடிச்சுப் போடுகிறான்! எல்லாம் அவளோடு சேர்ந்து பழகும் நேரத்துக்காக!

பூரிப்பை உள்ளடக்கி அவனுக்குப் பதில் சொன்னாள், "அது வேறு மாதிரி உடை,. ரூபன், நாம் அளவு கொடுத்துத் தயாரிப்பது அல்லை, ஈருயுராக இருப்பவர்களுக்கான பொது அளவிலான தயாரிப்பு, சில வண்ணங்களில் இருக்கும், மஞ்சரி மேடமும் ரொம்ப டிசைன் பார்க்க மாட்டார்கள், கடைக்குப் போனால் உடனே வாங்கிக்கொண்டு வந்துவிடலாம்," என்று விளக்கினாள்,

"ஆனால் அதற்கும். போவதற்கும் வருவதற்கும் நேரம் ஆகும்தானே?" என்று வாதம் செய்தான் சத்யன்,

இது விதண்டாவாதம்! சத்யரூபனைப் போல உலக ஞானம்

உள்ளவன் இப்படிக் கேட்பதானால். அவளது மறுப்பு அவனை வருத்தியிருக்கிறது என்று பொருள்,

அது மட்டுமல்ல, இது இரண்டாவது முறை,

ஆனால் அதற்காக ஏழு மணி நேரத்தை இந்த வேலைக்காக ஒதுக்க அவளால் முடியாதே!

ஒரு கணம் யோசித்துவிட்டு. "நான் வேண்டுமானால். ஆன்ட்டியிடம் பேசி என் இயலாமையின் காரணத்தை அவர்களிடம் நேரடியாகவே தெரிவித்து விடட்டுமா?" என்று அவனிடம் வினவினாள்,

சத்யரூபனுக்கும் யோசனைதான், மறுபடியும் இவள் விளக்கம் சொல்ல அல்லவா. அவனுடைய அன்னையோடு பேசுவதாகச் சொல்லுகிறாள்!

அதுவும். மறுப்பின் விளக்கமே!

இன்னொருவர் என்றால். உதயா அவரைத் தட்டிக்கழிக்க முயற்சிப்பதாக எண்ணுவார், ஆனால். விலாசினி வரிகளுக்கிடையே அர்த்தம் தேடி அறிகிற பெண்மணி, ஒருவேளை உதயாவின் பேச்சைத் தவறாகப் புரிந்துகொண்டால்? என்னவோ ரூபன். அவளைத் தொல்லை செய்வதாகவும். அதனால் ரசாபாசமில்லாதபடி உதயா அவன் வீட்டுப் பெரியவர்களிடம் பேசி அவனை அடக்கி வைக்க முயற்சி செய்கிறவளாகவும் ....அந்த மாதிரி எண்ணிவிட்டால்?

அன்னை அப்படி எண்ணினால் கூட நல்லதுதான், அன்னை அதை மனதிலேயே வைத்திருக்கப் போவதில்லை, மகனோடு பேசுவது நிச்சயம், அது ஒரு வாய்ப்பாய். உதயா வாய்மொழியாகவே உண்மை நிலையைக் கூற வைக்கலாமே!

அப்படியின்றி மகன் மேல் நம்பிக்கை குறையாவிட்டாலும் உதயாவின் மறுப்பை. அன்னை அப்படியே விட்டுவிட மாட்டார்கள், அவர்கள் மனதில் ஆர்வம் தோன்றிவிட்டது, எனவே. தொடர்ந்து வேறு ஏதாவது ஐடியா பண்ணக் கூடும்!

அவன் எண்ணியதே சரியாக. உதயாவின் விளக்கத்தை இயல்பாக ஏற்ற விலாசினி. அந்தச் சேலை துணிமணிக்கான காரணமான விழாவுக்கு வருமாறு உதயாவை அழைத்தாள்,

பெரியவளைச் சமாதானப்படுத்த வேண்டும் என்ற விருப்பத்தோடு இருந்த உதயாவும். அழைப்பை உடனே ஏற்றாள்,

எப்படியும். சற்று காலம் கழித்த பிறகே என்றாலும். மாமியார் ஆகப்

போகிறவர் அல்லவா? எப்போதும் எதிர்மறைப் பதிலையே சொல்வது கூடாது!

எல்லோரும் இதமான எதிர்பார்ப்புடன் விழா நாளுக்காகக் காத்திருந்தனர்,

அன்று ஒரு விழாவுக்குச் செல்வதாக. பாலன். மஞ்சரியிடம் சொல்லி. அவர்களிடம் உதயா அனுமதியும் வாங்கியிருந்தாள்,

விழாவுக்காக என்று உதயா புதிதாக ஓர் உடை வாங்கினாள், சல்வார்தான், ஆனால் வழக்கத்துக்கு நேர் மாறாக. அந்த செட்டைத் தேர்ந்தெடுப்பதற்கு. அவளுக்கு வெகு நேரம் பிடித்தது! கடைசியாகப் பல வண்ணக் கலவையில் ஒன்றைத் தெரிவு செய்தாள், மென் பட்டுத் துணியில். வானவில்லில் வண்ணங்கள் சாய்வுப் பட்டைகளாக ஒன்றோடொன்று கசிந்து அடுத்த நிறத்துக்கு மாறுவது போல. உடை அமைந்திருந்தது, ஊடே ஆங்காங்கே பளிச்சிடும் கைவேலைப்பாடு,

அவளுக்குப் பிடித்திருந்தது,

அவள் வாங்கி வந்ததைப் பார்த்த தந்தைக்கும் அது ரொம்பப் பிடித்தது! “இந்த உடையில் நீ ரதி போல இருப்பாய் கண்ணு!” என்றார் பெருமையாக,

அந்தக் கணத்தில். அவளுடைய ரூபன் பற்றித் தந்தையிடம் சொல்லிவிடலாமா என்று அவள் ரொம்பவும் எண்ணினாள், சொல்ல வேண்டும்போல மனம் மிகவும் துடித்தது,

ஆனால். ரூபனுடைய பெற்றோரிடம் தெரிவியாமல் நிறுத்தி வைத்திருக்கும் ஒரு நல்ல சேதியை அவளுடைய தந்தையிடம் மட்டும் எப்படிச் சொல்வது?

அத்தோடு. இதை இப்போது கூற வேண்டாம் என்று ரூபனைத் தடுத்து வைத்திருப்பதே அவள் அல்லவா?

இப்போது உதயாவுக்கே தங்கள் நேசம் பற்றி மேடையேறிக் கூவும் ஆவல் வந்தது! ஆனால் அவளது நேர்மை மட்டுமே அப்போது அந்த விருப்பத்தைத் தடுத்து நிறுத்தி வைத்தது!

எல்லாம் இன்னும் இரண்டே மாதங்கள், மஞ்சரிக்கு நல்லபடியாகக் குழந்தை பிறந்துவிட்டால். அத்துடன் அவளது கடமை தீர்ந்தது! அதாவது பெரிய பொறுப்புத் தீர்ந்துவிடும் எனலாம்! மற்றபடி வாழ்நாள் முழுதும் என்ன உழைத்தாலும். அது தீராத கடன் ஆயிற்றே!

எனவே சிரித்து. “போங்கப்பா. அந்தக் காலத்து ரதிக்கு. இந்த

சல்வார் செட்டை மாட்டி விட்டால் பயங்கரக் காமெடியாக இருக்குமே தவிர. அழகாக இருக்காது, எனக்கும் அப்படித்தான் இருக்கப் போகிறது என்று சொல்லாமல் சொல்கிறீர்களா?" என்று செல்லக் கோபம் காட்டினாள் பெண்,

மகள் விளையாடுகிறாள் என்று தெரிந்தபோதும் அஞ்சியவர் போல நடித்து. "அச்சோ அப்படி இல்லைடா செல்லம்! அந்தக் காலத்து உடையில் அந்த ரதிதேவி பேரழகியாகத் திகழ்ந்தது போல. இந்த உடையில் .....வந்து ....., மிஸ் யூனிவர்ஸ் போல ஜொலிக்கப் போகிறாய் என்றேன்! அதுதான் ஐடியா, இப்போது சரியாகச் சொன்னேனா?" என்று அவர் பாவனையோடு கேட்க. உதயாவும் கலகலவென்று நகைத்து அவர் மனதைக் குளிர்வித்தாள்,

கசங்கல் எதுவுமின்றி நீவிவிட்டு. அந்த உடையைக் கவனத்துடன் அவளது அலமாரியில் மகள் தொங்க விடுவதை. டீவி பார்க்கிறவர் போல அமர்ந்து கவனித்த சிவகுருவின் மனதில் பல இனிய கற்பனைகள் சிறகடிக்கலாயின,

மகளின் மனதிலோ. இன்னமும் பல மடங்கு!

உதயா மறுத்ததின் காரணத்தைப் புரிந்துகொண்டு. ரூபனுடைய தாயார் அதை நல்லபடியாகவே ஏற்றதோடு. மறுபடியும் ஒரு முக்கிய விழாவுக்கு அதைத்து. கோபம் வருத்தம் எதுவும் இல்லை என்று தெளிவாகக் காட்டியிருக்கிறாள்,

இங்கானால். மருத்துவர் சொன்னதை அணுப் பிசகாமல் கடைப்பிடித்து. மஞ்சரி அவளது ஆரோக்கியத்தைக் கருத்தோடு காப்பாற்றி வந்தாள்,

அலுவலகத்திலோ. மஞ்சரி மட்டுமே வந்து வந்து கவனித்தாக வேண்டிய தேவையில்லாமல். மேலும் சிலர் சேர்ந்து பணியாற்றுவதால். அங்கேயும் அவள் சென்றே தீரும்படியான நிலைமை ஏற்பட வாய்ப்பில்லை,

எனவே. சத்யரூபனுடைய பெற்றோரின் விழாவுக்கு உதயா செல்வதற்கு எந்தவிதமான தடையும் நேர வாய்ப்பு இல்லவே இல்லை!

எனவே. உதயாவும் தங்கு தடையின்றி சந்தோஷமாகக் கற்பனைகளைச் செய்து குவித்தாள், சில ஆண்டுகளாகச் செய்யாமல் விட்டதற்கும் சேர்த்து!

ஆனால். என்னதான் யோசித்து யோசித்துத் திட்டமிட்டாலும். மனிதன் விரும்புவது எல்லாம் அப்படியே நடக்கவா செய்கிறது?

உதயாவின் கனவுகள் நினைவாக வழியின்றித் தடையும் வந்தது,

அந்தத் தடையும். மஞ்சரி காரணமாகவே நேர்ந்தது,

மஞ்சரியும் பாலனும் ஐடி ந[pறுவனம் ஒன்றில் சேர்ந்து வேலை பார்த்துக் காதலித்து மணந்தவர்கள், ஏற்கனவே சரியான உறவில் இல்லாத இருவருடைய குடும்பங்களும் அவர்களைக் கைகழுவி விட. இருவருமே அதற்காகப் பெரிதாகக் கவலைப்பட்டு விடவில்லை, பதிவுத் திருமணம் செய்துகொண்டு சந்தோஷமாகவே வாழ்ந்தனர்

சொந்தத் தொழிலைத் தொடங்கி. கைக்கும் வாய்க்குமாக இருந்தபோதும் அப்படித்தான், கொஞ்சம் கொஞ்சமாக என்றாலும் முன்னேறிக்கொண்டுதான் இருந்தனர்,

அந்தச் சமயத்தில் கூடச் சேர்ந்து உண்மையாக உழைக்க உதயா கிடைத்தது. அவர்களது

அதிருஷ்டமாக அமைந்தது,

குழந்தைக்காக ஏங்கத் தொடங்கியபோது. முதல் குழந்தை உருவாகவும். வானத்தையே எட்டிப் பிடித்த திருப்தி அவர்களுக்கு,

அது முழுதாக உருப் பெறாமல் போனது. பெரிய அடிதான், ஆனால். அதற்காக யார் மீதும் பிழை காண அவர்களுக்கு விருப்பமில்லை, வேதனையைப் பொறுமையோடு சகித்தனர்,

கூடவே இருந்து பார்த்த உதயாவுக்கு. அந்த ஜோடி மீது பெரு மதிப்பு உண்டாயிற்று, அவர்களுக்காக எவ்வளவு உழைக்கவும் தயாராக இருந்தாள்,

மேலும் மூன்று ஆண்டுகள் ஏங்கியபிறகு. மறுபடியும் மஞ்சரி கருவுறவும். சந்தோஷப்பட்டதோடு. இருவரும் மிகுந்த கவனத்துடன் இருந்தனர்,

மஞ்சரியுடைய மருத்துவரின் வார்த்தை வேதம் போலக் கடைப்பிடித்தனர்,

பிள்ளைப் பிறப்புக்காக டாக்டர் குறித்துக் கொடுத்த தேதிக்கு இன்னமும் இரண்டு மாதங்கள் இருந்தன, எந்த விதமான பிரச்சினையும் எழ வாய்ப்பில்லை என்கிற நிலையில்தான் உதயா அன்று ஒரு நாள் விடுப்புக் கேட்டது,

கணவன் மனைவி இருவருக்குமே. உதயாவிடம் மிகுந்த அன்புண்டு, சில காலமாக உதயாவின் முகத்தில் இருந்த மலர்ச்சி கண்டு

இருவருக்கும் மகிழ்ச்சிதான், நல்ல பெண். நல்லபடியாக வாழட்டும் என்று பேசிக் கொள்வார்கள்,

“பாலா”வில் அன்றைய வேலை கிட்டத்தட்ட முடிந்துவிட்ட நிலை, சூப்பர் மார்க்கெட் குழுமத்துக்கான வேலை முடிந்து. ஏற்கனவே அனுப்பியாயிற்று, மற்றவையும் . இனி நாளை வந்து தொடரக் கூடியவையே,

வீட்டுக்குப் போய் மனைவியோடு கார்ட்ஸ். செஸ் போல ஏதாவது விளையாடினால் அவளுக்கு மகிழ்ச்சியாக இருக்கும்,

மற்ற அலுவலர்களை அனுப்பிவிட்டு. பாலன் கடைசியாக ஒரு சுற்று எல்லாம் சரிபார்த்துவிட்டுக் கதவை மூடுகிற சமயம் அவனது செல் ஒலியெழுப்பியது,

மஞ்சரியின் எண்ணைப் பார்த்தது. அவன் என்னவென்று கேட்கும் முன்னதாகவே. அவள் கதறத் தொடங்கிவிட்டாள்,

“பாலா எனக்கு வலிக்கிறதே! இன்னும் இரண்டு மாதங்கள் இருக்கும்போது
அதே போல எனக்கு விட்டுவிட்டு வலிக்கிறதே! பிள்ளை பிறக்கும் வலிதானே இப்படி இருக்கும் என்று டாக்டர் சொன்னார்கள், இப்போதே அது போல
பாலா. நான் என்ன செய்வேன்? எனக்குப் பயமாக இருக்கிறதே! உடனே வா. பாலா,” என்றவள் ஏங்கி ஏங்கி அழலானாள்,

“இதோ. உடனே வருகிறேன் பேபி, பயப்படாதே, நான் வந்ததும். நாம் நேராக டாக்டரைப் பார்க்கப் போகலாம், அனேகமாக. நம் பேபி ஏதாவது குறும்பு பண்ணுகிறதோ என்னவோ? அதனாலும் இருக்கலாம், டாக்டரம்மா கூட. அது போலெல்லாம் சொன்னார்களே ..... ,எதற்கும். நான் வந்ததும் நாம் டாக்டரைப் பார்த்து விடலாம் ..... ,”

மனைவியிடம் பேச்சுக் கொடுத்தவாறே. காரை எடுத்தான் பாலன்,

இரண்டாம் கையாக வாங்கிய கார்தான், இதுவரை நன்றாகவே உழைத்திருக்கிறது! இனியும்
.....கடவுளே. மஞ்சு எப்படி இருக்கிறாளோ? அவளைக் காப்பாற்று கடவுளே!

பாலன் எப்படி வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தான் என்பது அவனே அறியாதது, சீக்கிரமாக மனைவியிடம் போக வேண்டும் என்ற எண்ணமே காரை ஓட்டியது போல உணர்ந்தான் அவன்,

வீட்டை அடைந்ததும் காரை விட்டு இறங்கி ஓடி. படிகளில் வேகமாக ஏறத் தொடங்கினான், முதல் மாடியில் அவனது இருப்பிடம்,

படியேறும்போதே. காரைத் திருப்பி நிறுத்தினால் படியிறங்கி வரும் மஞ்சரிக்கு காரில் ஏற இலகுவாக இருக்குமோ என்று தோன்றவும். அப்படியே திரும்பிக் காரைப் பார்த்தவனுக்குக் கரண்டைக் காலிலோ அதை ஒட்டியோ. ஏதோ மொழுக்கென்றது,

கண்ணை இருட்டிக்கொண்டு வந்த தாங்க முடியாத வலியில் அடுத்த கணம். அந்தப் படிகளில் அப்படியே உட்கார்ந்துவிட்டான் அவன்,

தொடர்ந்த ஒரு சில கணங்கள் அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை,

காலில் விண் விண்ணென்று தெறித்த வலி. மற்ற எதையும் நினைக்கக் கூட விடவில்லை,

ஆனால். வீட்டின் உள்ளே அவனுடைய மனைவி தவித்துக் கொண்டிருப்பாளே!

அந்த ஒரு எண்ணம்தான் அவனை மறுபடியும் நனவுக்குக் கொண்டுவந்தது எனலாம்,

“ஐயோ!” என்று முனகியவாறு எழ முயன்றால் வலியில் மறுபடியும் சுருண்டான், காலில் ஏதோ உடைந்துவிட்டதா?

காலைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்தவனுக்கு. ஒன்று புரிந்தது,

இந்த நிலையில். மஞ்சரியின் பளுவைத் தாங்கி. அவளைக் கைத்தாங்கலாகக் காருக்கு அழைத்து வர அவனால் இயலாது!

அங்கே அவள் பிள்ளை வலியிலோ. வேறெந்த பொல்லாத வலியிலோ துடித்துக் கொண்டிருக்கிறாள், அவளை உடனே மருத்துவரிடம் அழைத்துப் போயாக வேண்டும்!

ஒரு கணம் யோசித்தவன். உடனே பான்ட் பையில் இருந்து. மொபைலை எடுத்தான்,

உதயா அன்று மிகுந்த கவனத்துடன் தன்னை அலங்கரித்துக்கொண்டாள், சும்மாவே அழகான கூந்தலுக்குக் காலையிலேயே ஷாம்பூ. கண்டிஷனர் போட்டு அலசிக் காய வைத்தாள், இப்படி. அப்படி என்று சில விதமாகச் செய்து பார்த்துவிட்டு. அது கொஞ்சம் அதிகப்படியாகத் தோன்றவே. கிட்டத்தட்ட எப்போதும் போலவே போனி டெயிலாகவே போட்டுக்கொண்டாள், ஆனால் சில சுருள்களை மட்டும் பின்னே இழுத்துக் கட்டாமல் அப்படியே விட்டுவிட. அவை உதயாவின் முகத்தை இன்னமும் எழிலுறச் செய்தன,

முகத்துக்கும் கைகளுக்கும் கடலை மாவுக் கலவை பூசி. ஊற

வைத்து. கழுவி .... ,அவள் அறிந்த அழகுக் குறிப்புகளைப் பயன்படுத்தி எல்லாம் கழுவிவிட்டு வந்து பார்த்தால் ரொம்பவும் நன்றாக இருப்பது போலத்தான் அவளுக்குத் தோன்றியது,

ரூபனுக்கும் அவனுடைய பெற்றோருக்கும் இது போலவே தோன்ற வேண்டுமே என்று ஒரு சிறு கலக்கம் வந்தது,

அதிசயமாக அந்த நேரத்தில் வீட்டுக்கு வந்த தந்தையிடம் காட்டி. அபிப்பிராயம் கேட்டாள்,

அவர் "பிரமாதம்" என்று சொல்லிப் போனாலும். அதில் திருப்தி இடையாமல். அப்பா என்றால் அப்படித்தானே தோன்றும் என்று மனதைக் குழப்பிக்கொண்டாள்,

ஒருவாறு. எல்லோருக்கும் பிடிக்கும் பிடிக்கும் என்று தன்னைத்தானே தேற்றிக்கொண்டு. இன்னும் சற்று நேரத்தில் காஜல் போட்டு முக அலங்காரத்தைத் தொடங்கவேண்டியதுதான் என்று அவள் நினைத்தபோது. அவளது மொபைல் கிணுகிணுத்தது,

மூன்று மணிக்குத்தானே. "இனியும் கூப்பிட்டால் விழாவுக்குத் தாமதமாக வர நேரும் என்று ரூபனை மிரட்டினாள், அப்படியிருந்தும் மறுபடியுமா என்று சிரிப்பும் அலுப்புமாக செல்ஃபோனை எடுத்தால். அழைத்தது பாலன்!

அவன் பேசியதைக் குறுக்கிடாமல் கேட்டுவிட்டு. உடனே வருமாறு டாக்சிக்குச் சொன்னாள், நல்லவேளையாகப் பக்கத்துத் தெருவிலேயே சவாரியை இறக்கி விட்டுக் கொண்டிருந்த டாக்சியே கிடைத்து. டிரைவரும் உடனே வருவதாகச் சொல்லவும். அதைப் பாலனுக்குத் தெரிவித்தாள்,

வீட்டில் இருந்த பணத்தை எடுத்துக்கொண்டு. தந்தைக்கு ஒரு குறிப்பு எழுதிவைக்கும்போது டாக்சி வந்துவிட. வேகமாகக் கிளம்பிப் போனாள்,

செல்லும்போதே மொபைலில் சார்ஜ் குறைவாக இருக்கவும். டாக்சி ஓட்டியிடம் காரிலேயே மொபைலுக்குச் சார்ஜ் பண்ணித்தர முடியுமா என்று கேட்டாள்,

அவரும் மறுக்காமல் அவளது செல் ஃபோனை வாங்கி சார்ஜ் போடும்போதே அவள் செல்லுமிடத்தோடு அவசரத்தையும் சொல்ல கார் வேகமாகப் பாய்ந்தது,

பாலனின் வீட்டிலும் டாக்சியோட்டி மிகுந்த மனிதாபிமானத்தோடு நடந்துகொண்டார்,

பாலன் சற்று சித்து ஆள்தான், எனவே. அவரைக் கிட்டத்தட்டத் தூக்கிவந்து காரில் அமர்த்தினார், அதற்குள் உரிய ஃபைல்களோடு கைத்தாங்கலாக மஞ்சரியை அழைத்து வந்தாள் உதயா,

கணவன் மனைவி இருவருமே அடுத்தவருக்கே முதலில் சிகிச்சை ஏற்பாடுகளை முதலில் தொடங்கவேண்டும் என்று வாதாடலாயினர்,

“இந்த வாக்குவாதத்தில் மிக முக்கியமான நேரத்தை வீணாக்க வேண்டாம்,” என்று உதயா எடுத்துச் சொல்லும்போதே. மஞ்சரிக்கு அடுத்த வலி வந்துவிட. அவள் பயந்து போய் முதலில் சிகிச்சைக்குச் செல்ல சம்மதித்தாள்,

அவளை அனுப்பிவிட்டு. பாலனுக்காக “ஆர்த்தோ” நிபுணரைப் பார்க்கத் தேவையானவற்றை வரவேற்பில் எழுதிக் கொடுத்துப் பணம் கட்டிய முடித்தவளின் எதிரே டாக்சி ஓட்டி வந்து நின்றார்,

“இனிமே என்னை அனுப்பி விடுகிறீங்களாம்மா?” என்று பரிவாகவே கேட்டார்,

ஐயோ! இவ்வளவு நேரத்தில் அவருக்கு இன்னொரு சவாரியே கிடைத்திருக்கும்!

நல்லவேளையாக. வண்டி ஓடத் தொடங்கியதும் செலவுக் கணக்கு செல்ஃபோனில் பதிவாகக் கூடிய வசதி உள்ள டாக்சி என்பதோடு. வண்டியில் இருந்து இறங்கும்போது வண்டியோட்டி. செல்லையும் கையோடு எடுத்து வந்திருந்தார்,

இது போன்ற அவசர நிலைகளை ஏற்கனவே கண்டவர் போலும், மீண்டும் கார் நிற்குமிடத்துக்கு வந்து கணக்குப் பார்த்துப் பணம் கொடுப்பது கஷ்டம்தானே?

மறந்ததற்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்டு காரோட்டிக்குப் பணம் கொடுத்து அனுப்பினாள்,

பிறகு மஞ்சரியின் “கைனகாலஜி” பிரிவுக்கு வந்து மிகுந்த கவலையோடு காத்திருந்தாள்,

சற்று நேரத்தில் அவளை அழைத்த மருத்துவர். அவளது முகத்தைப் பார்த்ததுமே. “பெரிதாகப் பயப்பட வேண்டாம்,” என்றார் ஆறுதலாக,

பலமுறை மஞ்சரியோடு வந்து பார்த்தவர்தானே?

தொடர்ந்து. “அனேகமாக இது பொய்வலியாகவே தெரிகிறது, பேறுகாலம் நெருங்கும்போது நிறையப் பெண்களுக்கு இப்படி நேர்வது

இயல்புதான், வீட்டில் பெரியவர்கள் இருந்தால் இதற்கு ஒரு கஷாயம் வைத்துக் கொடுப்பார்கள், பொய்வலி என்றால் அந்தக் கஷாயத்திலேயே போய்விடும், மஞ்சரிக்கு அப்படி யாரும் இல்லாததால் ரொம்பப் பயந்து போய்விட்டாள், அந்தப் பயத்தினால் ஏதேனும் நேராமல் இருப்பதற்காக அவளைத் தூங்க வைத்திருக்கிறேன், தூங்கி விழித்ததும் அவளைக் கூட்டிப் போகலாம்," என்று கூறி அவளை அனுப்பி வைத்தார்,

அதுவரை தொண்டைக்குள் வந்து நின்று துடித்த இருதயம். மறுபடி உரிய இடத்திற்குப் போய் அமர்ந்தது போல உணர்வு உதயாவுக்கு,

இவ்வளவு நேரம் அவள் மனம் என்ன பாடு பட்டுக் கொண்டிருந்தது என்று. யாருக்குத் தெரியும்,

எல்லையற்ற நிம்மதியில் உடம்பின் ஒவ்வோர் அணுவும் ஓய்ந்து. கால்கள் வலுவிழந்து விழுந்துவிடப் போவது போன்ற உணர்வு அவளுக்கு, பயந்துபோய் அவசரமாக ஓர் இருக்கையில் உட்கார்ந்து கொண்டாள்,

இனி பாலன் சார்! அவர் எப்படி இருக்கிறாரோ? மஞ்சரி கண் விழித்ததும் கணவனைப் பற்றியல்லவா கேட்பாள்!

அங்கே என்ன ஆயிற்றோ என்று அவள் கவலையுடன் காத்திருக்க சற்று நேரத்திலேயே. சக்கர நாற்காலியில். காலில் ஒரு பெரிய கட்டுடன் பாலன் வந்து சேர்ந்தான்,

மனைவியைப் பற்றிய விவரத்தை முதலில் கேட்டு அறிந்தவன். உதயா அவனது காலையே வெறிப்பதைக் கவனித்து. "கட்டைப் பார்த்துப் பயப்பட வேண்டாம். உதயா, சற்றுப் பெரிய அளவில் சுளுக்குதான், கால் முழுதாக எதிர்ப்புறம் திரும்பியிருக்கிறது, மூன்று நாட்கள் அசைக்கவே கூடாதாம், அப்படி அசையாமல் இருக்க முடியாது எனவும். இப்படிக் கட்டுப் போட்டுவிட்டார்கள், காலை ஊன்றுவது கஷ்டம், ஓர் ஊன்றுகோலை வாங்கி வைத்துக்கொண்டு சமாளிக்கச் சொன்னார் டாக்டர், சே! நான் மட்டும் கொஞ்சம் கவனத்துடன் இருந்திருந்தேன் என்றால் , உன்னைப் போட்டு அலைக்களிக்கத் தேவையிருந்திராது, பாவம்! நீ கூட ஏதோ விழாவுக்குப் போக வேண்டும் என்றாயே. சாரிம்மா," என்று அந்த முதலாளி பரிவாகக் கூறிய பிறகுதான். ரூபன் வீட்டு விழாவே உதயாவுக்கு நினைவு வந்தது,

கடவுளே! சத்யரூபன் என்ன நினைப்பான்!

ரூரூரூ ரூரூரூ ரூரூரூ

அத்தியாயம் டூ 9

சத்யரூபன் பெற்றோரின் அந்த விழா குறித்து உதயாவிடம் நிறையச் சொல்லியிருந்தான், இருவரும் மனமொத்த தம்பதிகள், அவர்களது வாழ்வின் மிக முக்கியமான திருநாள் அவர்களது திருமண நாளே ஆகும்,

அவர்களது திருமண நாள். ஊர்க் கோயில் விழா நாளோடு ஒத்துப் போவதால். அன்று அவர்கள் இருவரும் சென்னையில் இருப்பது முடியாது,

ஆனால் அந்த மருத்துவத் தம்பதிகள் தங்கள் பெரும் லட்சியமான தங்கள் மருத்துவமனையைத் தொடங்கியதே. அந்த நாளை ஒட்டித்தான்,

கோயிலில் திருமண நாளைக் கொண்டாடி முடித்துவிட்டு வந்ததுமே. மருத்துவமனை தொடங்கிய நாளும் வரும்,

அந்த நாளில் திருமண நாளையும் சேர்த்து. இங்கேயும் கொண்டாடி விடுவார்கள், மருத்துவமனையில் பணி புரியும் அனைவருக்கும். அது பெரிய டாக்டராக இருந்தாலும் சரி,. பெருக்கித் துடைத்து சுத்தம் செய்யும் கடைநிலை ஊழியரானாலும் சரி. நல்லபடியாகத் துணிமணி எடுத்துக் கொடுத்து.விருந்தும் படைத்துக் கோலாகலமாக அந்த நாளைக் கொண்டாடுவார்கள்,

மருத்துவமனை அலுவலர்கள் தவிர. மிக முக்கியமாக உறவினரும். அதே போல மிகவும் நெருங்கிய நண்பர்களையும் அழைத்து மகிழ்வார்கள்,

இந்த நெருங்கிய வட்டத்துக்குள் உதயாவை அழைப்பதற்கே உள்ளர்த்தம் உண்டு என்று சத்யரூபனுக்கு நிச்சயம்,

“நமக்குள் ஏதோ என்று அம்மா ஊகித்து விட்டார்கள். உதி, மற்றபடி. நீ ஓடி ஓடிப் போனாலும். உன்னை எப்படிக் கூப்பிடுகிறார்கள். பார்! ... “ என்றவனை இடையிட்டு. “நான் வேண்டும் என்று ஓடவில்லை. ரூபன், சந்தர்ப்பம் அந்த மாதிரி நேர்ந்துவிட்டது, அதை ஆன்ட்டியும் புரிந்து கொண்டுதான் அழைத்தார்கள், “ என்றாள் உதயா,

“ரைட், ஒத்துக் கொள்ளுகிறேன், ஆனால் இந்த விழாவுக்கு அழைத்திருப்பதுதான் இதில் முக்கியம், இது ஒரு தனிப்பட்ட மரியாதை, இந்தக் குடும்பத்துக்கு மிகவும் நெருக்கமானவள் என்று உன்னை அடையாளம் காட்டுவது, நான் மட்டும் பிடி கொடுத்துப் பேசியிருந்தால்

வருங்கால மருமகள் என்றே அறிவித்திருப்பார்கள், நீதான். உன் மஞ்சரி மேடத்துக்குக் குழந்தை பிறக்கும்வரை எதுவும் சொல்லக் கூடாது என்றுவிட்டாயே! அதனால் அம்மா என்னிடம் நேரே கேட்டபோது. நானும் இன்னமும் மனதில் ரொம்ப நிச்சயமாக உறுதிப்படவில்லை,. பார்ப்போம் என்று சொல்லி மழுப்பிவிட்டேன், அப்புறமும் உன்னை அழைத்திருக்கிறார்கள். பார், இத்தனைக்கும் உன்னை அவர்கள் நேரில் பார்த்ததில்லை, இரண்டு முறை மொபைலில் பேசியதோடு சரி, அதற்குள் உன் குரல் பிடித்திருக்கிறதாம்,. பேசும் பாணி பிடித்திருக்கிறதாம். பிரச்சினைக்குப் பயந்து ஒளிந்துகொள்ளாமல் நேரடியாக எடுத்துச் சொல்லும் நிமிர்வு பிடித்திருக்கிறதாம்! அடுக்குகிறார்கள், உன் தோற்றமும் அப்படிப் பிடிக்கும்படியாக நீ பிரமாதமாக அங்கே வரவேண்டும். உதி," என்றானே!

அவனது ஆர்வம் புரிந்தும். "அப்படியானால் சாதாரணமாக என் தோற்றம் அப்படி ஒன்றும் நன்றாயில்லை என்று சொல்லாமல் சொல்கிறீர்களா. ரூபன்?" என்று முகத்தை வருத்தமாக வைத்துக் கொண்டு கேட்டாள் அவள்,

அவளது வேடிக்கைக்குப் பதிலாக அவனும் சோகமாக "என்னம்மா செய்வது? என்னவோ வயதுக் கோளாறு, உன்னிடம் நான் மயங்கித் தொலைத்துவிட்டேன், "பன்றியின் குட்டியும் பருவத்துக்கு அழகு" என்பார்களாமே. அப்படி ஏதோ ஒரு போசில் ஏமாந்துவிட்டேன் என்று நினைக்கிறேன், ஆனால் என் பெற்றோரை அப்படி நீ மயக்க முடியாதில்லையா? அதனால்தான் அதிக அலங்காரத்தோடு வந்து என் மானத்தைக் காப்பாற்று என்றேன், ப்ளீஸ்யா ..... " என்று காலில் விழாத குறையாகக் கெஞ்சினான்,

"என்னது? பன்றிக் குட்டியா? போங்கள். ஏதாவது குப்பை மேட்டில் மேய்ந்து கொண்டிருக்கும். அதில் ஒன்றைப் பிடித்துப் போய். பார்லரில் அலங்காரம் செய்து கூட்டிப் போய்க் காட்டுங்கள், அழகே இல்லாத நான் வரவில்லைப்பா!" என்று அவள் பிகுப் பண்ண. "ஏ ..... ,ய். விளையாட்டுப்பா, நிஜம் அப்படி இல்லை என்று உனக்கு நன்றாகத் தெரியும்," என்று. அவளை அவன் சமாதானப்படுத்த ..... , அந்த உரையாடலை எண்ணுகையில் அப்போதும் அவளது உதடுகளில் புன்னகை தவழ்ந்தது,

தோன்றிய புன்னகை உடனே மறைந்தும் போனது,

எவ்வளவு ஆவலாக அவளை எதிர்பார்த்திருப்பான்!

அங்கே செல்லாததோடு. அதற்கு உரிய காரணமாக ஒரு வார்த்தை

கூட தெரிவிக்காமல் இருந்துவிட்டாளே! அதற்காக ரொம்பவும் கோபப்படுவானோ?

எவ்வளவு கோபம் என்பது. விரைவிலேயே அவளுக்குத் தெரிய வந்தது,

இன்னொரு சிக்கலாக. நடந்ததை இப்போதேனும் சத்யரூபனிடம் சொல்லி விடலாம் என்று தேடினால். கைப்பையில் அவளது மொபைல் கிடைக்கவில்லை,

பிறகே சார்ஜ் பண்ணித் தருமாறு டாக்சி டிரைவரிடம் மொபைலைக் கொடுத்தது அவளுக்கு நினைவு வந்தது,

எதிர்பாராத ஒரு நிகழ்வின் பரபரப்பில் எத்தனையை மறப்பாள் என்று தன்னைப் பற்றியே அலுத்தபோதும். இதை விட முக்கியம் வாய்ந்தது. அவளது வாழ்வில் வேறு என்ன இருக்க முடியும் என்றும் தோன்றியது,

பாலனிடம் அவனது செல்லை வாங்கி. ரூபனோடு பேசவும் உதயாவுக்குப் பிடிக்கவில்லை, விவரம் தெரிந்தால். தங்களால்தானே என்று பாலன்சார் இன்னமும் வருத்தப்படக் கூடும்,

எனவே. "இதோ வந்துவிடுகிறேன். சார்," என்று எழுந்து போனாள்,

அவ்வப்போது மஞ்சரியோடு வரும்போது. அருகிலேயே ஒரு பிசிஓவைப் பார்த்த ஞாபகம் அவளுக்கு இருந்தது, அங்கே போய்ப் பணம் போட்டுக் கூப்பிட்டால் முதலில் சத்யரூபன் எடுக்கவே இல்லை,

அறியாத எண் வந்தால் லேசில் எடுப்பதில்லை என்பானே!

ஆனால் மறுபடி முயன்றபோது. அவன் பேசினான்,

அவனது "மூலோ"வில். "சாரி ரூபன். இங்கே ... " என்று தொடங்கி. நடந்த விவரங்களை அவள் மடமடவென்று வேகமாகச் சொல்லலானாள்,

ஆனால் "சற்று நிறுத்திக் கொள்கிறாயா?" என்று அவள் பேச்சில் குறுக்கிட்ட சத்யரூபன். "அவர்கள் இருவருக்கும் இப்போது ஆபத்தில்லை அவ்வளவுதானே? சந்தோஷம், நீ அவர்களோடு மருத்துவமனை சென்ற விஷயம் எனக்குத் தெரியும், அவர்களுக்காக. உன் மொபைலைக் கூட மறந்து விட்டுவிட்டுப் போனாயே. அந்த டாக்சி டிரைவர். உன் மொபைலில் இருந்த என் எண்ணில் கூப்பிட்டு என்னிடம் சொன்னார், இப்போது அவர் கூடுவாஞ்சேரிப் பக்கமாக இருப்பதால்

நாளைக் காலை உன் வீட்டில் செல்லைக் கொணர்ந்து தருவதாகச் சொன்னார், இனி வைத்துவிடு, எங்களை மதித்து வந்த விருந்தினர்கள். விழா முடிந்து கிளம்பிக்கொண்டு இருக்கிறார்கள் அவர்களை வழியனுப்ப நான் செல்ல வேண்டும்," என்றுரைத்து. அவள் பதில் கூறுமுன்பாகவே மொபைலை ஆஃப் செய்தான்,

"மதித்து வந்த விருந்தினர்கள்"!

அவன் கோபமாக இருப்பது உதயாவுக்குப் புரிந்தது, அப்படி இருப்பது நியாயமும்தான், ஆனால். அதை அப்படியே விட்டுவிட முடியுமா? அவள் பக்கமும் நியாயம் இருக்கிறதுதானே? அதைச் சொல்ல விட வேண்டாமா?

அவள் சொல்வதையும் கேட்டால்தானே நியாயம் என்ன என்று தெரியும்?

மீண்டும் அவள் முயன்றபோது. ஸ்விட்ச் ஆஃப் என்று வந்தது,

வருத்தமாக இருந்தபோதும். ரூபனோடு பேசியதில் ஒரே ஒரு நல்லதாக. அவளது செல்ஃபோன் திரும்பக் கிடைத்துவிடும் என்று தெரிந்தது! காரோட்டி நல்லவராக இருந்தது. ஒரு கூடுதல் நன்மை!

இரவு பாலன் தம்பதியை வீட்டுக்குக் கூட்டிப் போய் கொண்டு விட்டுவிட்டு உதயா வீட்டுக்குத் திரும்பிச் செல்வதற்கு. இரவு பதினோரு மணிக்கு மேல் ஆகிவிட்டது, பாலன் வீட்டு வேலைக்காரம்மாவை. அவள் வீடு தேடிப் போய் அழைத்து வந்து. பாலன் குடும்பத்துக்கு இரவும் துணையாக அங்கேயே இருக்குமாறு ஏற்பாடு பண்ணவும் வேண்டியிருந்தது,

இருவருமே அவளுக்கு "நன்றி"யோடு "சாரி"யும் சேர்த்துச் சொன்னார்கள்,

எல்லாம் செய்துவிட்டு ஒருவாறு வீட்டுக்கு வந்து சேர்ந்தால். கொட்டக் கொட்ட விழித்துக்கொண்டு அவளுடைய தந்தை முகம் வெளுத்து உட்கார்ந்திருந்தார்!

"என்னம்மா. மஞ்சரிக்கு என்ன? அவளுக்கு என்ன ஆயிற்று? இப்போது ஒன்றும் பயமில்லையே ,? குகு குழந்தைக்கு ....., ஒஒன்றுமில்லையே?" என்று பதறினார்,

மனம் உருகிப் போய்விட. அவரைத் தேற்றி. நடந்த விவரங்களைச் சொல்லி ஆறுதல் படுத்தி உறங்க அனுப்பிவிட்டு. அவளும் படுத்தபோது பாதி ராத்திரி முடிந்து போயிருந்தது,

அப்புறமும் அவளுக்கு உடனே தூக்கம் வரவில்லை,

சத்யரூபனின் கோபமே திரும்பத் திரும்ப நினைவில் வந்து அவள் மனதைக் கலங்கச் செய்தது,

சரியாகச் சொல்வதானால். அவள் மேல் தப்பே இல்லைதான், அவனைப் போலவே. விழாவில் கலந்துகொள்ள முடியாமல் போனது. அவளுக்கும் பெரிய ஏமாற்றம்தான், ரொம்பவும் வருத்தம்தான்,

ஆனால். இதை எப்படி அவனைப் புரிந்து கொள்ளச் செய்வது?

இருவரும் சந்திக்கும் இடங்களுக்கு அவன் வராமலே இருந்துவிடுவானோ? அவளை அடியோடு வெறுத்துவிடுவானோ?

பேச்சைப் பாதியில் கட் பண்ணி. ஸ்விட்ச் ஆஃப் செய்து வைத்தானே! அவளோடு பேசப் பிடிக்கவில்லை என்றுதானே அர்த்தம்? இனி அவளோடு பேசவே மாட்டானோ?

அவள் எப்படித் தாங்குவாள்?

என்னென்னவோ எண்ணி எண்ணித் தூங்க முடியாமல் உருண்டு புரண்டவள் ஒருவாறு உறங்கும்போது விடிகாலை ஆகிவிட்டது,

மகள் அயர்ந்து உறங்குவதைப் பார்த்த சிவகுரு. தான் மட்டுமாக "வாக்" போவதாகவும். திரும்பி வரும்போது காலை உணவுக்கு ஏதாவது வாங்கி வருவதாகவும் அதனால் நிம்மதியாகத் தூங்குமாறும் குறிப்பெழுதி வைத்துவிட்டுக் கிளம்பிச் சென்றார்,

ஆனால் அப்படிப்பட்ட தூக்கம் உதயாவுக்குக் கிட்டவில்லை,

நாணயவானான டாக்சி ஓட்டுனர். அவளது மொபைலைக் கொடுப்பதற்காக வந்து மணியடித்து அவளை எழுப்பிவிட்டார், முதலில் இதைக் கொடுத்துவிட்டுத் தொழிலுக்குப் போகிற அவசரம் அவருக்கு,

தூக்கக் கலக்கத்தைப் போக்க முயன்றவாறே வந்து கதவைத் திறந்து. மொபைலை வாங்கிக்கொண்டு நன்றி சொல்லி. ஒரு டீயும் போட்டுக் கொடுத்து அவரை அனுப்பி வைத்தாள்,

தந்தையின் குறிப்பைப் பார்த்துவிட்டு. மறுபடியும் படுக்கப் போகலாமா வேண்டாமா என்று அவள் யோசித்தபோது பொறுமையற்று அழைப்பு மணியைப் படபடவென்று அடித்து . அவள் திறந்ததும் புயலாக உள்ளே வந்தவன் சத்யரூபன்!

ஆத்திரத்துடன் அவளை முறைத்தபடி. "என் அம்மாவைப் பற்றிச் சொன்னேன் இல்லையா? அந்த விழா பற்றியும் சொன்னேன்தானே? சொன்னேனா. இல்லையா? நான் அன்பு வைத்தேன் என்கிற ஒரே

காரணத்துக்காக. உன்னை எவ்வளவு உயர்வாக எண்ணி. எவ்வளவு பிரியமாக அழைத்தார்கள்? அப்படிப் பட்டவர்களுக்கு. முகத்திலேயே அடித்த மாதிரி. என்ன மரியாதை செய்திருக்கிறாய். பார்! “ என்று சீறினான்,

எப்படி விளக்கினால் இவனது கோபம் குறையக் கூடும்? என்ன சொல்லிப் புரிய வைப்பது? முதலில். அவள் சொல்வதை அவன் காது கொடுத்துக் கேட்க வேண்டுமே!

சிறு தயக்கத்தின் பின். “ப்ளீஸ் ரூபன். என் பேச்சைக் கொஞ்சம் பொறுமையாகக் கேளுங்கள், எனக்கு வேறு வழியில்லாமல் போயிற்று. ரூபன், மஞ்சரி மேடத்துக்கு. உரிய நாளுக்கு இரண்டு மாதம் முன்னதாக வலியெடுத்து. அதில் அரண்டு போனார்கள், பதட்டத்தில் வேகமாகப் போன பாலன் சாருக்குக் கால் பிசகி நடக்க முடியாமல் போய்விட்டது, அவர்களை எக்கேடும் கெடட்டும் என்று விட்டுவிட முடியுமா?” என்று கேட்டாள் அவள்,

ஆத்திரமாக முறைத்துவிட்டு. “தேவையில்லை,” என்றான் அவன், “ஆனால். ஒரு கொத்தடிமை போல நீ அவர்களோடு போய். மருத்துவமனையில் காத்துக் கிடந்து தவம் செய்திருக்கத் தேவையில்லை, ஓர் ஆம்புலன்ஸ் ஏற்பாடு செய்து அழைத்துப் போகச் செய்திருக்கலாம், சொல்லப் போனால். அந்த பாலனே செய்திருக்க வேண்டியது. இது, அப்புறமும் உரிய மருத்துவக் கைகளில் அவர்களை ஒப்படைத்துவிட்டு. நீ கிளம்பி. சற்றுத் தாமதமாகவேனும் வந்திருக்கலாம், அவர்களைத் திரும்ப வீட்டுக்குக் கூட்டிப் போய்ச் சேர்க்கிறவரை. தாதி வேலை செய்வானேன்?” என்று கடுமையான குரலில் கேட்டான்,

செய்திருக்கலாமோ என்று ஒரு கணம் அவளுக்குமே தோன்றிவிட்டது, ஆனால். கவலையும் பயமுமாக வீட்டை அவர்கள் என்ன நிலையில் விட்டு வந்தார்களோ என்று பார்க்க வேண்டாமா? வீட்டுக்குப் போனதும். அவர்களுக்கு உண்ண. அருந்த ஏதாவது கொடுத்து அமைதியடையச் செய்யாமல் யாரோ போல எப்படிப் போவது?

அதையெல்லாம் செய்து முடித்து. வீட்டு வேலைக்காரியையும் வரவழைத்து. அவர்களுக்குத் துணையாக இருக்கச் சொன்ன பிறகுதானே அவளால் கிளம்ப முடிந்தது?

சொன்னால். முன் போலவே அவசியம் இல்லை என்பான், வீண் வாக்குவாதம் வளரும், வாய்ப் பேச்சு முற்றி. சொல்லக் கூடாத வார்த்தை

எதுவும் வாயில் வந்துவிட்டால்? சொன்ன வார்த்தையைத் திரும்பப் பெறமுடியுமா?

அப்படி ஏதாவது சொல்லி அவனை அடியோடு பிரிய நேர்ந்துவிட்டால்? எப்படியும் நேற்று பேச்சைக் கட் பண்ணியவன். இன்று வீடு வரை வந்து பேசுவதே பெரிய காரியம்,

எனவே. பதிலுக்குப் பதில் சொல்லி சினமூட்டுவதை விடுத்துப் பேச்சைக் கட்டுப்படுத்தி மௌனம் காப்பது நல்லது என்று உதயாவுக்குத் தோன்றியது,

அவள் தன்னைக்கட்டுப்படுத்திக்கொண்டு சும்மா இருந்தபோது. அதைக் கவனிக்கக் கூட இல்லாமல். தன் பிரச்சினையிலேயே உழன்றவனாக சத்யன் தொடர்ந்து பேசினான்,

“இத்தனைக்கும் அந்த பாலன் பார்க்கக் கூட அவ்வளவு நன்றாக இல்லை, குள்ளம் வேறு,” என்றான் வெறுத்த குரலில்,

இப்போது எதற்காக இந்த வர்ணனை?

திகைத்து “நன்றாக
இல்லையா? அவர் எப்படி இருந்தால் உங்களுக்கு என்ன? அவர் மஞ்சரி கண்ணுக்கு நன்றாக இருந்தால் போதுமே, இப்போது இதை எதற்காக
“ என்று புருவம் சுருக்கி யோசித்தவளின் முகம் சட்டெனச் சிவந்தது,

“நீங்கள் என்ன பேசுகிறீர்கள் என்று யோசித்துதான் பேசுகிறீர்களா?” என்று காளி போலக் கண்களை உருட்டி விழித்துக் கேட்டாள்,

“பின்னே? அவர்களுக்காக உயிரைக் கூட விடுவாய் என்றால். வலுவான காரணம் ஒன்று இருக்க வேண்டும் அல்லவா? ஏற்கனவே பல முறை யோசித்ததுதான், அதிலும். நேற்று இரவு முழுதும் தூங்க முடியாமல் அலசி ஆராய்ந்து மண்டையைக் குழப்பி முடித்து விட்டுத்தான். உன்னிடம் இதைக் கேட்கிறேன்”

“அது
, சரி! அந்த மண்டைக்குள் உருப்படியாக ஏதாவது இருந்தால் அல்லவா சரியாக யோசிக்கும்?” என்றாள் அவள். கோபமும் பரிகாசமுமாக,

அவன் சீற்றத்துடன் தலையைச் சிலுப்பும்போதே. அவளும் சீரியசாகி. “முதலில் நீங்கள் ஒன்றைப் புரிந்து கொள்ளுங்கள், ஒரு போதும். ஒரு நாளுமே. அப்படியெல்லாம் யாருக்காகவும் நான் உயிரை விட்டுவிட மாட்டேன், ஏன்? உங்களுக்காக என்றாலுமே அப்படித்தான்,” என்றாள் அழுத்தம் திருத்தமாக,

வினாடி மௌனத்தின் பின். “அதாவது. அந்த பாலன் குடும்பத்தை விட. உன் மனதில் நான் உயர்வுதான் சொல்லாமல் சொல்கிறாய் போல? அதற்காக நான் சந்தோஷப்பட வேண்டுமா? ஆனால் உன் வாய் என்ன சொன்னாலும். நடப்பு அப்படி இல்லையே! அந்த மனிதர்களுக்காக என்னிடம் வார்த்தை தவறுவது வாடிக்கை ஆகிறதே!” என்றான் அவன் பிடிவாதக் குரலில்,

குரலில் பிடிவாதம் இருந்தாலும் சீற்றம் தணிந்திருப்பது போலத் தோன்றவும். உதயா நிலைமையை விளக்க எண்ணினாள்,

“கொஞ்சம் மனிதாபிமானத்தோடு யோசித்துப் பாருங்கள். ரூபன், திருமணமாகிப் பல ஆண்டுகளுக்குப் பின் கருவுற்று அதுவும் ஒரு முறை கலைந்து போயிற்று, மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு. மஞ்சரி மேடம் இப்போது மீண்டும் உண்டாகி இருக்கிறார்கள், டாக்டர் வேறு அதிகம் அலட்டிக் கொள்ள வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்கள், எச்சரிக்கையோடு இருக்க வேண்டும்தானே? அதுவும் பிரசவ வலி போலவே வலித்தால். அவர்களுக்கு எவ்வளவு பயமாக இருக்கும்!” என்று முந்தைய நாள் நிலைமையை. அவன் இளகும் வண்ணம் சித்தரிக்க முயன்றாள் உதயா,

ஆனால் சத்யரூபனும் ஒரு முடிவுடன் வந்திருந்ததால். சற்றும் இளகினான் இல்லை!

அவளது கூற்றை ஏற்பது போல. “கட்டாயம்! ரொம்பவும் பயமாகத்தான் இருக்கும்,” என்று ஒத்துக் கொள்ளவும் செய்தான்,

அவள் சற்று நம்பிக்கையோடு நிமிரும்போதே. “ஆனால் அது அவர்களது பிரச்சினை,” என்றான் அவன் கண்டிப்பான குரலில்,

அவள் பிரமித்து நோக்கும்போதே குரலின் கடுமை முகத்திலும் பரவ. “அவர்கள் இருவரும் ஒன்றும் அறியாத பச்சைப் பிள்ளைகள் அல்லவே? நேற்று நடந்தது போல
, அப்படி ஒரு பிரச்சினை வரும்போது. அதற்கு என்ன செய்வது என்று யோசித்துத் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டியது. அவர்கள் பொறுப்பு அல்லவா? அதை விட்டு. அவர்களுக்காகவே யோசித்து. அவர்களுக்காகவே செயல்பட. உனக்கென்ன தலையெழுத்து? அதுவும். உன் சந்தோஷம். உன் வாழ்வைக் கூட அழித்துக் கொள்ளத் தயாராக இருப்பது எப்படி சரியாகும்? இயற்கைக்கே விரோதமாகத் தெரியவில்லையா? வேலையை விட்டுவிடு என்றாலும் மறுக்கிறாய், நீயே சொல், இதில் எதுவும் சரியாக இல்லைதானே?” என்று கேட்டான் அவன்,

அவன் மனதை இளக்கும் தன் முயற்சி வீண் என்று

உணர்ந்தவளுக்கு எரிச்சல் வந்தது, “என்னால் வீட்டில் சும்மா உட்கார்ந்திருக்க முடியாது, “ என்றாள் சுள்ளென்று,

“அப்படி இரு என்று நானும் சொல்லவில்லை, இது ஒன்றுதான் வேலை என்று கிடையாது,. வேறு வேலை தேடிக் கொள்ளலாம் என்றுதான் சொன்னேன்,” என்றான் அவனும் விடாமல்,

ஒரு கணம் உதயா வாயடைத்துப் போனாள்,

இந்தச் சமயத்தில். “பாலா”வின் வேலையை விட்டுவிடுவதா? அதைவிட. பாலன். மஞ்சரி இருவரின் முதுகிலும் கத்தியால் ஆழக் குத்திவிடலாம்!

“ப்ளீஸ். இந்தப் பேச்சுப் பேசாதீர்கள், இஇந்தச் சமயத்தில் அவர்களை விட்டுவிட்டு நான் வெளியே வர முடியாது, ஊகூம், வாய்ப்பே கிடையாது, “ என்று உறுதியான குரலில் கூறினாள் அவள்,

முகம் கடுப்படிக்க. “வாய்ப்பே கிடையாது என்று என்னிடமே சொல்கிறாயா? அதுவும் திட்டவட்டமாக! யோசி உதயா. இப்படி நீ சொல்லும்போது. என்னை விட முக்கியமானவர்களாக அவர்களையே நீ கருதுகிறாய் என்று தெளிவாக வில்லையா? அல்லது , இப்போது. நான் வேறு என்ன நினைப்பது? நீயே சொல்லேன்?” என்று அவளது வார்த்தைகளைக் கொண்டே. அவளை மடக்க முயன்றான் சத்யரூபன்,

உரிய காரணத்தை அவளால் சொல்ல முடியாது போகவே. “ஏதோ காரணம் இருக்கும் என்று எண்ணலாமே! வந்து , அதைச் சொல்ல விருப்பம் இல்லாமல் கூட இருக்கலாம்,” என்றாள் அவள் எடுப்பாக,

அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டு. சத்யன் கேட்டான், “என்னிடம் சொல்ல விருப்பம் இல்லையா அல்லது என்னையே விரும்பவில்லையா?”

அடிபட்ட மானாய்ப் பார்த்தவளுக்குக் கரகரவென்று கண்ணீர் வழிந்தது,

பார்வை மாறாமல் அவன் கூறினான், “என் பெற்றோரை நீ பார்த்ததில்லையே. ஒருவருக்காக ஒருவர் பதில் சொல்லுவார்கள், எதற்காகவும் சம்மதத்துக்காக அடுத்தவர் முகத்தைப் பார்க்கும் தேவையே இராது, அவ்வளவுக்கு ஒத்த மனம், அதைப் பார்த்து வளர்ந்தவன் நான், ஆனால் பார். உனக்காக ஒன்றுமே. ஒரு வார்த்தை கூட என்னால் உறுதியாகச் சொல்ல முடியவில்லையே! அவ்வளவுக்கு அன்னியராகத்தானே இருக்கிறோம்? இப்படியே போனால் இது என்ன வாழ்க்கை என்று ஒரு சமயம் தோன்றிவிடாது? கட்டாயம் தோன்றும் ,

“

அவளது மனத்திரையில் ஏதேதோ தெளிவற்ற வடிவங்கள் தோன்றின, நாலைந்து உருவங்கள் துரத்தியது
அவர்களின் பிடியில் இருந்து விடுவித்துக்கொண்டு அலையக் குலைய ஓடியது
,கதவு திறந்தது. கடைசியாக அந்தக் கதறல்! அதன் விளைவு! விளைவின் காரணம்!

எதை இவனிடம் விளக்குவது? எதை விடுவது? எல்லாமே சொல்லலாமா? ஆனால். அதற்கு இருக்கும் பெரிய தடை! அவளால் காட்டிக் கொடுக்க முடியாதே, ஒன்றும் ஆகாது என்று துணிந்து சொன்னாலும். ஒருவேளை அதன் விளைவு விபரீதமாகிவிட்டால்?

சத்யரூபன் மனம் பேதப்பட்டு இருக்கும் இந்த வேளையில். அந்த வழியில் தைரியமாகச் செல்ல முடியாது, மணமான ஒருவரை அவள் விரும்புவதாகக் கூசாமல் குற்றம்சாட்டுகிற அளவு அவன் இறங்கி இருக்கும் இந்த நேரத்தில். அது சாத்தியமே கிடையாது!

இருவருமே தூக்கமின்றி உடல் சோர்ந்து. நடந்த சம்பவங்களால் மனம் கலங்கி இருக்கும் இந்த நிலையில் எந்த முடிவெடுப்பதும் சரியாகாது, பெரும் தவறாகி விடக் கூடும்,

இருவருமே சற்று அமைதி அடைய வேண்டும், அதற்கு அவகாசம் வேண்டும்,

“இது பற்றி நான் நிறைய யோசிக்க வேண்டும், ரூபன், சில நாட்கள் அவகாசம் கொடுங்கள், “ என்று சத்யரூபனிடம் கேட்டாள் உதயா,

“இதில் யோசிப்பதற்கு என்ன இருக்கிறது? இதைப் பற்றி யோசித்துதான் முடிவு சொல்ல வேண்டும் என்று நீ கூறுவதே நமக்குப் பின்னடைவுதான் என்று உனக்குத் தெரியவில்லையா? ஆனாலும் சரி, நன்றாக யோசி, ஆனால் இரண்டில் எது என்று கடைசி முறையாக யோசி!” என்றவன். அவனது “கடைசி முறை”யில் அவள் திடுக்கிடவும். ஓர் அழுத்தத்துடன் “ஆமாம் கடைசி முறையாகத்தான், இனியும் இந்த இழுபறி விளையாட்டுக்கு நான் வருவதாக இல்லை! “ என்றான் தெளிவாக,

ரூரூரூ ரூரூரூ ரூரூரூ

அத்தியாயம் டூ 10

கொஞ்ச நாட்கள் தள்ளிப் போட்டால். இருவரின் உணர்ச்சி

வேகங்களும் சற்று அமைதியாகி விடும் , அப்போது இருவருமே நிதானமாகப் பேசி எதிர்காலம் பற்றி முடிவு செய்யலாம் என்று எண்ணியே சத்யரூபனிடம். உதயா அவகாசம் கேட்டாள்,

ஆனால் அவன் இறுதி முடிவு என்று ஏதேதோ கூறவும் அவள் அரண்டு போனாள்,

மஞ்சரி பாலனை இப்போதைக்கு அவளால் விட முடியாது, அது நிச்சயம், ஆனால். இரண்டில் ஒன்றை இப்போதே முடிவு செய்தாக வேண்டும் என்பதில் ரூபன் உறுதியாக இருந்தால். அவளது வாழ்வு அழிந்தது போலத்தானே?

“ரூபன் நீங்கள் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்? அப்படியெல்லாம் எதையும் .....வந்து ..... ,ஏதோ எடுத்தேன் கவிழ்த்தேன் என்பார்களே. அது போல அவசரப்பட வேண்டாம். ரூபன்! ப்ளீஸ்யா! “ என்று அவனிடம் கெஞ்சிக் கேட்டாள்,

அவளது கண்ணீரைப் போலவே. இந்தக் கெஞ்சலுக்கும் சத்யரூபன் அசைந்து கொடுக்கவில்லை,

உறுதியோடு மறுப்பாகத் தலையசைத்து. “இல்லை; உதயா, இனித் தள்ளிப் போட முடியாது, இறுதி முடிவெடுக்க வேண்டிய தருணம் வந்துவிட்;டது, உனக்கு நான் . , என்னோடான வாழ்வு வேண்டுமா அல்லது ,இந்த “பாலா” நிறுவனமும் அதன் உரிமையாளர்களும் தான் முக்கியமா என்று இப்போது நீ முடிவெடுத்தாக வேண்டும் “ என்று சொல்லிக்கொண்டே போனவன். “ஐயோ அப்படிச் சொல்லாதீர்கள்!” என்ற அவளது குறுக்கிடலை அலட்சியம் செய்து தொடர்ந்து கூறினான்,

“இப்போது என்றால். இன்றைக்கே “பாலா”வோடு உன் தொடர்பை அறுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் சொல்லவில்லை, ஏனென்றால் உனக்குக் கொடுத்த வாக்கை மீற நானும் விரும்பவில்லை, மருத்துவமனையில் இருந்து அந்த மஞ்சரி குழந்தையோடு வீடு திரும்பும் நாளோடு. அவர்களோடான உன் தொடர்பு முடிகிறது, அல்லது. நம் உறவு முறிகிறது, இரண்டில் எதைத் தேர்ந்தெடுப்பதும் உன் விருப்பம்!” என்று உறுதியான குரலில் அறிவித்தவன் மடமடவென்று வெளியே போனான்,

ஐயோ ஐயோவென்று மூச்சுக் காற்றுக்குத் தவிப்பது போல உணர்ந்தாலும். இதிலும் சத்யரூபன் உனக்கு ஒரு வாய்ப்புத் தந்திருக்கிறான் என்று மூளைக்குள் ஒரு சிறு குரல் ஒலித்தது,

என்ன? என்னது? வாவாய்ப்பா? ..... , ஆமாம், வாய்ப்புதான்,

மஞ்சரிக்கு நல்ல விதமாகக் குழந்தை பிறந்து வீடு திரும்பிவிட்டால். அதன் பின் பாலன். மஞ்சரியிடமே நிலைமையை எடுத்துச் சொன்னால் ஏற்றுக்கொள்ள மாட்டார்களா? இருவருமே மிக நல்லவர்கள் ஆயிற்றே! அவளிடமே அன்புள்ளவர்களும் கூட! அதனால் இந்த நிநிபந்தனையை .... ,

யோசிக்கும்போதே வேகமான காலடிச் சத்தம் கேட்கவும் நிமிர்ந்து பார்த்தாள்,

சத்யரூபனேதான்,

இது பற்றி இவனிடம் இப்போதே சொல்லலாமா அல்லது பாலன் சாரிடம் ஒரு வார்த்தை கேட்டுவிட வேண்டுமா? .... ,

அவள் சிந்தித்து முடிக்குமுன். ஒரு பெரிய பாக்கெட்டை அவள் முன் சத்யன் வீசினான்,

வீசும்போதே வார்த்தைகள் பொறி பறந்தன,
“எல்லோருக்கும்போல உனக்காகவும் அம்மா எடுத்து வைத்தது, என் பெற்றோரின் பரிசு, நீ வராவிட்டாலும் கொடுத்துவிட வேண்டும் என்று கட்டாயப்படுத்தி என்னிடம் அனுப்பி வைத்தார்கள், உனக்கு என்னையே பிடிக்காவிட்டாலும் பரவாயில்லை, என் பெற்றோருக்காகத் தயவுபண்ணி இதைப் பெற்றுக்கொள்! அவர்கள் மனம் நோகத் திருப்பி விடாதே!” என்று அனலாய் வார்த்தைகளைக் கொட்டியவாறே. மேலே ஒரு வினாடி கூட அங்கே நிற்கப் பிடிக்காதவன்போலத் திரும்பியும் சென்றுவிட்டான்,

அவளை நிமிர்ந்தும் பார்க்கவில்லை! அவ்வளவு கோபம்!

கார் சத்தம் தேயும்வரை அவன் சென்ற திசையை வெறித்துக் கொண்டிருந்த உதயா மெல்லத் திரும்பி அந்தப் பரிசுப் பாக்கெட்டைப் பார்த்தாள்,

பார்த்தவளின் கண்கள் தெறித்து விடும்போல அகன்றன,

இனி யோசிப்பதற்கு என்ன இருக்கிறது?

வாய்ப்புத் தந்திருப்பதாக எண்ணினாளே. இல்லவே இல்லை, சிறு வாய்ப்புக் கூட இல்லை! எல்லாம் முடிந்துவிட்டது! முழுதாக!

தள்ளாடியவாறே அறைக்குள் சென்று படுக்கையில் விழுந்தவளை அழுகை உலுக்கி எடுத்தது!

காலையில் வாக் போய்விட்டுத் திரும்பிய சிவகுருவுக்கு வாயில் கதவு திறந்து கிடந்தது ஆச்சரியமாக இருந்தது, உள்ளே வந்து பார்த்தால்

சோஃபா மேல் கிடந்த பெரிய பாக்கெட் அவரை இன்னமும் அதிசயப்பட வைத்தது,

அங்கிருந்து அவர் வீட்டுக்கு எப்படி?

பிரித்துப் பார்த்தார் ,பார்த்தவர் மேலும் அதிர்ந்தார்,

அப்படியானால் அவன் ..... அந்த இளை"ன் ..... ,

கடவுளே! இது இப்படியா முடிய வேண்டும்?

மகளுக்கு ஒரு விடிவுகாலம் பிறக்கப் போவதாக எண்ணி. அவரும் உள்ளூர மகிழ்ந்தாரே! ஆனால். இனி எப்படி?

மகள் அறையில் இருந்து சிறு ஒலி .....விசும்பல்!

பதட்டத்துடன் போய் எட்டிப் பார்த்தால். தலையணையில் முகம் பதித்து உடல் குலுங்க அழுதுகொண்டிருந்தாள் அவள்,

உள்ளே செல்ல ஓர் எட்டு எடுத்து வைத்தவர் சட்டென நின்றார், கடவுளே!

பாக்கெட்டைப்பழைய மாதிரி ஒட்டி வைத்துவிட்டுச் சத்தமின்றி வெளியே சென்று. சற்று ஒலியெழுப்பியவாறே வீட்டுக்குள் புகுந்தார்,

அலர் எதிர்பார்த்தது போலவே மகள் குளியலறைக்குள் புகுந்திருந்தாள்,

அவள் வெளியே வந்தபோது. சிவந்திருந்த கண்களும் முகமும் கழுவப் பட்டிருந்தன,

அவர் கேளாமலே. "நேற்று டென்ஷனில் ஒரே தலைவலிப்பா, உடம்பு கூட ச
.. சரியில்லை போலத் தோன்றுகிறது," என்று சமாளிப்பாக ஏதேதோ கூறினாள்,

விஷயம் புரிந்தவர் என்பதால். அனாவசியக் கேள்விகள் கேளாமல். அவள் சொன்னதை சிவகுரு அப்படியே ஒத்துக் கொண்டார்,

மேலும் அவர் சொல்வதற்கோ செய்வதற்கோ. இனி என்ன இருக்கிறது? அவருடைய மகளுக்கு. இப்படி ஒரு தந்தை உயிரோடு இல்லாமலே போயிருக்கலாம்!

உதயாவுக்குத் தனிமை மிகவும் தேவைப்பட்டது, யார் முகத்தையும் பாராமல் அறைக்குள் முடங்கிக் கொள்ளவே விரும்பினாள்,

ஆனால் முடிகிற காரியமா? முதலில் அலுவலகம்?

எப்படி இருக்கிறார்கள் என்று கேட்பதற்காக ஃபோன் செய்தால்.

எடுத்தது பாலன்,

குரலில் உற்சாகம் இருந்தது, “இரண்டு பேரும் நல்ல சுகம் உதயா, ஒரு டிரைவர் ஏற்பாடு செய்துகொண்டு இருவருமே அலுவலகம் போகலாம் என்று இருக்கிறோம், ம்ம்
.என்ன உதயா? நீ சொல்வது சரியாகப் புரியவில்லையே, குரல் கூட ஓ சளிப் பிடித்திருக்கிறதா? நேற்று மருத்துவமனையில் அங்கேயும் இங்கேயும் அலைந்தாயே! எந்த இடத்தில் யாரிடமிருந்து ஒட்டிக் கொண்டதோ? நீ வீட்டுக்குப் போய்ப் படுக்கவே மிகவும் தாமதம் ஆகியிருக்கும், இன்று ஓய்வெடுத்துக்கொண்டு நாளை வாயேன், கூடுதலாக வேண்டுமானாலும் விடுப்பு எடுத்துக்கொள்,”

முன்தினம் அனுபவித்த பேரச்சம் ஒன்றுமில்லை என்று ஆகவும். பாலனின் பேச்சில் உற்சாகம் கொப்பளித்தது,

அவர்களுக்காவது கவலை ஒழிந்ததே!

ஆனால் அவர்களது பிரச்சினை ஒரு நாள் முன்னதாகவோ. பின்னரோ நேர்ந்திருந்தால். அவளுக்கும் இந்த வேதனை நேர்ந்திராதே என்று ஒருதரம் எண்ணிவிட்டு. உடனேயே அதற்காகத் தன்னையே கடிந்துகொண்டாள் உதயா,

எப்படியும் எதிர்காலம் இல்லாத நேசம், எப்படியும் அழியப் போவது. ஒரு நாள் முன்னதாக .... அப்படிக் கூடச் சொல்ல முடியாது, விழாவுக்குப் போனதுமே அவளுக்குப் புரிந்திருக்கும்!

ஆனால் ஏன் இப்படிச் செய்தார்கள்?

அவளுடைய தந்தை. உதயரேகா என்று அவரது தொழிலுக்கு மகளின் பெயரை வைத்தார்,

பாலன் சார் “பாலா” என்று வைத்தார்,

ரங்கநாதன். விலாசினி. சத்யரூபன் .... ,இவர்களில் யார் பெயரையாவது. அல்லது ஏதோ ஒரு வகையில் பாதிப் பாதி சேர்த்தேனும் வைத்திருந்தால். கொஞ்சம் சந்தேகமாவது வந்திருக்கும்,

மின்னாமல். முழங்காமல் இப்படித் திடுமெனத் தலையில் இடி விழுந்திருக்காது!

கடைசித் துடிப்பு வரை. பிழைத்துவிடலாம் என்ற நம்பிக்கை உயிருக்கு இருக்குமாமே. அது போல. உதயாவின் ஆசை கொண்ட மனது. இந்த அழிவை ஏற்க மறுத்து ஏதேதோ கற்பனை செய்து பார்த்தது,

இத்தனை நாள் அறியாதிருந்தது போல இனியும் இருக்கக் கூடாதா என்ன என்று ஆணித்தரமாகக் கேட்டது, காலம் முழுதும் அப்படி இருக்கட்டுமே என்று ஏங்கியது,

ஆனால் பைத்தியக்காரத்தனமான ஆசை! எப்படியும் ஒரு நாள் தெரியப் போகிறது, அப்போது ..... ,பேரழிவாக அல்லவா ஆகிவிடும்!

அதைவிடக் கௌரவமாக இன்றே பிரிந்து விடுவது நல்லது,

குறைந்த பட்சமாக. இன்றைய நிம்மதி நிலைக்கும்,

அதுவே போதும் என்று பலத்த யோசனைக்குப் பின் கனத்த இதயத்தோடு உதயா முடிவு செய்தாள்,

தள்ளிப் போட்டால் மனம் துணிவிழந்துவிடும்,. அல்லது இப்படி அப்படி என்று ஏதாவது பயனற்ற வழிகளைத் தேடி ஏங்கத் தொடங்கிவிடும் என்று புரிந்தது,

ஒரு தரம் அவளுடைய ரூபனைச் சந்திக்க வேண்டும் என்ற ஆவலையும் பிடிவாதமாக அடக்கிக் கொண்டாள்,

சந்தித்தால் கண்ணீரை அடக்குவது கடினம்,

இப்போதும் முடியாதுதான், ஆனால் அவன் முன்னிலையில் கண்ணீர் விட்டுக் கேவலப்படக் கூடாது,

அவன் கண்ணீரின் காரணம் கேட்டால் பதில் சொல்ல முடியாது, சொன்னாலோ அவனால் ஒப்ப முடியாது,

பலவாறு யோசித்துவிட்டு. சத்யரூபனை மொபைலில் அழைத்தாள்,

அவன் எடுத்ததுமே. “நம் இருவருக்கும் ஒத்து வராது, அதனால் பிரிந்து விடலாம்,” என்றாள் மொட்டையாக

சொன்னதுமே வைத்துவிடத்தான் உதயா முதலில் எண்ணியிருந்தாள்,

ஆனால். அவனது குரலை ஒரு தரம். கடைசியாக ஒருதரம் கேட்கும் ஆவலை அடக்க மாட்டாமல். மொபைலைக் காதிலேயே வைத்துக்கொண்டு காத்திருந்தாள்,

சட்டென உள்ளிழுத்த வேக மூச்சில் இருந்து. அவன் சொல்லக் கூடிய எல்லாமே நினைத்து நினைத்து நோகும் சித்ரவதையாகத்தான் இருக்கும் என்று தெரிந்தபோதும். மொபைலைக் காதிலிருந்து அகற்றாமல் அப்படியே நின்றாள்,

ஒரு சில கணங்கள் சத்யரூபன் எதுவுமே பேசவில்லை,

கட் பண்ணிவிட்டானோ என்று அவள் கலங்கத் தொடங்கியபோது அவன் குரல் கேட்டது,

“ஒரு பெண் எவ்வளவோ புத்திசாலி. கெட்டிக்காரி என்று எண்ணுகிறோம், ஆனால். இந்த ஒரு விஷயத்தில் பெண்கள் படு முட்டாள்களாகத்தான் இருக்கிறார்கள், ஏதோ ஒரு மயக்கம் ஏற்பட்டுவிட்டால். மூளை சண்டிக் குதிரை ஆகி விடுகிறது, வேலை செய்வதே இல்லை! எப்படியோ? இனி அது உன் தலைவலி, உன் முடிவைக் கூப்பிட்டுச் சொன்னதற்கு நன்றி, வைத்துவி
இல்லை. எனக்காக ஒன்று மட்டும் செய்வாயா? மிக மிக அறிவுகெட்டதனமாக ஏதாவது பண்ணுமுன். உன் தந்தையிடம் அது பற்றிக் கலந்து ஆலோசித்துவிட்டுச் செய், குட்பை,” என்றுரைத்துப் பேச்சை முடித்தான்,

சத்யரூபன் என்ன நினைக்கிறான் என்று உதயாவுக்குப் புரியாமல் இல்லை,

ஆனால். அவள் அப்படிப்பட்டவளா? அதை யோசிக்க மாட்டானா? அவளுக்கு முன் உலக அழகனே வந்து நின்றாலும். ரூபனை விட்டு வேறெhருவனை அவள் ஏறிட்டேனும் பார்ப்பாளா? அவளுடைய எல்லாமே அவன்தானே?

அத்தோடு. பாலன்சார் இன்னொருத்தியுடைய கணவர், மனைவியை உயிராக நேசிக்கிறவர்! மஞ்சரி மேடமும் அவரிடம் அப்படியேதான்,

அப்படியோர் அருமையான குடும்பத்தை அவள் கலைப்பாளா?

அது மட்டுமல்ல, மஞ்சரி மேடத்துக்காகவே உதயா எத்தனை வேலைகள் செய்கிறாள்? அதெல்லாம் ரூபனுக்கும் தெரியும்தானே? அதிகப்படியாக அப்படிச் செய்யாதே என்று உதயாவை. அவனே எச்சரித்திருக்கிறானே!

அதன் பிறகும். இப்படித் தப்புத் தப்பாக அவன் நினைக்கலாமா?

இது போன்ற எண்ணங்கள் எல்லாம் மிகக் குறைவான நேரம்தான் அவள் மனதில் இடம் பெற்றிருந்தன,

அதற்குள்ளாகவே. ரூபனிடம் சொல்லிவிட்டாள்! இருவரும் பிரிந்து விடலாம் என்று அவனிடம் சொல்லிவிட்டாள், அவனும் அதை ஒத்துக் கொண்டுவிட்டான் என்பது
, அதாவது. ரூபனை அவள் முழுதாக இழந்துவிட்டாள் என்கிற உண்மை. ஒரு பெரிய சுனாமி அலையாக அவளைத் தாக்க. தாங்க மாட்டாத வேதனையில் அவள் தவிக்கலானாள்,

நல்லவேளையாக உடம்பு சரியில்லை என்கிற சாக்கில் அவள் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கொள்ள முடிந்தது,

மற்றபடி அலுவலகத்துக்குச் சென்று. மஞ்சரி மேடம் அவளைப் பார்த்து "என்னம்மா?" என்று கேட்டால். அவள் உடைந்து விடக் கூடும்,

மனப் புண்களை ஆற்றுவதில் காலம்தான் மிகச் சிறந்த மருந்து என்பார்கள்,

இன்னும் ஓரிரு நாட்களில் இந்த வேதனை கொஞ்சம் குறையக் கூடும்,

எப்படியும். "இதுவும் கடந்து போகும்"தானே?

அதன் பிறகு பழையபடி வேலை. வீடு என்று ஏதோ ஒரு விதமாக வாழ்நாளை ஓட்ட வேண்டியதுதான், அது போல நடத்த முடியும் என்றுதான் உதயா எண்ணினாள்,

ஆனால். அனுபவிக்கும் துன்பம் கடந்து போகுமுன். இவ்வளவு வேதனையை அனுபவிக்க நேரும் என்று அவளுக்குத் தெரியாது,

எந்நேரமும் புழு அரிப்பது போல நெஞ்சுக் கூட்டினுள் வலித்துக்கொண்டே இருந்தது, எந்நேரமும் வெளியே வந்து விழுந்துவிடும் போலக் கண்ணீர் துருத்திக்கொண்டே இருந்தது,

அவ்வப்போது தந்தை யோசனையோடு பார்ப்பது போலத் தோன்றினால். நோய்த் துன்பம். தலைவலி போலக் காட்டிக் கொண்டாள், சிரித்து மழுப்ப இயலாததால்,

அன்று மூன்றாவது நாள்,

இன்னமும் குரல் """னநமன" பாடவே. பாலனே இன்னும் சில நாட்கள் ஓய்வெடுத்துக்கொண்டு. உடம்பு நன்கு குணமான பிறகே வேலைக்கு வருமாறு கூறிவிட்டான்,

அவனுக்கு மனைவியைப் பற்றிக் கவலை, உதயாவின் சளிக் காய்ச்சல். மஞ்சரியைப் பிடித்துக் கொண்டால்?

மறைக்காமல் உதயாவிடமும் சொன்னான்,

"பார் உதயா. இந்த நிலையில் உன் சளியும் காய்ச்சலும் மஞ்சரிக்குத் தொற்றி விட்டால் ஆபத்தாகிவிடும், உன் உழைப்பு பற்றி எங்களுக்குத் தெரியும், எனவே. சம்பளத்துடன் கூடிய விடுப்பே. இன்னும் எத்தனை நாள் வேண்டுமானாலும் எடுத்துக் கொள், ஆனால் மீண்டும் நீ இங்கே வரும்போது. முழு சுகத்தோடு வரவேண்டும், எங்களைப் பற்றிக் கவலைப்படாதே, எனக்குக் காலில் வலி சுத்தமாகப்

போய்விட்டது, மஞ்சுவும் பழைய மாதிரி என்னோடு அலுவலகத்துக்கு வருகிறாள், உற்சாகமாகவும் இருக்கிறாள், அதனால் எங்களைப் பற்றிக் கவலைப்படாமல். நீ நன்கு குணமான பிறகே வா," என்றான்,

தான் தேவையில்லை போல என்று மனதில் ஒரு சிறு துணுக்கம் தோன்றினாலும். வீட்டில் பேசாமல் படுத்துக் கிடக்கவே உதயாவும் விரும்பினாள்,

அத்தோடு எட்டு மாத கர்ப்பிணியான மனைவியின் ஆரோக்கியத்தை முன் வைத்து அவளுடைய கணவன் சிந்தித்து செயல்படுவதில் தப்பே கிடையாது, அப்படி யோசிக்காமல் இருப்பதுதான் பிழை!

டீவி முன்னே சோஃபாவில் அமர்ந்து திரையை வெறித்தாலும். மகளின் கவனம் முன்னே ஓடிய திரைப்படத்தில் இல்லை என்று சிவகுருவுக்கு நன்றாகத் தெரிந்தது,

அவர் ஹாலுக்குள் வந்ததைக் கூட அறியாமல் உதயா பரத் தியானமாக அமர்ந்திருந்தாள், சொல்லப் போனால். அவள் அப்படி டீவி முன் அமர்ந்திருந்ததே. அவரது மன அமைதிக்காகத்தான்!

ஆனால் அதற்குமேல் சின்னத் திரையின் நிகழ்ச்சிகளை ரசிப்பது போலவும் பாவனை செய்ய அவளுக்குத் தென்பில்லை,

சற்று நேரம் நின்று மகளைப் பார்த்துவிட்டு. அவர் வெளியே கிளம்பிச் சென்றார்,

சென்டருக்குப் போன சிவகுரு அவருடைய உதவியாளரிடம் மிகுந்த கவனத்துடன் இருக்குமாறு வெகுவாக எச்சரித்துவிட்டு வெளியே கிளம்பிப் போனார்,

காத்திருந்து கடைசி ஆளாய். இன்னார் என்று எழுதிக் கொடுத்து சத்யனைப் பார்க்கப் போனார்,

அவரை அமரச் சொல்லிவிட்டு. "முதலிலேயே வந்திருக்கலாமே,. இவ்வளவு நேரம் காத்திருப்பானேன்? வெகு நேரம் காத்திருந்ததாக அட்டென்டர் தெரிவித்தான்?" என்று கேள்வியாகவே முடித்தான் சத்யரூபன்,

குரலில் பிசிர் அடிக்காவிட்டாலும். மகளைப் போலவே சத்யனின் தோற்றத்திலும் வாட்டம் இருப்பதாகவே சிவகுருவுக்குத் தோன்றியது,

அல்லது. அது அவரது ஆசை கொண்ட மனதின் கற்பனையோ?

லேசாகத் தொண்டையைச் செருமி. "அது .... குறுக்கீடு இல்லாமல்

பேச வேண்டும் என்று நினைத்தேன், நான் யார் என்று தெரியுமா சார்?" என்று சிறு குரலில் வினவினார்,

அவரை ஆழ்ந்து நோக்கிவிட்டு. "எங்களைப் பற்றித் தெரிந்துதான் வந்திருக்கிறீர்கள் இல்லையா? உதயாவுடைய தந்தை என்கிற அளவில் எனக்குத் தெரியும், அத்தோடு. இந்த "சார்" எல்லாம் வேண்டாம், சும்மாப் பெயர் சொல்லுங்கள் போதும்," என்றான் இளை"ன், சாதாரணம் போலப் பேச முயற்சிப்பது அவருக்குப் புரிந்தது,

உள்ளூர. அவனை இன்னொரு வகையாக அழைக்கத்தான் அவருக்கு ஆசை, ஆனால் அதற்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே என்று எண்ணியவர். வெளிப்படையாக வேறு சொன்னார், "அதற்குத் தகுதி உண்டா என்று எனக்கே சந்தேகம் சத்யா சார், " என்றார்,

புருவம் சுருக்கிப் பார்த்துவிட்டு. "அந்த மட்டும் நான் சொன்னதை மதித்து. உங்களிடம் ஆலோசனை கேட்டாளா உங்கள் மகள்? " கவனத்துடன் கட்டுப்படுத்திய குரலில்,

புரியாமல் திகைத்துவிட்டு. "எஎன்ன ஆலோசனை?" என்று கேட்டார் பெரியவர், "எதைப் பற்றி?"

இப்போது புரியாமல் போனது சத்யனுக்கு, "பின்னே? பின்னே ஏன் வந்தீர்கள்?" என்று விவரம் கேட்டான்,

இவன் எது பற்றி அவரிடம் ஆலோசனை கேட்கச் சொன்னானோ. அது பற்றி சிவகுருவுக்கு எதுவுமே தெரியவில்லை,

ஒருவேளை. மகளிடம் பேசிவிட்டு வந்திருக்க வேண்டுமோ என்று அவருக்குக் குழப்பம் ஏற்பட்டது,

ஆனால் இந்த அளவு துன்பத்தை முடிந்தவரை அவர் அறியாமலே சகிப்பவள். நிச்சயமாக அவரிடம் எதுவும் தெரிவித்திருக்கப் போவதில்லை, அது மட்டுமல்ல, அவர் சத்யரூபனைச் சந்திப்பதையும் கூடத் தடுத்திருப்பாள்,

தான் அறிந்ததை மட்டும் பேச எண்ணி. "என் மகள் தவிப்பதைக் கண் கொண்டு பார்க்க முடியவில்லை. சத்யா சார்," என்றார் அவர்,

முகம் இறுக. "அவளே தேர்ந்தெடுத்ததுதானே! எங்களுக்கிடையே ஒத்து வராது பிரிந்து விடுவோம் என்று .. , அவளது சொந்த வார்த்தைகள் இவை!" என்றான் குரலிலும் கடுப்படிக்க,

ஆக முடித்தே விட்டிருக்கிறாள்! மகள் அரை உயிராக இருப்பதன் முழுக் காரணமும் அவருக்கு அப்போது மிகத் தெளிவாகத் தெரிந்தது,

இவளை மகளாகப் பெற எவ்வளவோ கொடுத்து வைத்திருக்க வேண்டும், ஆனால் இப்படிச் சொல்லிக்கொண்டு சும்மா இருக்கலாமா?

பெற்ற அவருக்கும். இதே கடமை உண்டுதானே?

இதனால் அவரது வாழ்க்கையே அழிந்தாலும். இந்த முயற்சி செய்வது அவரது கடமை!

மனதைத் திடப்படுத்திக்கொண்டு சிவகுரு சொல்லலானார், "இப்படி

இருக்குமோ என்ற சந்தேகத்தில்தான் வந்தேன். சத்யா சார், என் மகள் உதயா அப்படிச் சொன்னதற்கு ஒரு பெரிய காரணம் உண்டு அந்த விவரம் சொல்கிறேன். கேளுங்கள்," என்று தொடங்கினார்,

ளுளுளு ளுளுளு ளுளுளு

அத்தியாயம் டூ 11

தொண்டையை அடைத்ததை விழுங்கிக்கொண்டு. தொடங்கிய சிவகுருவுக்குத் திடுமென ஒரு சந்தேகம் வந்தது, "சத்யா சார். உஉங்களுக்கு இப்போது வேறு வேலை எதுவும் இஇருக்கிறதா? நான்

நான் சொல்லி முடிக்க அதிக நேரம் ஆ .....கலாம் ...." என்று தடுமாற்றத்துடன் கேட்டார்,

அவரையே கூர்மையாகப் பார்த்துக் கொண்டிருந்த சத்யரூபன் உடனே பதில் சொன்னான், "இந்தக் கணத்தில். நீங்கள் கூறுவதைக் கேட்டுத் தெரிந்து கொள்வது தவிர முக்கியமான வேலை வேறு எதுவுமே எனக்குக் கிடையாது. சிவகுரு சார்!" என்றான் உறுதியோடு,

சிவகுரு பெரிய மூச்சுகளை எடுப்பதைக் கவனித்து எழுந்து சென்றவன் ஒரு டம்ளரில் தண்ணீரோடு திரும்பி வந்தான்,

தொண்டை அடியோடு காய்ந்து போனது போல. டம்ளர் தண்ணீர் முழுதையும் குடித்துவிட்டு வைத்தவர் மறுபடியும் தொடங்கினார்,

நான்கு ஆண்டுகளுக்கு முன்பாக நடந்தது. அது,

அப்போது பாலனிடம் இன்றைய வசதி கிடையாது, பயணத்துக்கு ஆட்டோதான், காலை வேளைகளில் "பாலா" அலுவலகத்துக்கு நடந்து கூட வருவார்,

உதயா வீட்டிலும் அப்படித்தான், ரொம்ப சாதாரணமான நிலை, படித்து முடித்ததும் வெளியூரில் வேலை கிடைத்தது,

நல்ல வேலைதான், ஆனால் தகப்பனைத் தனியே விட்டுப் போக

விரும்பாமல் உள்ளூரிலேயே வேலை தேடினாள்,

“பாலா”வில் வேலை கிடைத்தது, பெரிய சம்பளமில்லை, ஆனால். தகப்பன் மகள் இருவரும் இரண்டு இடத்தில் வசிப்பது. போக்குவரத்துச் செலவு எல்லாம் கணக்குப் போட்டு “பாலா”விலேயே சேர்ந்தாள்,

பாலன் சாரும் மஞ்சரியும் சேர்ந்து உழைப்பதைப் பார்த்து அவளுக்கு ஒரு பிரமிப்பு, சேர்ந்து உழைத்தாள், ஒரு குழு மாதிரி மூவரும் செயல்பட்டார்கள்,

அப்போது அப்போது ஒரு நாள்
,நாங்கள் வசித்த தெருவுக்கு வரும் வழியில் ஒரு மாதிரிப்பட்ட குடிகாரப் பசங்கள் சுற்றுகிற இடம் ஒன்று உண்டு, ஒரு நாள் என் மகள் அவர்களிடம் மாட்டிக் கொண்டாள்
, என்று சொல்லி வரும்போது சிவகுருவின் குரல் தழுதழுத்து நின்று போயிற்று,

தானாக இறுகிய முஷ்டியைப் பிடிவாதமாகத் தளரவிட்டபடி “மேலே சொல்லுங்கள்,” என்றான் சத்யரூபன்,

எப்படியோ அவர்களிடமிருந்து விடுபட்டுத் திரும்பி ஓடிப் போய் அலுவலகத்துக் குள்ளேயே ஒளிந்து கொண்டாள், அவளிடமும் ஒரு சாவி இருக்கும்,

அந்தத் தடியன்கள் சுற்றிச் சுற்றித் தேடுகிற சத்தம் கேட்டதாம், உதி உள்ளே ஒளிந்திருந்தது அவர்களுக்குத் தெரியாது, நிறையக் கண்ணாடிக் கதவுகள், அதனால் மூச்சுச் சத்தம் கூடக் கேட்டுவிடாமல் சுருட்டிக்கொண்டு கிடந்திருக்கிறாள்,

எவ்வளவு நேரம் போனது என்றே தெரியாத அரை மயக்க நிலை,

ஆனால் சாவி கொண்டு யாரோ கதவைத் திறந்து உள்ளே வரவும் பயந்து தன்னை மீறி அலறினாளாம்,

ஆனால் அப்போது உள்ளே வந்தது பாலன் சார், தூங்கப் போகிற நேரத்தில். அப்போது செய்து கொண்டிருந்த வேலை பற்றி ஓர் ஐடியா வந்ததாம், அதைக் குறித்து வைத்துவிட்டால். மறுநாள் வேலையைத் தொடங்கும்போது இலகுவாக இருக்கும் என்று அலுவலகத்துக்குப் போயிருக்கிறார்,

போனவர். உதயாவின் அலறலில் பிரமித்துப் போனார், அதை

விடவும். குர்த்தா எல்லாம் வாலும் தோலுமாகக் கிழிந்து.
நின்று பார்க்கக் கூட அவரால் முடியவில்லை, உடனே மனைவியைக் கூப்பிட்டு; விஷயத்தைச் சொல்ல. அவளும் உதயாவுக்குத் தேவையான

துணிமணி. கொஞ்சம் சாப்பாடோடு ஓடி வந்திருக்கிறாள்,

ராத்திரிப் பத்துப் பதினோரு மணி, ஆட்டோ தேடி அலைவதை விட ஓட்டமும் நடையுமாகச் சீக்கிரமாகப் போய்விடலாம் என்று ஓடியே வந்தாளாம்,

சொல்லிக்கொண்டே வந்த சிவகுருவுக்கு மீண்டும் மூச்சு வாங்கியது,

பேச்சின் இடையே. மறுபடியும் சத்யரூபன் தண்ணீர் எடுத்து வைத்திருப்பான் போல, மௌனமாக அவன் டம்ளரை நகர்த்தவும். எடுத்து ஒரு பெரிய மிடறு குடித்துவிட்டு சிவகுரு மீண்டும் தொடங்கினார்,

ஆனால் இந்த முறை. அவரது குரல் எழும்பவே இல்லை, சத்யரூபனே சற்று உன்னிப்பாகக் கவனித்துக் கேட்டுத்தான் புரிந்துகொள்ள வேண்டியிருந்தது, ஆயினும். பேச்சில் குறுக்கிட விரும்பாமல் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தான்,

“மஞ்சரிக்கு
, சும்மாவே அவளுக்குச் சற்றுப் பலவீனமான கருப்பை, ஓட்டமும் நடையுமாக வந்ததில் ..... ,அந்தக் குகு குழந்தை போய்விட்டது,”

“குழந்தை? என்ன குழ ..... ,ஓ! மஞ்சரி அப்போது கருவுற்றிருந்தார்களா?” என்று ஆச்சரியத்துடன் சத்யா கேட்டான்,

“ஆஆமாம் சார் மூன்று மாதங்கள் நிறைந்த சிசு,” என்றார் பெரியவர் வருத்தத்துடன்,

ஓகோ! தன்னால் நேர்ந்த பேரிழப்பு என்று இதற்காகத்தான் உதயா இப்படி அடிமை மாதிரி கிடக்கிறாளா? சே. அவளைப் போய். என்னவெல்லாம் நினைத்துவிட்டான்!

கூடவே அவனுக்குக் கோபமும் வந்தது, “ஆனால். அந்த மாதிரி நிலையில் அந்த மஞ்சரி கொஞ்சம் கவனமாக வந்திருக்கக் கூடாதா?” என்றான் அவன் எரிச்சலாக, “அவர்கள் செய்த தப்புக்கு. என் உதி அல்லவா தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கிறாள்!”

ஆனால் அவனது பேச்சை சிவகுரு ஏற்கவில்லை,

ஒரு பெருமூச்சு விட்டு. “மஞ்சரிம்மா மேல் தப்பு இல்லை சத்யா சார், தான் கருவுற்று இருக்கவில்லை என்றுதான் அவள் நினைத்திருந்தாள், பாவம்!” என்றார் வேதனையோடு,

“வாட்?” என்று சத்யன் திகைத்தான், “நீங்கள் என்ன

சொல்லுகிறீர்கள்? மூன்று மாதங்கள் முடிந்த பிறகுமா தெரியாது? என் பெற்றோர் மருத்துவர்கள் அங்கிள், அதனால் எனக்கும் இது பற்றிக் கொஞ்சம் தெரியும், மற்ற வகையில் இல்லை என்றாலும் "ஸ்கேனி"ல் தெரிந்துவிடுமே! ஏழெட்டு ஆண்டுகள் கழித்து உருவான கரு என்றால். கட்டாயம் ஸ்கேன் செய்து பார்த்திருப்பார்களே!" என்று கேட்டான் அவன்,

இந்த முறை பதில் சொல்வதற்கு சிவகுரு ரொம்பவும் சிரமப்பட்டார்,

குரல் நடுங்க. "ஆஆமாம் சார். மிகுந்த ஆவலோடு ஸ்கேன் செய்திருக்கிறார்கள், பரபரப்போடு கடவுள் பெயரை உருப் போட்டதில் அங்கே என்ன நடந்தது என்றுகூட மஞ்சரி சரியாகக் கவனிக்கவில்லை, ஆனால். அவள் பார்த்த ஸ்கேன் சென்டரில். ஒரு குடிகாரப் பாவி. உதவி செய்வதாக எண்ணி. இன்னொருத்தியின் ஸ்கேன் ரிப்போர்ட்டை மாற்றிப் படித்து. மஞ்சரி கருத்தரிக்கவே இல்லை என்று சொல்லிவிட்டான், உள்ளூர இருவரும் இடிந்து போனார்கள், பிள்ளையில்லை என்றுதான் ஸ்கேனிலேயே வந்து விட்டதே. அப்புறம் எதற்காகக் கவனமாக இருக்க வேண்டும். இப்போது உதயாதான் முக்கியம் என்று அவசரமாக ஓடி வந்ததில். அந்த இழப்பு நேர்ந்துவிட்டது, ஒரே மூச்சாக நாலு தெரு ஓடி வந்து ,இடையில் ஒரு தரம் விழுந்து எழுந்து. கருவில் இருந்த அந்தச் சின்னஞ்சிறு சிசுவால் இதைத் தாங்க முடியவில்லை, கலைந்து கரைந்து போய்விட்டது, மஞ்சரிக்கும் மனோகரிக்கும் எழுத்து வேறுபாடு பார்க்கத் தெரியாத குடிகாரப் பாவிகள் இருக்கும் உலகத்தில் தானும் வாழ வேண்டாம் என்று போயே போய்விட்டது," என்றவர் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு மேலே சொன்னார்,

"அதன் பிறகு. மறுபடி மஞ்சரி கருவுற. மேலும் மூன்று ஆண்டுகள் கடந்து போயின, அது மட்டுமல்ல, இந்த முறை அவளுடைய குழந்தைக்கு ஏதேனும் நேர்ந்தால். பின்னர் அவள் கருவுறவே இயலாத நிலை ஆகிவிடும் என்று டாக்டரம்மா கடுமையாக எச்சரித்திருக்கிறார்கள், அதனால்தான் உதயா அவர்களுக்கு இந்த அளவு உதவி செய்கிறாள்," என்று. மடியில் கோத்திருந்த விரல்களைப் பார்த்தபடி கூறி முடித்தார்,

புருவம் சுருக்கி சத்யரூபன் யோசித்தான்,

"தாராளமாகச் செய்யட்டும் அங்கிள், மனிதாபிமானத்தோடு. பிராயச்சித்தமாகவும் செய்கிறாள், இதில் குறைப்பட ஒன்றுமே

கிடையாது, ஆனால் எனக்கு என்ன புரியவில்லை என்றால். இதை என்னிடம் அவள் சொல்லியிருக்கலாமே? நடந்த எதிலுமே உதயாவின் தப்பு என்று ஒன்றுமே இல்லாதபோது. என்னிடம் ஏன் சொல்லாமல் மறைக்க வேண்டும்? அதுவும். அவர்கள் அல்லது நான் என்று நான் முடிவாகச் சொல்லிவிட்ட பிறகும். என்னைப் பிரியத் துணிந்தாளே தவிர. நடந்ததைச் சொல்லாதது விசித்திரமாக இல்லை?" என்று யோசனையோடு வினவினான் ,

மீண்டும் ஒரு பெரிய மூச்செடுத்து விட்டுவிட்டு. சிவகுரு .....கிட்டத்தட்டக் கதறினார் எனலாம்,

"எப்படிச் சொல்லுவாள். சத்யா சார். அவள் எப்படிச் சொல்லுவாள்? மஞ்சரிக்குப் பதிலாக மனோகரியின் ரிப்போர்டைக் குடி மயக்கத்தில் சரியாகப் பாராமல் வாசித்துச் சொன்ன படுபாவி. அவளுடைய சொந்தத் தகப்பனான நான் அல்லவா?" என்று குமுறிவிட்டு முகத்தை மூடிக்கொண்டு உடல் குலுங்கினார் சிவகுரு,

"வாட்?!" என்று சத்யா எழுந்துவிட்டான்,

"ஆமாம் சார். ஆமாம், இப்போது என் மகளுக்குத் தகப்பன் பாசம்! என் "உதயரேகா" ஸ்கேன் சென்டரின் தொண்ணு}று சதவீத பிசினஸ் உங்கள் பெற்றோரின் "சகாயம்" மருத்துவமனை மூலம் நடப்பதுதான், அவர்களுடைய வாரிசிடம் போய். என் பிழையை எப்படிக் கூறுவாள்? இன்றைய சமூகத்தில் என் மரியாதை. வருமானம் எல்லாம் நாசமாகிவிடாதா? அதை விடவும். அவைகளை இழந்துவிட்ட வேதனையில் நான் மறுபடியும் குடிக்கத்தொடங்கி விட்டால்? பாவிகளுக்காக ஏசுபிரான் சிலுவை சுமந்ததாகச் சொல்லுவார்கள், அதே போல எனக்காகப் பாரம் சுமப்பதே என் மகளது வாழ்க்கையாகிவிட்டது, " என்றார் அவர் கண்ணீர் வழிய,

"ப்ளீஸ். அழாதீர்கள் அங்கிள்," என்றான் சின்னவன் பரிவாக,

திகைத்து நிமிர்ந்து. "எஎன்னை "அங்கிள்" என்றீர்கள்?" என்று கேட்டார் வயதில் பெரியவர்,

சின்னதாக முறுவலித்து. "கொஞ்ச நேரமாகவே அப்படித்தான் அழைத்துக் கொண்டிருக்கிறேன், நீங்கள்தான் கண்டுகொள்ளவே இல்லை!" என்று லேசாக த் தோளைக் குலுக்கினான் மற்றவன்,

முகம் மலர. "கடவுளே! கடவுளே!" என்று மேலே பார்த்துக் கும்பிட்டார் சிவகுரு!

சற்று நேரம் புன்னகையோடு ஒருவரை ஒருவர் பார்த்துக்

கொண்டிருந்துவிட்டு “இப்போது உங்களை எப்படித்தான் அனுப்பினாளோ? அதற்கு முன் அவள் மனதில் பெரும் போராட்டம் நடந்திருக்கும். பாவம்!” என்றான் சத்யரூபன் இளகிய குரலில்,

விழிகள் அகல அவனைபபப் பார்த்தார் சிவகுரு,

“சத்யாசார். உங்களுக்கு இன்னமும் அவளைத் தெரியவில்லை! உதி என்னிடம் ஒரு மூச்சுக் கூட விடவில்லை, ஒருபோதுமே! ஆனால் நான் பெண்ணைப் பெற்றவன், எப்படியோ போகட்டும் என்று இருக்க முடியுமா? அதுவும் எப்பேர்ப்பட்ட மகள்! உங்களோடு அவளை அவ்வப்போது பார்த்திருக்கிறேன், ரகசியமாய் உங்களைப் பற்றி ஓரளவு விசாரித்து அறிந்தும் இருக்கிறேன், நீங்களே தொழில் தொடங்கி வளர்த்திருப்பது. கெட்ட பழக்கங்கள் இல்லாதிருப்பது ,இது போல, உங்கள் பெற்றோர் வைத்தியர்கள் என்று தெரியும், ஆனால் “சகாய”த்தோடு சம்பந்தப்படுத்திப் பார்க்கத் தோன்றவில்லை! நான் அறிந்த அளவில். இருவரும் பொருத்தமான ஜோடி என்று சந்தோஷமும் பட்டிருக்கிறேன்,

“மெய்தான் மா , மாப்பிள்ளை, நான் ரொம்பவும் அலைந்து திரிந்து பாடு பட்டால் கூட. உங்களைப் போல ஒருவரை என்னால் கண்டுபிடித்திருக்க முடியாது, இப்படி சந்தோஷமாகத்தான் இருந்தேன், ஆனால் இப்போது அவள் படுகிற துயரம். என்னால் சகிக்கவே முடியவில்லை, டீவி பார்க்கிற மாதிரி உட்கார்ந்து. எனக்குப் போக்குக் காட்டிக் கொண்டிருந்தாள், அவளுக்குத் தெரியாமல் நானாக வந்தேன், நான் வருவது தெரிந்தால் கோபப்படுவாள், உங்களை அழித்து நான் வாழ்வேனா என்பாள், அழுவாள், எனக்குப் பயம் என்னவென்றால். தப்புத் தவறாக அது போல வாழ்வு வேண்டாம் என்று சத்தியம் கித்தியம் பண்ணி விட்டாள் என்றால்? அப்புறம் என்ன கதி? நான் வாழ்ந்து முடித்தும் விட்டவன், என் மகள் அரும்பு! அவள் மலர்ந்து மணம் பரப்பாமலே கருகி விடக் கூடாது என்பதுதான் என் கவலை!” என்று மனதை அப்படியே கூறினார் அவர்,

“கருகுவானேன்? அதை நான் பார்த்துக் கொள்ளுகிறேன், “ என்று அவருக்கு வாக்குக் கொடுத்தான் சத்யா ,

சற்றுப் பொறுத்து முகம் வாட. “ஆனால் என் விஷயம். மாப்பிள்ளை? “என்று மெல்லக் கேட்டார் சிவகுரு,

சற்று யோசித்துவிட்டு “எங்களுக்குள் ஒளிவு மறைவு இருக்கக் கூடாது, ஆனால். அவசியம் இல்லை என்பதால். இந்த விஷயம் என் தந்தை வரை போகாமல் நான் பார்த்துக் கொள்ளுகிறேன்,” என்றான்

சத்யா,

கண நேர அமைதிக்குப் பின். “விருந்தோம்பலில் குறைவு என்று நினைக்கக் கூடாது, ஆனால். உதி அழுது கொண்டிருப்பதாக நீங்கள் சொன்ன ஞாபகம், அவசியமற்று ஒரு சொட்டுக் கண்ணீர் கூட அவள் சிந்தக் கூடாது என்று எனக்கு ஆசை!” என்றான் சத்யரூபன் கண்ணில் சிரிப்போடு,

“என் ஆசையும் அதுதான் மாப்பிள்ளை!” என்று சிவகுருவும் எழுந்தார்,

பையுள் கையை விட்டு ஒரு சாவியை எடுத்து மருகனிடம் கொடுத்தார், “வீட்டுச் சாவி, வைத்துக் கொள்ளுங்கள், உதயாவின் மனம் இருக்கும் நிலையில். நீங்கள் போய்க் கூப்பிட்டாலும். முதலில் அவள் கதவைத் திறப்பாளோ என்னவோ? அதற்குத்தான் சாவி, நான் ஸ்கேன் சென்டருக்குப் போக வேண்டும், என் வீட்டுக்குப் போய். நீங்கள் என் மகளைச் சமாதானப்படுத்துங்கள், “ என்று கிளம்பினார் அவர்,

சோர்ந்து படுத்துக் கிடந்தாள் உதயா,

தான் செய்வது மடத்தனம் என்று அவளுக்கு நன்றாகவே தெரியும், ஆனால் எழுந்து போய் எதையாவது உண்ண வேண்டும் என்றால் மனதுக்குப் பிடிக்கவே இல்லை,

பேசாமல் இப்படியே படுத்துக் கிடந்து கண்ணீரில் கரைவதுதான் கொஞ்சமேனும் ஆறுதலாகத் தோன்றியது,

தந்தை மட்டும் இல்லை என்றால். அப்படியே கரைந்து மறைந்தும் போயிருப்பாள்,

ஆனால் தன்னோடு சேர்ந்து தந்தையும் கலங்க வேண்டுமா என்றுதான் அவர் வீட்டில் இருக்கும் தருணங்களில். ஏதாவது செய்வது போலக் காட்டிக் கொண்டாள்,

டீவி பார்ப்பது போல! பத்திரிகையில் கிராஸ் வொர்ட் செய்வதாக. கதைப் புத்தகம் படிப்பது போல

,அடுப்படியில் சமையல் செய்வது போலவும்தான்,

இப்படியே எத்தனை நாள் நடக்கும்,?

நல்லவேளையாக கண்ணீரின் காரணமாகக் குரல் இன்னமும் மூக்கடைப்பாகக் காட்டவும். வேலைக்குப் போகத் தேவை இல்லாமல் போயிற்று,

அதுவும் அந்தச் செயின் சூப்பர் மார்க்கெட் ப்ராஜெக்ட் முடிந்து விட்டிருந்ததால். அவள் இப்போது பணிக்குப் போய்த்தான் ஆக வேண்டும் என்கிற நிலையும் இல்லை,

எனவே. தந்தை வீட்டில் இருக்கையில் ஏதாவது ஒரு வகையில் சமாளிப்பதும். அவர் பணிக்குச் சென்றதும் கண்ணீர் வடிப்பதுமாக உதயாவின் நாட்கள் கழிந்துகொண்டு இருந்தன,

அன்றைக்கும் அவள் அறையில் கிடந்து அழுது கொண்டிருந்தவள்தான், வெளிக் கதவில் சாவி திறக்கும் ஒலியில் அவசரமாக எழுந்து அமர்ந்தாள்,

அவளுடைய தந்தை இப்போது எங்கே வீட்டுக்கு வந்தார்? சென்டரில் கணக்கெல்லாம் முடித்துவிட்டு வர இன்னமும் அதிக நேரம் ஆகுமே?

எப்படியோ வந்துவிட்டார் என்பதால் அவருக்குப் போக்குக் காட்டும் விதமாக அவசரமாக முகத்தைத் துடைத்து. ஒரு புத்தகத்தை எடுத்துக்கொண்டு. ஜன்னல் புறமாக முகத்தைத் திருப்பிக்கொண்டு அமர்ந்தாள், தீவிரமாகப் படிப்பது போன்ற பாவனை!

“ஆமாம். அந்த ஒரே பக்கத்தை எவ்வளவு நேரம் படிப்பாய்?”

அந்தக் குரலில் திகைத்துத் திரும்பினால் மெய்யாகவே அவளுடைய ரூபன்!

அவனையே நினைத்துக் கொண்டிருப்பதால் .....ஒரு வேளை ..... ,

கண்களைக் கசக்கி விட்டுக்கொண்டு பார்த்தால். அப்போதும் அவள் அங்கேயேதான் நின்றான்,

நிஜமாகவேதான் வந்திருக்கிறான்,

ஆனாலல் எந்த விதமான நம்பிக்கையும் கொள்ள அஞ்சி. “நீநீங்கள் எப்படி இங்கே .....அதாவது இந்த வீட்டுக்குள் ..... , எப்படி வந்தீர்கள்?” என்று கேட்டாள்,

அதற்குள் அவளது தோற்றத்தைக் கணக்கெடுத்தவன் தலையை லேசாக அசைத்தபடி அவளை மெல்ல நெருங்கினான்,

“சாவி கொண்டு திறந்துதான்மா, அங்கே என் மாமனாரானால். வீட்டில் என்மகள் விலுகிற கண்ணீரில் வீடே முழுகிவிடும் போல இருக்கிறது மாப்பிள்ளை. போய் என் வீட்டைக் காப்பாற்றுங்கள் என்று சொல்லிச் சாவியைக் கொடுத்து அனுப்பினார், மாமனார் சொல் தவறாத மருமகனாக நானும் வந்தேன், தப்பில்லையே? இனி வீடு முழுகாமல்

காப்பாற்றுகிற வேலையைப் பார்க்கலாமா?" என்று கேட்டுக் கைகளை விரித்தான் சத்யரூபன்,

மாமனார்! மருமகன்! சொல்வது அவளுடைய ரூபன்!

ஒரு விம்மலுடன் அவனது கைகளுக்குள் பாய்ந்தவள் அப்படியே அவன் மார்பில் முகம் புதைத்து விம்மினாள்,

சற்று நேரம் அவளது முதுகைத் தடவிக் கொடுத்தவண்ணம் சத்யா பேசாமல் நின்றான்,

பிறகு. "அவசியமற்று நீ ஒரு சொட்டுக் கண்ணீர் கூடச் சிந்த விடமாட்டேன் என்று உன் தந்தையிடம் சொல்லிவிட்டு வந்தேன், ப்ளீஸ். என்னைப் பொய்யனாக்காதே! அத்தோடு. இந்த வீடு முழுகாமல் காப்பாற்றுகிற வேலையைப் பார்க்க வேண்டும் தயவு பண்ணி அதற்குக் கொஞ்சம் உதவி பண்ணம்மா!" என்று அவன் கெஞ்சுதலாகக் கேட்கவும் உதயா தன்னை மீறிச் சிறு நகை புரிந்தாள்,

"ஏய்
சும்மாக் கதை! வீடெல்லாம் ஒன்றும் முழுகாது, அப்பா அப்படிச் சொல்லி இருக்கவும் மாட்டார்," என்று சிணுங்கியவள் உடனே மாறி. "என்ன நடந்தது. ரூபன்? அப்பா எப்படி ..... வந்து எப்படி இப்படியெல்லாம் நடந்தது?" என்று கேட்டாள்,

"பழைய நடிகை ஒருவர் சுந்தராம்பாள் என்று பெயர், "என்ன என்ன என்ன" என்று நிறைய "என்ன" போட்டு ஒரு பாட்டுப் பாடியிருக்கிறாராம், நீ "எப்படி எப்படி" என்பாய் போல? " என்று சிறு கேலி பேசி நிலைமையை இலகுவாக்கிவிட்டு. அவளை உட்கார வைத்துத் தானும் அருகமர்ந்து சத்யரூபன் நடந்தவற்றைச் சொன்னான்,

"அப்பாவா? அப்பாவா?" என்று உதயா அதிசயப்பட்டுப் போனாள்,

"சரிதான், "எப்படி" மாறி. இப்போது "அப்பாவா" ஆகிறதா?" அவன் கிண்டலடிக்க. இருவருக்குமே சிரிப்பு வந்தது,

சிரிப்பினிடையே. "பயங்கரப் பசி உதி, உன் அப்பாவுக்கு மகள் உண்ணவில்லையே என்று வருந்தத் தெரிகிறது, இந்த மருமகன் மட்டும் என்னத்தைத் தின்றிருப்பான் என்று யோசிக்கத் தெரியவில்லை. பார்! வரும் வழியில் கொஞ்சம் வாங்கிவந்தேன், கடைசி இனிப்புக்கு உன் மாம்பழ ஐஸ் வரை, வா, முதலில் ஏதாவது சாப்பிட்டுக் கொண்டே பேசலாம், "என்று அழைத்தான்,

சற்று இலகுவான பேச்சுடன் உண்டு முடித்தபின். பழைய பேச்சைத் தொடர்ந்து. "உண்மையை என்னிடம் சொல்லியிருக்கலாமே.

உதி?" என்று சத்யா அவளிடம் கேட்டான், "இவ்வளவு வேதனைகள் நமக்கு நேர்ந்தே இராதே!" என்றான்,

அவள் முகம் லேசாக வாடியது, "நான் எப்படிச் சொல்லுவேன். ரூபன்? அவருடைய சொந்த மகள் நான், மறுவாழ்வு மையத்திற்குக் கூட்டிப் போய் முழு சிகிச்சையும் முடிகிற வரை கூட இருந்தே பார்த்திருக்கிறேன், மையத்தில் கூட. "அவர் முழுதாகக் குணமடைந்துவிட்டார், இனி யாராவது விரும்பிக் கொடுத்தால் கூட. அதைக் கையால் தொட மாட்டார்," என்று உறுதியாகச் சொன்னார்கள், ஆனாலும். என்றேனும் அவர் தாமதமாக வந்தால். மனம் பதறிப் மையத்தில் சொன்னது போல. அந்தப் பதட்டத்தைக் காட்டிக் கொள்வதில்லை, ஆனாலும். தவிப்பு நேரத்தான் செய்கிறது, எண்ணிப் பாருங்கள். உங்கள் குடும்பத்துக்கு அந்த சந்தேகம் இன்னும் அதிகமாக வராதா? ஒவ்வொரு ஸ்கேன் ரிப்போர்ட்டையும் ஐயத்துடன் நோக்கத் தோன்றாதா?" என்று அவளது பெரும் கவலையை அவனிடம் தெரிவித்தாள்

"தோன்றலாம்," என்று அவனும் ஒத்துக் கொண்டான், "அதுவும் அப்பா. அம்மா மாதிரி தொழிலை உயர்வாக நினைக்கிறவர்களுக்கு நிச்சயமாக ஐயம் தோன்றத்தான் செய்யும், அதனால்தான். வேறு யாருக்கும் இதைத் தெரிவிக்க வேண்டாம் என்று முடிவு செய்திருக்கிறேன்," என்றான் சத்யரூபன்,

"ஆனால் உங்களுக்கு? உங்களுக்கும் சந்தேகம் வரும்தானே?" என்று விடாமல் கேட்டாள் உதயா,

"இல்லை,வராது!" என்றான் அவன் உறுதியாக,

அவள் கேள்வியாய் நோக்கவும் "எப்போது உன் தந்தை அவராகவே முன்வந்து என்னிடம் உண்மை சொன்னாரோ. அப்பொதே அவர் இனி. உனக்கு வேதனையைத் தரக் கூடிய எதையும் ஒருபோதும் செய்ய மாட்டார் என்பது எனக்கு உறுதியாகிவிட்டது,

"அத்தோடு யோசி. உதயா, அவரை நான் நம்பாவிட்டால் என்ன ஆகக் கூடும் என்று எண்ணிப் பார்! அடியோடு நாசம்தானே? அவரது வாழ்வில் நடக்கக் கூடும் என்று நீ அஞ்சிய அதே நாசம்! இவ்வளவு முக்கியமான முடிவை எடுக்கும்போது. உன் அப்பா அதை எண்ணிப் பார்த்திருக்க மாட்டாரா? ஆனாலும் ஏன் சொன்னார்? மிகச் சிறிய வாய்ப்பே ஆனாலும். ஒருவேளை அவரை நான் நம்பினால். மகள் வாழ்வு நன்றாக இருக்குமே என்று யோசித்திருக்கிறார், அதனால் இந்த முயற்சி செய்து பாராமல் விடக் கூடாது என்று முடிவு செய்து என்னிடம்

வந்தார், அப்போதே இனி இவர் தப்பு செய்ய மாட்டார் என்று எனக்கு உறுதியாகிவிட்டது,

“ஆனால் என் அப்பா அம்மாவும் இது போலவே எண்ணுவார்கள் என்று சொல்ல முடியாது, எனவே. இது நம் மூவருக்குள் மட்டுமாக இருக்கட்டும்,” என்று முடித்தான் சத்யா,

“ரூபன். என் பாஸ் பாலன் சாருக்கும் மஞ்சரி மேடத்துக்கும் நடந்த முழுதும் தெரியும், உண்மையில் அவர்களது வற்புறுத்தலின் காரணமாகத்தான் அப்பா மறுவாழ்வு மையத்துக்குச் செல்ல சம்மதித்ததே, அவர் செய்த தவறுக்குப் பிராயச்சித்தம் செய்வதானால். அது மட்டும்தான் என்று சொல்லி அவரை மையத்துக்குப் போகச் செய்தார்கள், அப்பா வேலை செய்த இடத்திலும் பேசி. அவர் மேல் நடவடிக்கை எடுக்காமல் இருக்கச் செய்தார்கள்,

“குடிக்கிற காலத்திலும். அப்பா யாரிடமும் வெறுப்பேற்றும் விதமாகப் பேச மாட்டார், அதனால் மஞ்சரி மேடமே அப்பா வேலை பார்த்த அந்த நிறுவனத்தில் பேசி. அவர்களும் அப்பா மேல் நடவடிக்கை எடுக்காமல் திருந்தி வாழச் சொல்லி அப்பாவை அனுப்பிவிட்டார்கள்,” என்றாள் உதயா,

“ரொம்பவே நல்ல உள்ளங்கள்! அத்தோடு. அவர்கள் இருவருக்கும் உன் மதிப்பும் தெரியும், அதனால் யாரிடமும் இது பற்றி மூச்சு விடக் கூட மாட்டார்கள், அத்தோடு அவர்களது இந்த ப்ராஜெக்ட் பயங்கர வெற்றியாமே! இன்னும் இரண்டு பெரிய கிளையன்ட்கள் கிடைத்திருக்கிறார்களாம், தொழில் வட்டாரத்தில் இரண்டு நாட்களாக இதே பேச்சு! அதனால் இன்னும் நிறையப் பேரை வேலைக்கு அமர்த்தி தொழிலை வளர்த்துக்கொள்ள அவர்களால் இயலும்!

“ரைட்ப்பா, இனி உன்னைப் பார்ப்போம், உனக்கு வீட்டில் சும்மா இருப்பது முடியாது என்றால். என் அப்பாவுக்கு உதவியாக இரு, ஏனென்றால் என் தொழிலை விட்டு மருத்துவ மனைக்குள் உட்கார என்னால் முடியாது, இவ்வளவு வளர்த்துவிட்டு மருத்துவமனையை தங்களுக்குப் பிறகு யாரிடம் ஒப்படைப்பது என்று சும்மாவே புலம்பிக் கொண்டிருக்கிறார்கள், அந்த உதவி அவர்களுக்குச் செய்தாய் என்றால். அப்புறம் நீதான் உலக மகா உத்தம மருமகள் ஆகிவிடுவாய்! அதற்கு மேல் என்ன வேண்டும்?” என்றான் சத்யரூபன் உற்சாகத்தோடு,

உதயாவின் முகத்தில் யோசனை படிந்தது,

“ம்ம்ம்
... , நிஜமாகவே அது போதும் என்கிறீர்களா?” என்று சீரியசாகக் கேட்டாள்,

அவன் உற்சாகத்தின் உச்சியில் இருந்தான், “உத்தம மருமகள் என்று சொன்னேனே, அதிலும் உலக மகா உத்தம மருமகள்! அதை விட வேறு என்ன வேண்டும்?” என்று அவளையே கேட்டான்,

“ஓஹோ! மாமா அத்தையிடம் நல்ல பேர் வாங்கினால் போதும் என்கிறீர்களா?” என்று தெளிவு படுத்திக் கொண்டவள் விஷயத்துக்கு வந்தாள், “அப்படியானால். உங்களுக்கு நல்ல மனைவி தேவையே இல்லையாக்கும்?” என்றாள் குறும்பாக நோக்கி,

அவனும் சட்டென சமாளித்தான் ,”என் விஷயமே ..... , வே
..... , று. கண்மணி, நான்தான் முன்பே சொன்னேனே. நான் காதல் கடலில் தொபுகடீர் என்று விழுந்து. ஒரேயடியாக மூழ்கிப் போனவன், ஏதோ கொஞ்சம் முன்னே பின்னே இருந்தாலும். எப்படியோ சகித்து சமாளித்துக் கொள்வேன்! அப்பாவும் அம்மாவும் பெரியவர்கள் பார்!”

“ஓஹோ!” என்று கண்களை உருட்டினாள் அவள், “ஏதோ முன்னே பின்னே இருந்தாலுமா? அதற்கு மேல் சகித்து சமாளிப்பபது வேறா? இதற்காகவே உங்களுக்கு முன்னேயும் பின்னேயும் நன்றாகக் கொடுக்க வேண்டும்!” என்று கையை ஓங்கிக் காட்டினாள்,

“ஐயோ! காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள்! நான் சொன்னதை நீ சரியாகக் கவனிக்கவில்லை. கண்ணம்மா, கொஞ் .....சம் இவ்வளவூண்டு முன்னே பின்னே என்றுதான் சொன்னேன், ஆனால் நீ இப்படிக் கையை ஓங்கிக்கொண்டு வடபத்திரகாளி போல வருவாய் என்று எனக்குத் தெரியாதே! அடி விழாமல் காப்பாற்ற என் அருமை மாமனார் கூட அருகில் இல்லையே! “ என்று பயந்து நடுங்குவது போல அவன் பாவனை செய்ய. அதற்கு மேல் அடக்க மாட்டாமல் இருவருமே சேர்ந்து நகைக்கலாயினர்!